Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :236 ஆடி 07ஆம் நாள் புதன்கிழமை 22 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## பெண்ணை வெட்டி நகைகள் கொள்ளை

*சுன்னாகத்தில் அதிகாலை சம்பவம்*

கொடிகாமம், ஜூலை 22

சுன்னாகத்தில் வீடு புகுந்த கொள்ளையர் பெண்ணுக்கு கையில் வெட்டி விட்டு நகைகளைக் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. காயமடைந்த 27

## கொரோனா ஒழிப்பில் மேலும் சிக்கல்!

கொழும்பு, ஜூலை 22

கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கையில் இருந்து விலகுகின்றோம் என்று டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் அறிவித்துள்ளனர். கொரோனா 25

## வீதியில் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலி அறுப்பு

கொடிகாமம், ஜூலை 22

யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்துக்கு பின்புறமாகவுள்ள வீதியில் பயணித்து கொண்டிருந்த பெண்ணின் தங்கச் சங்கிலியை கொள்ளையயர் அறுத்துச் சென்றுள்ளனர் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. அந்தப் பெண் 25

## 16 பவுண் நகைகள் மூளாயில் கொள்ளை

வாள்முனையில் அச்சுறுத்தி கொள்ளையர்கள் அட்டூழியம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

மூளாயில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் வாள் முனையில் 16 பவுண் நகையும், இரண்டாயிரம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளன. அதிகாலை வேளை வீட்டுக்குள் புகுந்த 27

## கொக்குவிலில் திருட்டு

கொடிகாமம், ஜூலை 22

கொக்குவிலில் நேற்று அதிகாலை வீடு புகுந்த திருடர்கள் 3 லட்சம் ரூபா பணத்தையும் ஆபரணங்களை 26

## ஒரே குடும்பத்தில் மூவருக்கு தொற்று

கொழும்பு, ஜூலை 22

வென்னப்புவ பிரதேசத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 25

# தமிழர் அநாதைகள் அல்லர்; சர்வதேச பலம் எமக்குண்டு!

மஹிந்த அணி, பௌத்த தேரர்களுக்கு சம்பந்தன் காட்டமான பதில்



கொழும்பு, ஜூலை 22

தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தைத் தோற்கடித்தோம். அவர்கள் அநாதைகள்; அவர்கள் அடிமைகள் என்ற எண்ணத்துடன் கருத்துக்கள் வெளியிடுவதை ஆளுந்தரப்பினரும், கடும்போக்குவாத பௌத்த தேரர்களும் நிறுத்த வேண்டும். 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் சர்வதேசப் பலத்துடன் தமிழர்கள் இருக்கின்றார்கள் என்பதை எம்மை விமர்சிப்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். 27

## ஆசிரியையின் கைப்பை திருட்டு

*ஏ.ரி.எம். மூலமாகவும் பணம் அபேஸ்*

யாழ்ப்பாணம், ஜூலை 22

வங்கியிலிருந்து திரும்பிய முன்பள்ளி ஆசிரியையின் கைப்பையைப் பறித்த கொள்ளையர், அதற்குள் 27

## ரயிலுடன் மோதி 17 மாடுகள் பலி

கொடிகாமம், ஜூலை 22

தென்மராட்சி மிருசுவில் பகுதியில் ரயிலுடன் மோதுண்டு 17 மாடுகள் பரிதாபகரமாக உயிரிழந்தன. 25

## யாழ்ப்பாணம் வருகின்றார் சமல் ராஜபக்ச?

யாழ்ப்பாணம், ஜூலை 22

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. 27

## 'ஸ்மார்ட்' கோபுரங்களை அமைக்கத் தடையில்லை

*மனுவை தள்ளுபடி செய்தது மன்று*

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஸ்மார்ட் கோபுரங்கள் அமைப்பதற்கு தடை விதிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்தது. அதனால் ஸ்மார்ட் கோபுரங்களை அமைப்பதற்கு இருந்த தடை நீங்கியது என்று 26

## தேர்தல் விதிமுறை மீறல்: கைதாகி அரை மணி நேரத்தில் விடுவிப்பு

நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

தேர்தல் விதிமுறை மீறல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவர் அரை மணி நேரத்தில் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நெல்லியடிப் பொலிஸில் நேற்று இடம்பெற்றுள்ளது. நெல்லியடிப் பொலிஸாரின் நடவடிக்கை காரணமாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் இடர் 27

## சுகாதார நடைமுறைகளுடன் எத்தனைபேரும் வழிபடலாம்

*நல்லூர் கந்தன் திருவிழா தொடர்பில் யாழ்.மாநகர சபை தீர்மானம்*

யாழ்ப்பாணம், ஜூலை 22

பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழாவில், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி எத்தனை பேரும் சென்று வழிபடமுடியும் என்று யாழ்ப்பாண மாநகர சபையின் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தனது தலைமையில் மாநகர ஆணையார் த.ஜெயசீலனின் பங்குபற்றுதலோடு சபையின் உறுப்பினர்களும் கலந்துகொண்டு இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டு மேற் 27

## இராணுவத்தின் தாளத்துக்கு ஆடுகிறது பல்கலை. பேரவை

*குருபரன் மீதான நடவடிக்கைகளுக்கு மாணவர் ஒன்றியம் கடும் அதிருப்தி*

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பேரவை அரச, இராணுவ பரிந்துரைகளுக்கும் புலனாய்வுக் கட்டமைப்புக்களுக்கும் ஏற்ப செயற்படுகின்றமை மன வருத்தத்தைத் தருகின்றது - என்று தெரிவித்துள்ளது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் அனைத்துப்பீட மாணவர் ஒன்றியம். 26

## யாழ்ப்பாணத்திலிருந்து அதிக முறைப்பாடுகள்

மொஹமட், அச்சுதன் கண்காணிக்க வருகை

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தேர்தல்கள் ஆணைக்குழு தலைமையகத்துக்கு அதிகளவிலானமுறைப்பாடுகள் தொடர்ச்சியாகக் கிடைக்கப் 27

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுனின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
அதிகபட்ச இரகசியத் தன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி

# மீள் எழுச்சிகொள்ளும் காலம் உருவாகின்றது

*ஜனநாயகப் போராளிகள் கட்சி சுட்டிக்காட்டு*

முல்லைத்தீவு, ஜூலை 22
தமிழர்களின் விடுதலைப்போராட்டம் மற்றும் தமிழ்த் தேசிய அரசியல் ஆகிய இரண்டின் ஒருமைப்பாடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பில் தங்கி இருந்தது. தமிழ் மக்கள் தங்கள் அவலங்களுக்கு விடைகொடுத்து மீள் எழுச்சி கொள்ளும் காலம் உருவாகிநிற்கின்றது. ஆயுதப்போராட்டத்தின் வெற்றி இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியில் தங்கி நிற்கின்றது என்பதையே காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் தெரிவித்தார்.

ஜனநாயக போராளிகள் கட்சியின் முல்லைத்தீவு கைவேலியிலுள்ள தலைமைச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தக் காலம் பொன்னான காலம். இந்தக் காலத்தில் எமது தேசிய ஒருமைப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக தாயகப் பகுதியில் நிறுவிக்கொள்வதற்கான தீர்க்கமான சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. ஆயுதப்போராட்டம் ஊடாக அடைந்த அனைத்து வெற்றிகளும் இன்று அரசியல் ரீதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிமூலம் நிறுவிக் கொள்ளவேண்டிய தேவை உள்ளது.

கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. இதன் சிறப்பம்சமாக தமிழ் மக்களுக்கான நிதந்தரத் தீர்வு தொடர்பில் 2002 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்னெடுக்கப்பட்ட ஒஸ்லோவில் நிறைவேற்றப்பட்ட சுயாட்சி அலகின் அடிப்படையில் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாங்கள் நினைத்தபடி தமிழ்த் தேசிய அரசியலை கொண்டுசெல்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளால் தமிழ் மக்களுக்கான அரசியல் ரீதியான சுயாட்சி அலகு, உள்ளூர் சமஸ்டி முறை ஒஸ்லோவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மற்றும் அதற்கு அமைவாக அந்த வழியில் தமிழ் மக்களுக்கான தீர்வு என்ற வரைபு இன்று வெளியிடப்பட்டுள்ளது. இது நாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமாக இருக்கின்றது.

ஓர் இடைக்கால தன்னாட்சி வரைபு ஊடாக கூட்டுறவு உள்ளூராட்சிக் கட்டமைப்பு, வேலைவாய்ப்பு, கல்வி, கிராம உட்கட்டமைப்பு தொடர்பான முக்கிய விடயங்களை முன்னால் போராளிகளின் துன்பகரமான நிலையிலிருந்து மீட்டு எடுக்கவேண்டும் என்பது தொடர்பிலும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடங்கியுள்ள விடயங்களை முழுமையாக எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்காக நாங்கள் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முழுமையாக எமது ஆணையை வழங்க வேண்டும். கூட்டமைப்பையே பெரும்பான்மைச் சக்தியாக நாடாளுமன்றுக்கு அனுப்பவேண்டும். அதன் ஊடாகத்தான் முன்னேற்றகரமாகச் செல்லமுடியும்.

எதிர்காலத்தில் எமது மக்கள் தொடர்ந்தும் அவலநிலைக்குள் தள்ளப்படாமல் சுமுகமான, சமாதானமான, நிரந்தரமான தீர்வுத்திட்டத்தைப் பெற்று நிம்மதியாக தாயகப் பகுதியில் வாழவேண்டும் என்பதற்காக நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும். என்றார்.

**வடக்கு தேர்தல் நிலை**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இலக்கு வைத்தே இவர்களின் அரசியல் காணப்படுகின்றது. இவர்கள் தமிழ் மக்களுக்கு என்ன செய்தார்கள் இவர்கள் யார்? என்பதை இவர்கள் அடையாளப்படுத்தவில்லை. தென்னிலங்கைக் கட்சிகளால் பலர் நேரடியாகக் களம் இறக்கப்பட்டுள்ளனர். இராணுவத் தளபதிகூட போட்டியிடுகின்றார். தமிழ்த் தேசத்தைச் சிதைக்கும் தென்னிலங்கையின் நடவடிக்கைக்கு தமிழ் மக்கள் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கக்கூடாது. என்று மேலும் தெரிவித்தார். (த-19)

# சமஷ்டிக்கும் தமிழீழத்துக்கும் வித்தியாசம் தெரியாத மஹிந்த

*சாடுகின்றார் ஈ.சரவணபவன்*



**யாழ்ப்பாணம், ஜூலை 22**

**தமிழ் மக்கள் நியாயமான கோரிக்கையை தெற்கில் உள்ளவர்கள் அதை திரிவுபடுத்துகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை வெளியாகிச் சில நாள்களிலேயே தெற்கில் இனவாதக் கருத்துக்கள் வலுப்பெற்றுள்ளன. மீண்டும் தமிழீழம் கேட்கின்றோம் என்று பரப்புரைப்படுத்துகின்றனர். அவர்கள் பதவியைப் பிடிப்பதற்காக எதையும் செய்யத் தயங்காதவர்கள்.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன்.

யாழ்ப்பாணம், ஆவரங்கால் பகுதியில் நடந்த மக்கள் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான சமஸ்டியை இந்த நாட்டின் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தமிழீழம் என்பதற்குச் சமப்படுத்தி கருத்துத் தெரிவித்துள்ளார். ஒரு பொறுப்பான பதவியில் உள்ளவர், இவ்வாறு மக்கள் மத்தியில் தவறான கருத்துருவாக்கத்தைச் செய்வது அழகானதல்ல. அவர்கள் தாங்கள் ஆட்சிக்கு வருவதற்காக பெரும்பான்மை மக்கள் மத்தியில் இனத்துவேசத்தை விதைக்கின்றனர். அமைதிக்கும், தர்மத்துக்கும் மறுவடிவமாக இருக்க வேண்டிய பௌத்த தேரர்கள் தெற்கில் இரத்தம் வெள்ளம் பாயும் என்கின்றனர். இந்த நிலைமை முழு நாட்டுக்குமே கேடானது.

ராஜபக்சவினர் பதவிக்காக எதையும் செய்யும் நிலையில் இருக்கின்றனர். பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது அவர்களின் இலக்காக இருக்கின்றது. மக்கள் மத்தியில் இனத்துவேசத்தையும், தேவையற்ற அச்சத்தையும் ஏற்படுத்தி அதில் குளிர்காயலாம் என்று எண்ணுகின்றனர். வடக்கில் இரத்தவெள்ளம் பாயும் என்று அவர்கள் கூறுவதை சாதாரணமாகவும் நினைத்துவிட முடியாது. ஏனெனில் கடந்த காலங்களில் அவ்வாறான் கொடூரத்தை அவர்கள் செய்திருக்கின்றனர்.

அவர்கள் பசப்பு வார்த்தைகளைக் கூறி தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று நினைக்கின்றனர். அவர்களுக்கு தமிழ் பிரதேசத்தில் இருந்து ஒருவரையாவது நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவர வேண்டிய தேவை இருக்கின்றது. அப்போதுதான் தமிழ் மக்கள் தங்களை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என்று சர்வதேசத்திடம் கூறமுடியும்.

ராஜபக்சவினர் ஆட்சிக்கு வந்ததும், நாட்டின் நிலைமை மாறி வருகின்றது. தமிழ் மக்கள் மீதான இறுக்கம் மெல்ல மெல்ல அதிகரிக்கின்றது. நாங்கள் கேள்வி கேட்க முடியாத நிலைமை தோற்றம் பெறுகின்றது. மீண்டும் தமிழ் மக்கள் மீது அடக்குமுறைகளை ஏவிவிடுகின்றனர். தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைக் கோரும்போது இனவாதத்தைக் கக்குகின்றனர். இவ்வாறானவர்களுக்குப் பெரும்பான்மை கிடைத்தால் என்ன நடக்கும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். (எ)

# தவிசாளரைத் தாக்க வந்த சுதந்திரக்கட்சி உறுப்பினர்

*சபை அமர்வு ஒத்திவைப்பு*

வலி. தெற்குப் பிரதேச சபையின் சபை அமர்வின்போது, சபையின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் றவீந்திரன் றதீஸ்வரன் தன்னைத் தாக்க வந்தார் என்று தவிசாளர் கருணாகரன் தர்சன் குற்றஞ்சாட்டினார்.

அவரின் உறுப்பினரின் அத்தகைய நடத்தையால் சபை அமர்வு நாளை (இன்று) வரை ஒத்திவைக்கப்பட்டது என்றும் தவிசாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சபையின் அமர்வு சபையில் நேற்று நடைபெற்றது. வலி. தெற்குப் பிரதேச சபையின் ஆளுகைப் பகுதியில் அபிவிருத்தி தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் றதீஸ்வரன் கேள்வியெழுப்பினார். அதற்குப் பதிலளித்துக்கொண்டிருந்தபோதே, அவர் எழுந்து என்னை தாக்க வந்தார். அவ்ரை வெளியேறுமாறு கூறினேன். அவர் வேளியேற மறுத்தார். அதனால் நான் உட்பட கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சகலரும் சபையிலிருந்து வெளியேறினோம்.

கடந்த வாரமும் மயிலங்காடு சிறிமுருகன் குறுக்குத் தெரு வீதி திருத்தம் தொடர்பில் உரிமை கோரினார். அதற்கு நான், இது மாவட்டச் செயலக ஏற்பாட்டில் பிரதேச செயலகம் ஊடாக பிரதேச சபைக்கு நிதி கிடைத்து சபையே சீரமைக்கின்றது என்று கூறினேன். ஆனால் அவர் அதை ஏற்பதாக இல்லை. ஒருமையில் கதைத்தவாறு கீழ்த்தரமாக நடந்துகொண்டார்.

இன்றும் சபையில் அவர் இவ்வாறு நடந்துகொண்டார்-என்றார். (த)

# சுவரொட்டி ஒட்ட எதிர்ப்பு தெரிவித்தோர் மீது தாக்கு

*சிறிதரனின் ஆதரவாளர்கள் கைது*

யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போதைய வேட்பாளருமான சி.சிறிதரனின் வாகனச் சாரதி உட்பட மூன்று பேர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வன்முறையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். இவர்களின் தாக்குதலில் பெண் ஒருவர் காயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.


உருத்திரபுரம் பகுதியில் சுவரெட்டி ஒட்டும்போது, வீட்டு உரிமையாளர் மதில் சுவரில் சுவரொட்டி ஒட்ட எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து ஏற்பட்ட தர்க்கத்தை அடுத்து, சந்தேகநபர்கள் வீடொன்றுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படு கின்றது. வீட்டிலிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதுடன், பொருள்களும் சேதமாக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அவர்கள் சந்தேகநபர்கள் மூவரையும் கைது செய்துள்ளனர். இவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# நாடாளுமன்றத் தேர்தல் - 2020



## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



### எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!

**எங்கள் தேசத்தில் இளைஞர் யுவதிகளை ஓய்வின்றி உழைக்கும் கரங்களாக மாற்றுவதற்கான திட்டங்கள்**

- கடந்த 20 ஆண்டுகளாக எமது பிரதேசம் எந்த அபிவிருத்தியும் இல்லாத பிரதேசமாகவே காணப்படுகின்றது.
- இங்கே பல தொழிற்சாலைகளை நிறுவ வேண்டிய தேவை இருக்கின்றது.
- எமது தேசத்தில் இருக்கும் விவசாய பூமிகள் யாவும் வளம்பெறும் விவசாயப் பூமியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.
- எமது பிரதேசத்தில் இருக்கும் கடல் வளத்தை முழுமையாக நாங்கள் பாவனைக்கு பயன்படுத்தும் திட்டங்களை வகுத்தல் வேண்டும்.
- பனை வளத்தில் இருந்து உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலைகளை ஒவ்வொரு தொகுதி ரீதியாக நிர்மாணிப்பதன் மூலம் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கமுடியும்.
- விவசாயப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் குளிரூட்டப்பட்ட களஞ்சிய சாலைகளை ஒவ்வொரு தொகுதி ரீதியாக நிர்மாணிக்கப்படவேண்டும்.
- சிறிய வெங்காயத்தின் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்களால் சிறிய வெங்காயத்தின் இறக்குமதி வரியாக 220 ரூபாவை விதித்துள்ளார். இதனைக் கருத்தில் கொண்டு. உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
- போரால் பாதிக்கப்பட்ட பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நிரந்தர வருமானம் பெறும் திட்டங்களை அமுல்படுத்துதல்
- பின்னடைந்திருக்கும் வடமாகாணத்தின் கல்வித் தராதரத்தை மேம்படுத்து வதற்குரிய சகல வகையான வழிமுறைகளையும் ஆராய்ந்து நடைமுறைப் படுத்துதல்.
- எதிர்காலத்தின் அரசியல். பொருளாதார நடவடிக்கைகளுக்கு இளைய தலைமுறையினரையும் இணைத்துக் கொள்வதன்மூலம் அறிவும் ஆற்றலும் மிக்க புதிய தலைமைத்துவத்தை உருவாக்குதல்.
- **ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆளப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் வடமாகாணத்தில் பாரிய அபி விருத்தியை மேற்கொண்டு, வேலையில்லாப் பிரச்சினையை முடிவுக் குக் கொண்டுவருவோம் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.**

**மேற்கூறிய விடயங்களை துரித கதியில் நடைமுறைப்படுத்துவதற்கு மக்களாகிய நீங்கள் உங்கள் வாக்குகளை எங்கள் கை சின்னத்துக்கும் இலக்கம் 5 இற்கும் புள்ளடி இடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.**

**" உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்! "**

# பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)

தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.

5

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinnan05

**முள்ளிவாய்க்கால் உண்மைகள் யாவும் அம்பலத்திற்கு....**

# சஜித் பிரேமதாஸ நாட்டை இரண்டாகப் பிரித்துவிடுவார்!

*கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்துடன் அவரின் கொள்கை ஒத்துபோகிறது என்கிறார் மஹிந்த*

கொழும்பு, ஜூலை 22
சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் தேர்தல் விஞ்ஞாபனங்களுக்கிடையில் ஒருமித்த பண்புகள் காணப்படுகின்றன. பழமையான கட்சியை இரண்டாக உடைத்த சஜித், நாளை நாட்டை இரண்டாகப் பிரிக்ககூட பின்நிற்கமாட்டார் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின்கீழ் கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

“ரணசிங்க பிரேமதாஸ யுகத்தில் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அச்சமான சூழ்நிலை நிலவியது. இவற்றை மறந்துவிட்டு, தந்தையின் வழியில் பயணிப்பேன் என சஜித் பிரேமதாச இன்று கூறுகிறார். ஆனால், பிரேமதாச யுகம் எப்படி இருக்கும் என்பது மக்களுக்கு தெரியும்.

சஜித் பிரேமதாஸ அம்பாந்தோட்டையிலேயே கடந்த காலங்களில் போட்டியிட்டார். இதன்போது அம்பாந்தோட்டை மாவட்டத்தை விட்டு செல்லமாட்டேன் என உறுதியளித்தார். ஆனால், அவருக்காக இறங்கி வேலைசெய்தவர்களையெல்லாம் அரசியல் அநாதைகளாக்கிவிட்டு கொழும்புக்கு பாய்ந்துள்ளார். எனவே, கொழும்பிலிருந்து பாய்வதற்கும் நெடுநாள் எடுக்காது என்றே தோணுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியானது பழமையான அரசியல் கட்சியாகும். இதற்கு முன்னரும் அந்தக்கட்சியில் பிளவுகள் ஏற்பட்டிருந்தன. ஆனால், மீள கட்டியெழுப்பமுடியாத வகையில் கட்சியை உடைத்தது சஜித்தான். இவ்வாறு கட்சியை உடைத்த அவர், நாளை நாட்டை இரண்டாக பிரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தால்கூட அதில் புதுமைப்படுவதற்கு ஒன்றுமிருக்காது.

சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கும், கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்குமிடையில் ஒருமித்த தன்மை காணப்படுகின்றது. இது தொடர்பிலும் விழிப்பாக இருக்கவேண்டும்.” என்றார். (கு-44)




## சபையில் சரவணபவன்

ரணில் விக்கிரமவிங்க ஒரு சூழ்ச்சிகரமான மனிதர். அவர் கட்சிகளை பிளவடையச்செய்வதில் மிகவும் கெட்டிக்காரர். சர்வதேசமே வியப்படையும் வகையில் இயங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையே சிதைத்த கைங்கரியத்தைச் செய்தவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்களிடமிருந்து பிரிக்கும் சூழ்ச்சியிலும் இறங்கியுள்ளார். முதலில் வாக்குறுதிகளை வாரி வழங்குவார். நாங்களும் பிரதமர்தானே உறுதியளிக்கின்றார் என எங்கள் மக்களுக்கு அறிவிக்கின்றோம். பின்னர் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் விட்டு விட்டு மக்கள் மத்தியில் பிழையான அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதில் மிக மிகச் சிறப்பாகச் செயற்படுபவர். இதேபோன்றுதான் கைதிகள் விடுதலை தொடர்பாக காலக்கெடு தந்தார். அதுவும் நடக்கவில்லை.

வவுனியாவுக்கு தமிழர் ஒருவரையே நியமிக்க வேண்டும் என்ற கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டவர். பின் கதவால் சிங்களவர் ஒருவரையே அரச அதிபராக்கிய கெட்டிக்காரர்.

வடக்கு முதல்வருக்கும் சட்டத்தரணி சுமந்திரனுக்கும் வார்த்தைப் போர் நடக்கிறது. இருவருமே நீதித்துறை சார்ந்தவர்கள். அரசியலுக்குப் புதியவர்கள். சட்டத்தை மட்டும் வைத்துக்கொண்டு அரசியல் நடத்த முடியாது. இருவருக்கும் அது புரிய வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாகத்தான் புளட், ரெலோ போன்ற கட்சிகள் தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானத்துடன் ஒத்துழைத்து செயற்படுகின்றனர். ஆனால் சுரேஷ் பிரேமச்சந்திரன் குழப்பகாரராக இருக்கின்றார். ஏதாவது ஒரு முடிவு எடுத்தால் அல்லது ஏதாவது சந்திப்புக்கு இருவர் சென்றால் பகிரங்கமாகவே போர்க் கொடி தூக்கிவிடுவார். இதுதான் பிரச்சினைக்குக் காரணமாக உள்ளது.

(இவருடைய போக்கினால் தான் விக்கின் அணியிலிருந்த கஜேந்திரகுமார் வெளியேறியதாகவும் கூறப்படுகிறது)

டக்ளஸ் தேவானந்தாவின் உடல் முழுக்க பொய். வாயைத் திறந்தால் மெய் பேசத் தெரியாது. தூக்கத்திலும் கூட சப்ரா நிதி நிறுவனம் பற்றித்தான் உழலுகின்றாராம். அந்த நிறுவனம் என்னுடையதல்ல என்பது டக்ளஸ் தேவானந்தாவுக்கு நன்றாகவே தெரியும். ஆனால் அரசியல் காழ்ப்புணர்ச்சியால் வசைபாடுகின்றார்.

ஊடகவியலாளர் நிமலராஜனை கொலைசெய்தது டக்ளஸின் ஆட்கள்தான். இதற்கான ஆதாரங்கள் சிக்கி உள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிவடைந்து விடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

*(குறிப்பு– இந்தத் தகவல்கள் 2015.11.29 அன்று தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டது. அன்று அவருடைய தீர்க்க தரிசனமான சந்தேகம் இன்று உறுதியாகிவிட்டது. கூட்டமைப்பு பிரிந்துவிட்டது.)*

இது கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்




## ‘பிற்பொக்கட்’காரர்களுக்கு சமமானதுதான் ஐ.தே.க.!

*பிரதமர் மஹிந்த பரிகாசம்*

கொழும்பு, ஜூலை 22
நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு சொந்தமான அரச சொத்துக்களை வெளிநாட்டுக்கு விற்பனை செய்த ஐக்கிய தேசிய கட்சி அரசு ‘பிற்பொக்கட்’காரர்களுக்கு சமமானது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

நடைபெறவுள்ள தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி அதிகாரத்தை கேட்பது நாட்டில் எஞ்சியுள்ள வளங்களையும் விற்பனை செய்வதற்கே என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

குண்டசாலை, பலகொல்லவில் நேற்று நடைபெற்ற சந்திப்பொன்றின்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறிகொத்தவை கைப்பற்றுவது மாத்திரமே ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றின் முக்கிய குறிக்கோளாக காணப்படுகின்றது.

அவர்களுக்கு நாட்டை பாதுகாப்பதற்கோ, அபிவிருத்தி செய்வதற்கோ எவ்வித தேவையும் இல்லை.

எனவே, மொட்டுடன் இணைந்து நாட்டை பாதுகாப்பதற்கும், நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் ஒன்றிணையுமாறு ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

யாருடைய தேசதுரோக நிபந்தனைகளுக்கும் அடிபணியாது பலம் வாய்ந்த அரசு ஒன்றை உருவாக்க வேண்டுமாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் அவசியம். நாட்டுக்காக மொட்டுக் கட்சியை ஆட்சியில் இருத்துவது மக்களின் கடமை என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

அனைத்து இனத்தவர்களுக்கும் வாழக்கூடிய விதத்தில் ஒன்றிணைந்த நாடொன்றை உருவாக்கக் கூடிய ஒரே கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மாத்திரமே என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (கு)

## வவுனியாவில் காற்றுடன் மழை 16 வீடுகள் சேதம்: 7 பேர் பாதிப்பு

வவுனியா, ஜூலை 22
வவுனியாவில் காற்றுடன் கூடிய மழை காரணமாக 16 வீடுகள் சேதமடைந்துள்ளன. 7 சிறு தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வவுனியா மாவட்டச் செயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் நேற்று மாலை கடும் காற்றுடன் கூடிய மழை பெய்தது. இதனால் பரவலாக பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அந்தவகையில், வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 13 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 5 சிறுதொழில் முயற்சியாளர்களும் பாதிப்படைந்துள்ளனர்.

வவுனியா பிரதேச செயலக பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. ஒரு சிறு தொழில் முயற்சியாளர் பாதிப்படைந்துள்ளார்.

வவுனியா வடக்கில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 29 பேர் பாதிப்படைந்துள்ளனர். மரம் முறிந்து வீழ்ந்ததில் குழந்தை ஒன்று நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். இதில் அகப்பட்ட மூவர் காயமடைந்துள்ளனர். இந்தப் பகுதியில் 6 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. ஒரு சிறு தொழில் முயற்சியாளர் பாதிப்படைந்துள்ளார். என்று மாவட்டச் செயலகத்தினர் தெரிவித்தனர். (கு-18)

## உடுவில் செயலகத்தில் ஆடிப்பிறப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 22
தமிழர்களின் பாரம்பரிய கலாசார விழுமியங்களில் ஒன்றான ஆடிப் பிறப்பு விழா உடுவில் பிரதேச செயலகத்தில் இன்று புதன்கிழமை பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பண்பாட்டலுவல்கள் மற்றும் கலாசார திணைக்களத்தால் வருடந்தோறும் பிரதேச செயலகப் பிரிவு ரீதியாக ஆடிப்பிறப்பு விழா கொண்டாடப்பட்டு வரும் நிலையில், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட்- 19 வைரஸ் தாக்கம் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விழாக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் கொவிட் 19 சுகாதார பாதுகாப்பு நடைமுறையுடன் ஆடிக்கூழ், ஆடிக்கொழுக்கட்டையுடன் மட்டு ப்படுத்தப்பட்ட அளவில் ஆடிப்பிறப்பு விழா கொண்டாடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# புதிய அரசு அமையும்போது பாதுகாப்புச் சட்டம் மாற்றம்

*பீதி கிளப்புகிறார் பீரிஸ்*

**கொழும்பு, ஜூலை 22**

**பொதுத்தேர்தலின் பின்னர் அமைக்கப்படும் புதிய அரசின் ஆட்சியில், அடிப்படைவாதத்தை நாட்டிலிருந்து முழுமையாக இல்லா தொழித்து, தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தி, பாதுகாப்புசார் சட்டம் திருத் தப்பட்டு புதிய சட்டம் உருவாக்கப்படும் இவ்வாறு தெரிவித்தார் பொது மக்கள் முன்னணியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ்.**

பொதுமக்கள் முன்னணியின் காரி யாலயத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவின் சுபீட்சமான எதிர்கால கொள்கையினை செயற்படுத்தும் வகையில் பலமான நாடாளுமன் றம் தோற்றம்பெற வேண்டும் என் பதில் பெரும்பாலான மக்கள் அதி களவில் அக்கறை கொண்டுள்ளார் கள். நிறைவேற்றுத் துறையும், சட் டத்துறையும் முரண்பட்டால் ஏற்ப டும் விளைவுகள் குறித்த அனுப வம் மக்களுக்கு உண்டு. ஆகவே மீண்டும் அந்தத் தவறை மக்கள் செய்யமாட்டார்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தின் முறை யற்ற செயற்பாடுகளினால் ஏற்பட் டுள்ள அரசமைப்புசார் மற்றும் பொதுப் பிரச்சினைகளுக்கு புதிய அரசாங்கத்தில் தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதற்காகவே மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைக் கோருகிறோம். காலம் தாழ்த்தப்பட்டுள்ள மாகாண சபை தேர்தலை இவ்வருடத்திற்குள் நடத்த சாதகமான தேர்தல் முறை மையை உருவாக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மைக் காரணி இதுவரையில் அறியப்படவில்லை. தேசிய பாது காப்பு பலவீனமடைந்ததால் அடிப் படைவாதம் மீண்டும் நாட்டில் தலைத்தூக்கியது. தேசிய பாதுகாப் பைப் பலப்படுத்த தற்போது நடை முறையில் உள்ள பாதுகாப்பு சார் சட்டங்கள் திருத்தம் செய்யப்பட்டு தேவைக்கேற்ப புதிய சட்டங்கள் உருவாக்கப்படும்.

நல்லாட்சி அரசாங்கத்தினால் ஏற்ப டுத்தப்பட்ட அரசமைப்பின் 17 மற் றும் 19ஆவது திருத்தங்களில் உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஒருதலைப் பட்சமாகவே செயற்படுகின்றன என்பதற்கு கடந்த காலங்களில் இடம்பெற்ற பல சம்பவங்கள் சிறந்த எடுத்துக் காட்டுகளாக அமைந்துள்ளன. ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பொதுத்தேர்தலில் அரசியல்வாதிக ளுக்கு ஆதரவாக மேடையேறுகி றார்கள்.

உயர் அதிகாரிகளை நியமிக்கும் அரசமைப்புப் பேரவையின் உறுப் பினர்கள் அரசியல் நோக்கங் களை அடிப்படையாகக் கொண் டுள்ளார்கள். தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பொதுமக்கள் முன்ன ணிக்கு வாக்களிக்க வேண்டாம் எனக் குறிப்பிடுகிறார். ஆகவே இவர்களின் செயற்பாடுகளினால் ஆணைக்குழுக்களின் சுயாதீனத் தன்மை கேள்விக்கு உள்ளாக்கப் பட்டுள்ளது. உயர் அதிகாரிகளை பதவிக்கு நியமிக்கும் அதிகாரம் புதிய அரசாங்கத்தில் அரசமைப் பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங் கப்படும் - என் றார். (ம)



## நாட்டின் அபிவிருத்தி தொடர்பில் கூடுதல் அக்கறை காட்டப்படும்!

*நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்*

கொழும்பு, ஜூலை 22

கொரோனா வைரஸ் பர வலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுவரும் அதேவேளை யில், நாட்டின் வளர்ச்சி நடவடிக்கைகளும் தொடர்ந்தும் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன என்று நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்றுமுன்தி னம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் நாமல் ராஜபக்ச மேலும் தெரிவித்ததாவது:

மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்த ஆட்சியை மைத் திரி பா்ல சிறிசேனவிடம் ஒப்படைத்தபோது, உல கின் மிக வேகமாக வளர்ந்துவரும் நாடாக இருந்த இலங்கை பலவீ னமான பொருளாதாரம் கொண்ட நாடாக மாறி யது. எனவேதான் கடந்த 5 ஆண்டுகால அழி வுக்குப் பின்னர் நாடு அபிவிருத்தி செய்யப்பட வேண் டும் என்று மக் கள் கருதுகின்றனர். அத்தோடு பொருளாதார ரீதியாக கடும் தாக் கத்தை நாடு எதிர் கொண்ட நேரத்திலேயே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பதவியேற்றார் - என்றார்.

(ம)

# கோத்தாவுடன் இணைந்து மலையகத்தில் அபிவிருத்தி

*நம்பிக்கையூட்டுகின்றார் முன்னாள் வீரர் முரளி*

கொழும்பு, ஜூலை 22

மலையக இளைஞர்களின் கல்வி மட் டத்தை மேம்படுத்த வேண்டும். சுய தொழில் வாய்ப்புகளையும் இங்கு உருவாக்க வேண்டும், அத்துடன் மலையக இளைஞர்களின் விளை யாட்டுத் துறை ஆர்வத்தை மேலும் அதிகரிக்க சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். இவை அனைத் தையும் ஜனாதிபதி கோத்தாபயவுடன் இணைந்து பேசிப் பெற்றுத்தருவேன் என்று தெரிவித்தார் இலங்கை கிரிக் கெட் அணியின் முன்னாள் வீரர் முர ளிதரன்.

நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத் தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் தமக்கான பிரதி நிதித்து வத்தை நாடாளுமன்றத்திற்கு அனுப் பினால் மட்டுமே அர சாங்கத்துடன் தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து பேச முடியும். ஜனாதிபதியை இருபது ஆண்டுகளாக எனக்குத் தெரியும். அவரால் எமக்கான பிரச்சினைகளை தீர்க்க முடியும். இதுவரை அரசாங்கம் அமைத்தவர்களால் தமிழ் மக்களுக்கு என்ன நன்மை கிடைத்தது? நான் தமி ழனாக இலங்கை கிரிக்கெட்டில் இது வரை காலமாக செயற்பட்டுள்ளேன். ஆனால் நான் தமிழன் அல்லன் என்ற பரப்புரைகூட முன்னெடுக்கப்பட்டது. அதேபோன்று பல வதந்திகள் தமிழர் கள் மத்தியில் பரப்பப்படுகின்றன. அவற்றை தமிழர்கள் நம்ப வேண் டாம்.

நான் கடந்த கால ஆட்சியாளர்களை விமர்சிக்கவில்லை, ஆனால் பல சந்தர்ப் பங்களில் தமிழர்களுக்கு எதனையும் செய்ய எவரும் முன்வரவில்லை. மலையக மக்களுக்கு இந்திய நிதி உத வியில் வீட்டுத்திட்டம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டது, ஆனால் இன்றுவரை வீடுகள் கிடைக்கவில்லை, அதனை பெரு மையாக சில அரசியல் வாதிகளே கூறு கின்றனர். வடக்கு தலைமைகள் போன்று மலையகத் தலைமைகள் செயற்படுவதில்லை- என்றார்.

(ம)



நல்லாட்சி ஆட்சியின்போது

# ஏமாற்றப்பட்ட சிறுபான்மையினர்

## நஸீர் அஹமட் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு,ஜுலை 22

**நல்லாட்சி என்ற நாமத்தோடு வந்தவர்கள், சிறுபான்மை யினருக்குப் பொல்லாப்பாக இருந்து விட்டுச் சென்றார்கள். சிறுபான்மையினருக்கு எதுவுமே செய்யாதவர்கள் கடந்த ஆட்சிக்காரர்கள்.**

இவ்வாறு கிழக்கின் முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஏறாவூரில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கடந்த கால அபிவிருத்திச் சேவைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய நல்லாட்சி அரசு, நல்லாட்சி செய்யாமல் நழுவிக் கொண்டிருக்க, நாட்டுக்கும் முழு உலகுக்கும் முன்னுதாரணமாய் நல்லாட்சியை நடத்திக் காட்டியவர்கள் நாங்கள். இந்த விடயம் இப்பொழுதும் சிலாகித்துப் பேசப்படுகிறது.

மத்திய அரசின் நல்லாட்சியிலே பல ஊழல்கள் நடந்த வரலாற்றை எல்லோரும் அறிவோம். ஆனால், எல்லா இனத்தவரும் இணைந்து ஆட்சி நடத்திய எங்களது கிழக்கு மாகாண சபை நல்லாட்சியிலே ஒரு முள்ளுக் கொப்பு கூட முறியவில்லை. ஊழலும் இடம்பெறவில்லை. மாறாக இன ஐக்கியமே மேலோங்கியிருந்தது. அபிவிருத்தி அபாரமாக இடம்பெற்றது.

மத்திய அரசின் நல்லாட்சியிலேதான் சிறுபான்மையினரின் உரிமைகள் வெளிப்படையாக மறுக்கப்பட்டன.

எல்லாவற்றையும் செய்வோம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்த நல்லாட்சியினரின் நிர்வாகத்தில், சிறுபான்மையினருக்கு எதையுமே செய்யாமல் அவர்களுடைய ஆட்சி முடிவுக்கு வந்த வரலாறு நமக்குத் தெரியும்.

முஸ்லிம் சமூகத்துக்கு கடந்த நல்லாட்சி அரசில் வரலாற்றுத் துரோகம் இடம்பெற்றது. நாடாளுமன்றத்தில் இருந்த முஸ்லிம் உறுப்பினர்களின் கண்கள் கட்டப்பட்டே நல்லாட்சியில் முஸ்லிம்களின் உரிமைகள் நசுக்கப்பட்டன.

மாகாண சபையில் பெண்களை உள்வாங்குதல் என்ற சட்ட பிரேரணையுடன் சேர்த்து தேர்தல் திருத்தச் சட்டம் என்ற ஒன்றுக்குள்ளே முஸ்லிம்களின் உரிமைகளை நசுக்கும் தந்திரோபாய சட்ட மூலத்தை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொண்டு வந்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கண்களைக் கட்டி அந்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றி னார் - என்றார். (க)

# மலையக மக்களுக்கு சேவை செய்யும் ஆற்றல் எமக்கே உள்ளது

## என்கிறார் பழனி திகாம்பரம்

அதிகாரத்தைப் பயன்படுத்தி மலையக மக்களுக்கு உரிய வகையில் சேவைசெய்யக்கூடிய ஆற்றல் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கே இருக்கின்றது. எனவே பொதுத் தேர்தல் மூலம் எமது கரங்களைப் பலப்படுத்துங்கள் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

லிந்துலை பாமஸ்டன் ரட்ணகிரி தோட்டத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த ஆட்சியின்போது அனைத்து தோட்டங்களுக்கும் சேவைகளை வழங்கியிருந்தேன். மேலும் பல திட்டங்களையும் முன்னெடுக்கவிருந்த நிலையிலேயே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

நாம் கடந்த நான்கரை வருடங்களில் மக்களை ஏமாற்றவில்லை. ஆனாலும், 80 வருடங்களாக செயற்படாதவர்கள் இன்று எம்மை விமர்சிக்கின்றனர். போலி வாக்குறுதிகளை வழங்கி வருகின்றனர்.

தனிவீட்டு திட்டம், மலையக அதிகார சபை, பிரதேச செயலகம் அதிகரிப்பு உட்பட என்னால் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றினேன். இவ்வாறு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டேன் இன்று வாக்குக் கேட்கின்றேன். எமது ஆட்சியின்கீழ் கைத்தொழில் பேட்டைகள் அமைக்கப்படும்- என்றார். (ஐ)

# இழப்பீடுகள் பெறக்கூடிய அரசை உருவாக்குவோம்

## பெரமுன வேட்பாளரின் எதிர்பார்ப்பு

கொழும்பு,ஜுலை 22

பிரிட்டன் ஏகாதிபத்தியவாதிகள் இலங்கையில் செய்த குற்றங்களுக்காக இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய அரசு ஒன்றை 2020 ஆம் ஆண்டில் உருவாக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பதுளை மாவட்ட வேட்பாளர் பத்ம உதய சாந்த தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மஹிந்த ராஜபக் ஷவை சர்வதேச போர்க் குற்ற நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல முயற்சித்தனர். மின்சார நாற்காலிக்குக் கொண்டு செல்ல முடியுமா என்பதை மெதமுலனவுக்குச் சென்று முயற்சித்து பார்த்தனர். இதோ தற்போது மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் நாற்காலியில் அமர்ந்துள்ளார். தற்போது என்ன செய்ய வேண்டும்.

அன்று வெள்ளை இன ஏகாதிபத்தியவாதிகள், றொபர்ட் பிரவுன்றிக் எமக்கு செய்த குற்றங்களுக்காக இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய அரசை நாம் 2020 ஆம் ஆண்டில் அமைப்போம் - என்றார். (க)

# வன்னி மக்களுக்கு நிச்சயம் விடிவுண்டு

## வேட்பாளர் கனகரட்ணம் தெரிவிப்பு

வவுனியா,ஜுலை 22

காணாமல்போனோர் மற்றும் அரசியல் கைதிகள் விடயங்களில் அரசுடன் பேசி, உறுதியான நிலைப்பாட்டைஎடுத்து அதற்கு முற்றுப்புள்ளி வைப்பேன்.

இவ்வாறு வன்னி மாவட்ட தேர்தல் வேட்பாளரான மு. கனகரட்ணம் தெரிவித்தார்.

வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்க அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்னியின் அபிவிருத்தி பற்றி நன்கு அறிந்தவன் நான். வன்னி மக்கள் போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள். அபிவிருத்தி, வேலைவாய்ப்பு போன்ற விடயங்கள் எமது மக்களுக்குக் கிடைப்பது மிகவும் குறைவு. அவற்றைத் தீர்த்து வைக்க வேண்டிய தேவை இருக்கின்றது. தற்போதைய அரசின் பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் என்னுடன் மிகுந்த நெருக்கமான உறவை வைத்துள்ளனர்.

அத்துடன் இந்த அரசுடன் இணைந்தாலே இங்குள்ள பிரச்சினைகளைத் தீர்த்து இந்தப் பகுதியைக் கட்டி எழுப்ப முடியும் என்று நான் உறுதியாக கூறுகின்றேன்.

எனவே வன்னியில் இருந்து தமிழர் ஒருவரை அரச கட்சி சார்பாக நாடாளுமன்றம் அனுப்ப வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தை மக்கள் தவறவிடக்கூடாது. அதனை மனதிலே வைத்துக்கொண்டு மக்கள் வாக்களிக்க வேண்டும். முன்னயை தலைமைகள் விட்ட தவறினாலேயே நாம் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். தேசியம் பேசுபவர்களை எதிர்க்க வேண்டிய தேவை எமக்கில்லை. அரசுடன் இணைந்து தமிழன் ஒருவன் இந்த மாவட்டத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் - என்றார். (க-110)

தேர்தல் களம்

# ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஒரு குள்ளநரி

## அந்தக் கட்சி வேட்பாளரே கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜுலை 22

"எமது கட்சியின் தலைவர் அரசியலில் குள்ளநரி, எனவே நீங்கள் அவரை நம்பத்தேவையில்லை. ஆனால் அந்தக் கட்சி சார்பாக உங்கள் முன் வேட்பாளராக களமிறங்கியுள்ள என்னை நம்புங்கள்" என்று யாழ்பாணம் மாவட்டத்தில் ஐ.தே.க சார்பாக போட்டியிடுகின்ற வேட்பாளர் வி.சகாதேவன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி ப.நோ.கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நான் கடந்த பொதுத்தேர்தலில் தமிழர்விடுதலைக் கூட்டணி சார்பாகப் போட்டியிட்டிருந்தேன். எனினும் அவர்களின் கொள்கைகளுடன் ஒத்துப்போக முடியாமையால், இந்தத் தேர்தலில் ஐ.தே.கவின் யானைச் சின்னத்தில் போட்டியிடுகின்றேன். நான் கட்சிக்கோ கட்சியின் தலைமைத்துவத்துக்கோ கட்டுப்பட்டவன் அல்லன். கட்சியின் அடிப்படை அங்கத்தவராகக்கூட இல்லை. எனினும் எமது மக்களின் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதனை அடிப்படையாகக் கொண்டுமே இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

கடந்த காலத்தில் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் தனி ஒருவனாக அறவழியில் போராடியுள்ளேன். யாழ்ப்பாண மீனவர்கள். எதிர்நோக்குகின்ற இந்திய விசைப் படகுகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராக உணவு தவிர்ப்பு போராட்டம் நடத்தியவன். தமிழ் மக்களின் காணிகளை முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் சுவீகரிக்க முற்பட்டபோது அதற்கு எதிராக செயற்பட்டு அந்த மக்களின் காணிகளைப் பெற்றுக் கொடுத்தவன். எனவே மக்கள் போராட்டத்தில் துணிவுடன் ஈடுபட்டவன் என்ற அடிப்படையில் இந்தத் தேர்தலில் மக்கள் எனக்கு வாக்களிப்பர் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார் (ஐ)

# 25 லட்சம் வாக்குகளை ஐ.தே.க. இழந்துவிட்டது

## ரணில் கவலை

**கொழும்பு, ஜூலை 22**
**'ஐக்கிய தேசியக் கட்சி கடந்த காலத்தில் 25 லட்சம் சிங்கள வாக்குகளை இழந்துவிட்டது. அதனை மீளப்பெற்று தமிழ், முஸ்லிம் வாக்குகளையும் தக்கவைத்துக்கொண்டு கட்சி முன்நோக்கிப் பயணிக்கும்' என்று கட்சியின் தலைவரும், கொழும்பு மாவட்ட வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'ஐக்கிய தேசியக் கட்சியினராகிய நாம் பல சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளோம். இம்முறை நடை பெறும் தேர்தலும் ஒரு சவால்மிக்க விடயம்தான். இருந்தாலும் கொரோ னாவுக்கு மத்தியில் நாட்டை எவ்வாறு முன்நோக்கிக் கொண்டு செல்வது என்பதுதான் பிரதான சவாலாகும். அதற்கு முகங்கொடுப்பதற்கும் நாம் தயாராகிவிட்டோம்.
1993ஆம் ஆண்டு நான் பிரதமரானபோது, லலித் அத்துலத் முதலி கொல்லப்பட்டிருந்தார். எதிரணி எமது பக்கமே விரல் நீட்டியது. மாகாணசபைத் தேர்தலிலும் எதிரணி மூன்று சபைகளைக் கைப்பற்றியது. அதுமட்டுமல்ல ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் எமது கட்சியின் பிரதான தலைவர்கள் கொலை செய்யப்பட்டிருந்தனர். இந்நிலையில் கட்சியை முன்நோக்கிக் கொண்டு செல்வது பெரும் சவாலாக இருந்தது. சவாலையும் எதிர்கொண்டு முன்நோக்கிப் பயணித்தோம்.
இனிவரும் காலத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியாக நாம் முன்நோக்கிச் செல்வோம். எமக்கு இல்லாமல்போயுள்ள 25 லட்சம் சிங்கள வாக்குகளைப் பெறுவோம். தமிழ், முஸ்லிம் வாக்குகளையும் பாதுகாத்துக்கொள்வோம். ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களை மாத்திரம் நிறுத்தக்கூடியதாக இருந்திருந்தால் இனவாத பிரச்சினைகூட ஏற்பட்டிருக்காது.
ஜனாதிபதித் தேர்தலின்போது நாம் எவரினதும் காலை வாரவில்லை. ஒற்றுமையாக பயணிக்கவே முயற்சித்தோம். ஆனால் பிரிந்து சென்று விட்டனர். பொதுத்தேர்தலில் ஆட்சியைப்பிடிப்பதே எமது இலக்கு. அதனை நோக்கியே பயணித்துக்கொண்டிருக்கின்றோம். தெளிவான முறையில் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் முன்வைத்துள்ளோம்' - என்றார்.

(ம-44)



2020 பாராளுமன்ற தேர்தல் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தெர்தல் மாவட்டம்

# இலங்கையின் நிலவரத்தை சர்வதேச சமூகம் நம்பவில்லை

## கூறுகின்றார் எரான் விக்ரமரத்ன

இலங்கை அரசாங்கம் நாட்டின் கொரோனா வைரஸ் நிலவரம் குறித்து வெளியிடும் தகவல்கள் மற்றும் கதைகள் போன்றவற்றை சர்வதேச சமூகம் நம்பவில்லை போலத் தோன்றுகின்றது என்று முன்னாள் அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எங்கள் வாழ்க்கைத் தரம் வெளிநாட்டு முதலீடு, வெளிநாட்டு தொழில்நுட்பத்தில் தங்கியுள்ளது எனக் கருதினால் வெளிநாடுகளின் நம்பிக்கையை நாங்கள் பெறுவதே அவசியம்.
பிரித்தானியாவுக்குள் நுழைவதற்கான அனுமதி வழங்கப்பட்ட நாடுகளின் பட்டியல் அறிவிக்கப்பட்டவேளை இலங்கை அந்தப் பட்டியலில் இடம்பெற்றிருக்கவில்லை.
2000 நோயாளிகளைக் கொண்ட இலங்கைக்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஆனால் 45,000 நோயாளிகளை கொண்ட சிங்கப்பூர் அந்தப் பட்டியலில் இடம்பிடித்தது. இலங்கை அரசாங்கம் உண்மையைத் தெரிவிக்கின்றது என இலங்கை மக்களும் நம்பவில்லை - என்றார்.

(ஐ)

# முக்கியமான தருணத்திலேயே ஐ.தே.க.தேர்தலை சந்திக்கிறது

## ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 22
ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்துக்கு மட்டுமல்ல, கட்சிக்கும் ஒரு முக்கியமான ஒரு தருணத்திலேயே தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகி வருகிறது என்று அக்கட்சியின் துணைத் தலைவர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.
ஐக்கிய தேசியக் கட்சி கடந்தகாலத் தவறுகளில் இருந்து கற்றுக்கொள்ளத் தயாராக உள்ளது என்றும் அவர் தெவிவித்தார்.
"கட்சியில் இருந்து பல உறுப்பினர்கள் விலகித் தங்கள் சொந்த அரசியல் கட்சியை உருவாக்கினர். இதன் விளைவாக கட்சியின் தலைவர் ரணில் விக்ரகிரமசிங்க தேர்தலில் பல புதிய முகங்களை அறிமுகப்படுத்தினார்.
புதிய முகங்களில் ஐக்கிய தேசியக் கட்சி தனது நம்பிக்கையை வைத்துள்ளது. இனிமேலும் குறைபாடுள்ளவர்களுடன் ஒன்றுபட முயற்சிக்காது" எனவும் அவர் தெரிவித்தார்.

(ஐ)

# குடிமகனுக்கு வசிப்பிடம் இல்லை என்றால் அதற்கு அரசாங்கம் வெட்கப்படவேண்டும்

## மனோவின் சகா வி.ஜனகன் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 22
இலங்கை மக்களின் குடியிருப்பு பிரச்சினையைத் தீர்த்துவைத்த பின்னரே நாட்டை சிங்கப்பூராக மாற்றுவது பற்றி அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் மனோ கணேசனுடன் இணைந்து போட்டியிடும் வேட்பாளர் கலாநிதி வி.ஜனகன் தெரிவித்தார்.
கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;
'இம்முறை பொதுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பொதுமக்களின் குடியிருப்பு பிரச்சினை தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
கொழும்பு மாவட்டத்தில் குடியிருப்புகள் மிகப் பெரிய பிரச்சினையாக தற்போது உருவெடுத்துள்ளது.
அந்த வகையில் தொடர்மாடிக் குடியிருப்புகளில் வசிக்கும் குடியிருப்பாளர்களின் நெருக்கடி பற்றி கவனம் செலுத்திய போது அவர்களின் உரிமைப்பத்திரம் இன்னமும் அவர்களுக்கு கிடைக்காமல் இருப்பது தெரியவந்துள்ளது.
குறிப்பாக உத்தியோகபூர்வமற்ற அணுகுமுறைகள் காரணமாகவே அவர்களுக்கான வீட்டு உரிமைப்பத்திரங்களை இன்னமும் பெற முடியாமல் உள்ளது.
அதன் காரணமாகவே கூட்டுத் தலைமை நிர்வாகம் ஒன்று உருவாக்கப்படுவதன் ஊடாக பொதுமக்களின் தொடர்மாடிக் குடியிருப்பு பிரச்சி னைக்குத் தீர்வு காணமுடியும் என்று எனது கொள்கைப் பிரகடனத்தில் சுட்டிக்காட்டியுள்ளேன்.
இதேபோன்று, தோட்டப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் மத்தியிலும் பிரச்சினை கள் காணப்படுகின்றன. குறிப்பாக இங்கு தமிழ் பேசும் மக்களுக்கு வீடுகளே இல்லை என்பது சுட்டிக் காட்டத்தக்க விடயம்.
வீடுகளே இல்லாமல் இருக்கின்ற மக்களின் பிரச்சினைகளை ஒழுங்கமைக்க வேண்டும் என்றால் அங்குள்ள பிரச்சினைகளை அரசாங்கம் முதலில் அடையாளப்படுத்த வேண்டும்.
பொதுவாக கொழும்பு வாழ் தமிழ் பேசும் குடும்பம் ஒன்றுக்கு வசிப்பதற்கான வீடு இல்லையென்றால் அதற்கு காரணம் அவர்கள் அரசியல் ரீதியாகவே நோக்கப்படுகின்றார்கள் என்பதுதான்.
அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஓர் அரசியல் கட்சியொன்றுக்கு ஆதரவு அளித்தால் அவர்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பிருக்கும்.
அவ்வாறு இல்லாத பட்சத்தில் வீடு ஒன்றை சாதாரணமாக ஒரு குடும்பத்துக்கு வழங்க முடியாத நிலை ஏற்படும். இது இலங்கையில் நடைமுறையில் உள்ள ஒரு விடயமாக இருக்கிறது.
ஆனால், வசிப்பிடம் என்பது இலங்கையில் வாழக்கூடிய அனைவருக்கும் உள்ள ஓர் உரிமையாகும்.
ஒரு சமூகம் அல்லது குடும்பம் வசிப்பிடமின்றி இன்னல்களை எதிர்நோக்குமானால் அரசாங்கம் அதற்கு வெட்கப்பட வேண்டும். அதனை விடுத்து இலங்கையை சிங்கப்பூராக்குவோம் என்று மார்தட்டிக் கொண்டிருப்பதில் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை- என்றார்.

(ஐ)

# ட்ரம்புக்கு நடந்தது போன்றே இலங்கையிலும் இடம்பெறும்

## அவரின் பேரினவாதக் கொள்கைகள் அங்கு எதிர்ப்பைச் சந்தித்துள்ளன என்கிறார் தயான்

**கொழும்பு, ஜூலை 22**
**இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்கள் முன்மாதிரியாகக் கருதுகின்ற, தேசிய மற்றும் பெரும்பான்மை இனவாதத்தை முன்நிறுத்தும் செயற்பாடுகள் ஒரு கட்டத்தில் பெரும்பான்மை மக்களாலேயே வெறுத்து ஒதுக்கப்படும். அமெரிக்காவில் பெரும்பான்மைவாதத்தை முன்னிறுத்திய ட்ரம்பின் கொள்கைகள் தற்போது அங்கு பெரும்பான்மை மக்களாலேயே வெறுத்து ஒதுக்கப்பட்டுள்ளதை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம் – இவ்வாறு தெரிவித்தார் இராஜதந்திரியான கலாநிதி தயான் ஜயதிலக.**

பொதுத் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்தை வெளியிடும் நிகழ்வு கொழும்பிலுள்ள கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசு நாட்டுமக்கள் தொடர்பில் எவ்வகையிலும் சிந்திக்காத, அவர்களின் நலன்களை முன்னிறுத்தாத கொள்கைகளையும் செயற்றிட்டங்களையுமே கொண்டிருக்கிறது. சரியானதொரு இலக்கும், கொள்கையுமின்றி சரியான பாதையைச் சென்றடைய முடியாது என்றே அறிஞர்கள் பலரும் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். ஆனால் எமது நாட்டின் அரசியலைப் பொறுத்தவரை அத்தகையதொரு தெளிவான இலக்கும், அதற்கான செயற்றிட்டமும் காணப்படுகின்றதா என்பது குறித்து சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டியிருக்கிறது.

அந்தவகையில் சம்பிரதாய அரசியல் கட்சிகளின் இயல்பிலிருந்து சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி எவ்வாறு வேறுபடுகின்றது? சக்திவாய்ந்த உறுதியான நாடு தொடர்பில் பலரும் பேசுகின்றனர். குறிப்பாக தற்போதைய ஆட்சியாளர்களைக் கூறலாம். வரலாற்று ரீதியான அதற்கான தலைமைத்துவத்தை வழங்கியிருப்பதால் அதுபற்றிப் பேசுவதற்கு அவர்களுக்கு உரிமையும் இருக்கிறது.

எனினும் அவர்களின் அரசியல் பேச்சுக்களில் நாடு, இனம், மதம் பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. மக்கள் இல்லாத இடத்தில் ஒரு நாடு எவ்வாறு இருக்கமுடியும்? நாட்டுமக்கள் தொடர்பில் எவ்வகையிலும் சிந்திக்காத, அவர்களின் நலன்களை முன்னிறுத்தாத, மக்களை நேசிக்காத இலக்கு, கொள்கை, செயற்றிட்டம் ஆகியவையே தற்போதைய ஆட்சியாளர்களிடம் காணப்படுகின்றது. இந்த ஆட்சியாளர்களின் நிர்வாகத்தில் மக்கள் எங்கு நிறுத்தப்படுகிறார்கள் என்ற கேள்வி இருக்கிறது.

எனினும் சஜித் பிரேமதாஸவின் கொள்கை அறிவிப்பில் நாடு எனக் குறிப்பிடப்படும் இடத்தில் மக்களே முன்னிலைப்படுத்தப்படுகிறார்கள். மக்களை முன் நிறுத்தியே அவரது செயற்றிட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. சஜித் பிரேமதாஸவின் தரப்பு மாத்திரமே மக்களுக்கு இத்தகையதொரு இடத்தை வழங்கியிருக்கிறது.

அதேபோன்று அரசாங்கம் 'வெற்றி பெறுவோம்' என்பதை அடிக்கடி கூறிவருகின்றது. ஆனால் நாங்கள் வெற்றியடைவோம் என்பதும், அனைவரும் ஒன்றாக வெற்றி பெறுவோம் என்பதும் இருவேறு பதங்களாகும். அந்தவகையில் மக்களையும் ஒன்றிணைத்து வெற்றி பெறுவதே சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கமாக இருக்கிறது. தற்போதைய அரசாங்கம் தேசியவாதம், நாட்டுப்பற்று தொடர்பில் அதிகம் பேசுகிறது. மற்றொரு தரப்பு தேசியவாதம், நாட்டுப்பற்று என்பவையற்ற நவீனத்துவம் பற்றிப் பேசுகிறது. எனினும் சஜித் பிரேமதாஸவின் தரப்பினர் நாட்டின் வரலாறு, பல்வகைமைத்தன்மை பற்றி அறிந்தது. நாடு குறித்துப் பெருமிதம்கொள்ளும் அதேவேளை நவீனத்துவம் நோக்கிப் பயணிப்பதற்கான செயற்றிட்டங்களைத் தமது தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கியிருக்கின்றனர். இனவாத, மதவாத, இராணுவவாத, குடும்பத்தை முன்நிறுத்திய நோக்கங்களும் கொள்கைகளுமே ஆளுந்தரப்பிடம் உள்ளன. அவற்றோடு ஒருபோதும் நவீனத்துவம் நோக்கிப் பயணிக்க முடியாது.

அமெரிக்காவில் விரைவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருக்கிறது. அதில் ஒருபுறம் இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்கள் முன்மாதிரியாகக் கருதுகின்ற தேசிய மற்றும் இனவாதத்தை முன்நிறுத்தி ட்ரம்ப் போட்டியிடுகின்றார். எனினும் தற்போது அமெரிக்கர்கள் அத்தகைய கோட்பாடுகளைப் புறக்கணித்து வருவது கருத்துக் கணிப்புக்களின் ஊடாகத் தெளிவாகின்றது. அமெரிக்காவிலேயே பெரும்பான்மை இனவாதக்கொள்கை எதிர்ப்பை எதிர்கொண்டிருப்பது கவனிக்கத்தக்க முக்கிய விடயமாகும். ட்ரம்பிற்கு எதிரான தரப்பினால் முன்வைக் கப்பட்ட கொள்கைளைப் போன்றே சஜித் பிரேமதாஸவின் கொள்கைகளும் அமைந்துள்ளன. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாகத் தெரிவாகும்போது இந்தக் கொள்கைகள் மேலும் முழுமை பெறுமென நம்புகின்றேன் – என்றார். (ம)

### கட்சியொன்றுக்கு எதிராக மன்னாரில் விசாரணைகள்

மன்னார், ஜூலை 22

மன்னாரில் அரசியல் கட்சி ஒன்று முன்பள்ளி ஆசிரியர்களை அழைத்து பணமும் பரிசுப் பொருள்களும் வழங்கியது தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என மன்னார் உதவித்தேர்தல்ஆணையாளர் ஜெ.ஜெனிற்றன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் அரசியல் கட்சி ஒன்று கடந்த 18ஆம் திகதி முன்பள்ளி ஆசிரியர்களை அழைத்து தங்களது பரப்புரை நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், ஆசிரியர்களுக்கு இரண்டாயிரம் ரூபா பணமும் ஒரு புடைவையும் கொடுத்ததாக குற்றஞ்சாட்டப்படுகின்றது. இது தொடர்பாக மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஜெ.ஜெனிற்றனை தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

இவ்வாறான ஒரு சம்பவம் நடைபெற உள்ளதாக கடந்த 17ஆம் திகதி எமது தேர்தல் முறைப்பாட்டுக் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதையடுத்து இந்த விடயம் தொடர்பில் முழுமையாக கவனம் செலுத்தி விசாரித்து வருகின்றோம். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன – என்றார். (ம-213)

# 139 ஆசனங்களைத் தாண்டி மொட்டு வெற்றியடையும்

### என்கிறார் லக்ஷ்மன் யாப்பா

கொழும்பு, ஜூலை 22

ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபட்டுள்ள நிலையில் கட்சி ஆதரவாளர்கள் அதிகளவில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைந்து வருகின்றனர். தேர்தல் தொடர்பான புதிய கணிப்பீட்டின் பிரகாரம் 139 ஆசனங்களைத் தாண்டி ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வெற்றியடையவுள்ளது என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோரோனா அலை பற்றி எதிரணி பரவலாகப் பேசி வருகின்றது. தேர்தலுக்கு முகங்கொடுக்கும் பயத்தில் எதிரணியால் இவ்வாறு பொய்ப் பரப்புரை முன்னெடுக்கப்படுகின்றது.

இவர்கள்தான் தேர்தலை ஒத்திவைக்குமாறு நீதிமன்றம் சென்றார்கள். 1989 இல் ஜே.வி.பி. கலவரத்திலும் தேர்தல் நடைபெற்றது. பொதுமக்களும் அரசியல் பிரதிநிதிகளும் எவ்வாறு நடக்க வேண்டும் எனத் தெளிவுபடுத்தும் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிட முடியாவிட்டால் வேட்புமனுவை இரத்துச் செய்துவிட்டு தேர்தலில் இருந்து ஒதுங்க முடியும். தொடர்ந்து தேர்தலை ஒத்திவைத்து அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்தவே இவர்கள் முயல்கின்றனர் – என்றார். (ஐ)

# வேட்பாளர்கள் அவமதிக்கப்பட்டால் ஜனாதிபதி கோத்தாபயவுக்கே இழப்பு

### மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டங்களின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்களுக்கு எதிராக தொடர்ந்தும் ஹூ சத்தமிட்டு அவமதிப்புகளை ஏற்படுத்தினால், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கே இழப்பு ஏற்படும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இப்படியான சம்பவங்கள் காரணமாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டத்துக்கு பாதிப்பு ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இம்முறை பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்களான ஜகத் புஷ்பகுமார மற்றும் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் மொனராகலை மற்றும் பதுளையில் நடந்த பொதுஜன பெரமுனவின் கூட்டங்களில் ஹூ சத்தமிட்டு அவமதிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ஐ)

# தேசியம் பேசியவர்களால் மக்கள் இன்று தெருவில்

*விடுதலைப்புலிகள் மக்கள் பேரவை விசனம்*

முல்லைத்தீவு, ஜுலை 22

இதுவரை காலமும் இடம்பெற்ற அரசியலில் தமிழ் அரசியல்வாதிகள் தேசியம் பேசி மக்களைத் தெருவில் விட்டது தான் உண்மை. அதுதான் வரலாறு.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் பேரவையின் ஊடகப் பேச்சாளர் செ.செல்வச்சந்திரன் தெரிவித்தார். முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

விடுதலைப் புலிகள் மக்கள் பேரவைக் கட்சி இந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றது.

மூன்று முன்னாள் போராளிகளையும், ஏழு பொதுமக்களையும் வேட்பாளர்களாகக் களம் இறக்கியுள்ளோம். அதில் முதலாம் இலக்கம் குறித்தொதுக்கப்பட்ட வேட்பாளர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார். தற்போது 9 வேட்பாளர்கள் களத்தில் இறங்கியுள்ளனர்.

மீள்குடியேற்றப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், முன்னாள் போராளிகளது அரசியல் பிரவேசத்துக்குத் தேவையும் காரணமும் உள்ளது. இது காலத்தின் தேவையாகவும் கருதப்படுகின்றது.

ஆயுதம் ஏந்தி வீரவரலாறு படைத்த ஒரு போராளி புனர்வாழ்வுபெற்று வந்து, இன்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாத நிலையிலும், நாளாந்த உணவுக்கு வழியில்லாத நிலையில் வாழ்கின்ற நிலை. மாவீரர்களின் பெற்றோர்களின் நிலைமையும் வேதனையும் கவலையுமளிக்கிறது.

பெண்தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்கள் இன்றும் கஷ்டத்தை எதிர்கொண்டு வருகின்றார்கள். அவர்கள் வறுமையில் வாடுகின்ற மக்களாகவே இன்றும் காணப்படுகின்றனர்.

இதற்காகவே நாங்கள் யாழ். மாவட்டத்தில் களம் இறங்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் தேசியத்தலைவர் தான் தலைவர். அவருக்கு நிகராக எவரும் இல்லை. இங்கு உள்ளவர்கள் கட்சியின் தலைவர்கள். இனத்தின் தலைவர்கள் இல்லை.

தேர்தல் காலத்தில் மட்டும்தான் தமிழ்த் தேசியத்தைக் கதைக்கின்றார்கள். விடுதலைப்புலிகளின் தேசியத்தலைவரையோ, மாவீரர்களையோ அல்லது போராட்டத்தில் கொல்லப்பட்டவர்களையோ உங்கள் அரசியல் சுகபோக வாழ்வுக்காக பயன்படுத்த எண்ணி அவர்களின் தியாகங்களையும் இலட்சியங்களையும், எண்ணங்களையும் மேடைகளில் போசாதீர்கள்- என்றார். (க-19)

# ராஜபக்ஷமாருக்கு ஆதரவு வழங்க எட்டப்பர் கூட்டமொன்று களமிறக்கம்!

*ஆனல்ட் முழக்கம்*

யாழ்ப்பாணம், ஜுலை 22

**இன அழிப்பை திட்டமிடப்பட்ட ஒரு கட்டமைப்பாக செயல்படுத்த முனைகின்றது ராஜபக்ஷக்களின் அரசு. வீட்டை எரிக்கும் ராஜாக்களுக்கு நெருப்பை எடுத்துக் கொடுக்கும் மந்திரிகளாக எட்டப்பர் கூட்டம் ஒன்று களம் இறக்கப்பட்டுள்ளது. வாக்காளர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளரும் முன்னாள் யாழ் மேயருமான ஆனல்ட்.**

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:




தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதைக்கவும் வாக்குப்பலத்தைச் சிதறடிக்கவும் பல பெயர்களில் பல நிறங்களில் தமது கைக்கூலிகளை அரசு போட்டியிட வைத்துள்ளது. மற்றும் இணக்க அரசியல், அரசுடன் இணைந்த அரசியல் என்று கூறிக் கொண்டு வீணையிலும் கையிலும் சிலர் இறங்கி உள்ளனர். இவர்கள் அனைவருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். பல பிரிவுகளாகப் போட்டியிட்டாலும் இவர்கள் அனைவருமே ராஜபக்ஷக்களின் முகவர்கள்தான். இவை எல்லாமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகளைச் சிதறடிக்க வேண்டும் என்ற நோக்குடனேயே செயற்படுத்தப்படுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பம் முதலே பல்வேறு தியாகங்களைச் செய்து மக்களுக்காக சேவை செய்த ஒரு விருட்சம். அன்று நம் இளைஞர்களிடம் காணப்பட்ட தியாகம் அர்ப்பணிப்பு தன்னார்வம் என்பவை இன்று காணாமல் போய்விட்டன. இன்று ஆட்சியில் இருக்கும் ராஜபக்ஷக்களின் அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தமிழ் மக்களின் ஐக்கியத்தையும் சிதைக்க திட்டமிடப்பட்ட ஒரு கட்டமைப்பாக செயற்பட்டு வருகின்றது. இவர்களுக்கு துணையாக, கூட்டமைப்புக்கு எதிராக வாக்களிப்பவர்கள் நமக்காக, நமது உரிமைகளுக்காக உயிர்த்தியாகம் செய்த பல ஆயிரக் கணக்கான ஆண்மாக்களுக்கு துரோகம் இழைப்பவர்களே - என்றார். (ம)

## ஆரோக்கியமான விமர்சனங்களை முன்வையுங்கள்

*ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு*

நீயா, நானா என்ற அரசியலாலேயே எமது சமூகம் பின்தங்கியிருக்கின்றது. எனவே, குறுகிய அரசியல் நோக்கில் விமர்சனங்களை முன்வைக்காமல் ஆரோக்கியமான விமர்சனங்களை முன்வைக்குமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொவிட் 19 பிரச்சினையால் இன்று அனைத்து நாடுகளினதும் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்ட பொருளாதாரம் மீண்டெழும்போது அதன் பங்காளிகளாக நாம் மாறவேண்டும். எம்மை விமர்சிப்பவர்கள் திட்டங்களை முன்வைக்கவில்லை. விமர்சனங்களை மட்டுமே முன்வைக்கின்றனர். ஆரோக்கியமான விமர்சனங்களாக இருந்தால் ஏற்கலாம். ஆனால் இங்கு அர்த்தமற்ற விதத்திலேயே விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன- என்றார். (ஐ)

# மைத்திரியின் சதியில் சிக்கிக்கொண்ட ஐ.தே.க.

*ருவன் விஜேவர்த்தன தெரிவிப்பு*

கொழும்பு, ஜுலை 22

ராஜபக்ஷவினருடன் டீல் போட்டுக்கொண்டு செயற்பட்ட மைத்திரிபால சிறிசேனவின் சதித்திட்டத்தில் ஐக்கியதேசியக் கட்சி சிக்கிக்கொண்டது.

தொழிநுட்பத்துடன் முன்நோக்கிச் செல்வதன் மூலமே எதிர்காலத்தை வெற்றிகொள்ள முடியும். என்றாலும் மைத்திரி பால சிறிசேனே நவீன தொழிநுட்பத் திட்டங்களை விரும்பாத தலைவராக இருந்தார் என்று ஐக்கிய தேசிய கட்சிபிரதி செயலாளரும் கம்பஹா மாவட்ட வேட்பாளருமான ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

களனி தொகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நவீன தொழிநுட்பத்துடன் முன்னோக்கிச் செல்வதன் மூலமே நாட்டின் எதிர்காலத்தை வெற்றிகொள்ள முடியும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாகும். கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் நாங்கள் முன்னெடுத்த தொழிநுட்ப வேலைத்திட்டங்களை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுக்க விடாமல் தடுத்துவந்தார். அவர் ராஜபக்ஷவினருடன் டீல் போட்டுக் கொண்டு செயற்பட்டிருக்கின்றார். அவரின் சதித்திட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சிக்கிக் கொண்டது.

கல்வி அமைச்சினூடாக மாணவர்களுக்கு மடிக்கணனிகள் வழங்கியும், நாடு பூராகவும் இலவசமாக மற்றும் குறைந்த கட்டணத்தில் இணையத்தள வசதிகளை வழங்கவும் திட்டமிட்டு இருந்தோம். இவை அனைத்தையும் . மேற்கொள்ள மைத்திரிபால சிறிசேன தடைகளை ஏற்படுத்தி, வந்தார்.

நவீன தொழிநுட்பத் திட்டங்களை விரும்பாத தலைவராகவே மைத்திரிபால சிறிசேன இருந்து வந்தார் - என்றார். (ஐ)

கொரோனா இடரைப் பயன்படுத்தி

# தமிழர்கள் முஸ்லிம்களை விட அதிக பிள்ளைகளைப் பெறவேண்டும்

*அறிவுரை கூறுகிறார் கருணா*

கொழும்பு, ஜுலை 22

கொரோனா இடர் நிலைமையைப் பயன்படுத்தி தமிழர்கள், முஸ்லிம்களை விட அதிகளவான பிள்ளைகளைப் பெற முயற்சிக்க வேண்டும் என்று விநாயக மூர்த்தி முரளிதரன்(கருணா அம்மான்) அறிவுரை கூறியுள்ளார்.

அம்பாறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இத்தேர்தலானது எமது அம்பாறை மாவட்டத்தில் எமது இருப்பை பாதுகாக்கும் தேர்தலாகும். எமது இனத்தைப் பாதுகாக்க சகலரும் முயற்சிக்க வேண்டும்.

முஸ்லிம் மக்களுக்கு எதிராக நான் கதைக்கவில்லை. முஸ்லீம் தலைவர்கள்தான் எமது மக்களுக்கு எதிரிகள். தமிழர்கள் தனக்கு பின்னால் 'பைல்களை' தூக்கி வர வேண்டும் என கூறிய அதாவுல்லாஹ் என்பவர் ஆசிரியர் தொழில் எடுப்பதற்கு குதிரை ஓடிக் கொடுத்தவர் ஒரு தமிழராவார்.

எதிர்காலத்தில் எமது சந்ததிகளை நாம் பாதுகாக்க கொரோனா அனர்த்த நிலைமையைப் பயன்படுத்தி அதிகளவான பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சிங்களவர்கள் தமிழர்கள் தலா இருபிள்ளைகளுடன் விடுவார்கள். ஆனால் முஸ்லீம்கள் அதிகளவான பிள்ளைகளைப் பெற்று வருகின்றார்கள். இனியாவது ஒருவர் 4 குழந்தைகளையாவது பெறுங்கள். தற்போது நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. கொரோனா இடரால் தனிமைப்படுத்தல் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது - என்றார். (ஐ)

# யானை தாக்கி ஒருவர் சாவு

கொழும்பு, ஜூலை 22
காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் சூரியவெவ வெலிவேவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.
யானையின் தாக்குதலுக்கு இலக்காகி 42 வயதான குடும்பத் தலைவரொருவரே இவ்வாறு உயிரிழந்தார்.
சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வெவ்வேறு விபத்துக்களில் மூவர் காயம்

சாவகச்சேரி, ஜூலை 22
வாகன விபத்துக்களில் சிக்கி காயமடைந்த இரு பெண்கள் உட்பட மூவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்த விபத்துக்கள் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளன.
சாவகச்சேரி நுணாவில் கிழக்குக் பகுதியில் ஏ-9 வீதியில், வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் நாவற்குழியைச் சேர்ந்த 28 வயதுப் பெண் காயமடைந்தார்.
இதேவேளை தனங்களப்பு சந்தியில் மோட்டார் சைக்கிளும் ஹையஸ் வாகனமும் மோதியதில், பூநகரி முட்கொம்பனைச் சேர்ந்த 26 வயது நபர் காயமடைந்தார்.
மேலும் சாவகச்சேரி சந்தியில் இடம்பெற்ற விபத்தில் மீசாலை வடக்கைச் சேர்ந்த 66 வயது பெண் ஒருவரும் காயமடைந்தார். (ஐ-9)

# கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டால் மூன்றாவது அலைக்கும் வாய்ப்பு

## அரச தாதியர் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூலை 22**
**இலங்கையில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலை ஏற்பட அரசின் தவறே காரணம். தனிநபர் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டால், இரண்டாவது அலை மட்டுமல்ல, மூன்றாவது அலையும் ஏற்படக்கூடும்.**

இவ்வாறு அரச தாதி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய எச்சரித்துள்ளார்.
கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தியதாக அரசு தொடர்ந்து கூறி வந்த போதிலும், அவ்வாறான ஒன்று இடம்பெறவில்லை. இன்று நாட்டின் பல பிரதேசங்கள் முடக்கப்பட்டுள்ளன. சில இடங்கள் தொடர்பில் தகவல் வெளியிடாமல் மறைக்கப்பட்டன. அரசால் இரண்டாவது அலையை மறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க)

# செல்பி எடுத்த மருத்துவர் தவறி வீழ்ந்து உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 22
கல் ஒன்றின் மீது ஏறி செல்பி எடுக்க முற்பட்ட மருத்துவர் கால் தவறி நீரோடையில் வீழ்ந்து உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் நெலுவ, சிங்கராஜ நீர்வீழ்ச்சியில் நடந்துள்ளது. தனது காதலியுடன் நீராடச் சென்ற மருத்துவர் நீர்வீழ்ச்சியில் விழுந்து உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
உயிரிழந்த நபரின் காதலி கொழும்பில் பிரதான மருத்துவமனை ஒன்றின் மருத்துவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-ச)

# அரசசபை உடைப்புடன் சம்மந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்

## அஸ்கிரிய பீடம்

கொழும்பு, ஜூலை 22
குருநாகல் மாவட்டத்தில் காணப்பட்ட புவனேகபாகு மன்னனுடைய அரசசபை வரலாற்று முக்கியத்துவமுடைய ஒரு கட்டடமாகும். இந்தக் கட்டடத்தை உடைத்ததன் பின்னணியில் யார் செயற்பட்டிருந்தாலும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஸ்கிரிய பீடத்தின் அநுநாயக்க மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
புவனேகபாகு மன்னனுடைய அரச சபையானாலும் சரி, வேறு கட்டடமானாலும் சரி, அவை வரலாற்று முக்கியத்துவமுடையவை என்றால் பேணிப் பாதுகாப்பது அத்தியாவசியமானதாகும்.
இது ஆளுங்கட்சியினதோ அல்லது எதிர்க்கட்சியினதோ ஒரு சாராருடன் மட்டும் தொடர்புடைய பிரச்சினை அல்ல. எவ்வித கட்சி பேதமும் இன்றி இவ்வாறான செயற்பாடுகளின்போது நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.
இதன் பின்னணியில் அரசியல்வாதிகளோ அல்லது வேறு எவர் காணப்பட்டாலும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.
இது தொடர்பில் ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
நாம் அந்தக் குழுவின் அறிக்கையையே எதிர்பார்த்துள்ளோம். அதில் உண்மைகள் வெளிப்படுத்தப்படுமாயின், அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
உடைக்கப்படுவதற்கு முன்னர் இந்தக் கட்டடத்தில் ஹோட்டலொன்றை நடத்திச் செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அது உண்மையானால் அது மிகப் பெரும் தவறாகும்.
எனவே இதனை மீள நிர்மாணித்து பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் கோருகின்றோம் என்றார். (ஐ)

# ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை

கொழும்பு, ஜூலை 22
மூவருக்கிடையில் இடம்பெற்ற மோதலில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் எல்பிட்டி ஊருகஸ்மங்கந்திய பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
நிதிப் பிரச்சினை தொடர்பிலே குறித்த நபர்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டதாகவும், பின்னர் அவர்களிலொருவர் பொல்லால் தாக்கப்பட்டுள்ளதுடன், அவர் மற்றைய நபரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளதாகவும் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.
சம்பவத்தின்போது படுகாயமடைந்த நபர் எல்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.
ஊருகஸ்மங்கந்திய பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார்.
சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொலிஸாரின் பாதுகாப்பில் கீழ் எல்பிட்டி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். மேலதிக விசாரணைகளை ஊருகஸ்மங்கந்திய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மான் வேட்டை; ஒருவர் கைது

திருகோணமலை, ஜூலை 22
மான் வேட்டையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் இரவு ஒருவர் கைது செய்யப்பட்டார்.
அவரிடமிருந்து வேட்டையாடப்பட்ட மான் ஒன்றையும் தாம் கைப்பற்றியதாக திருகோணமலை கோமரங்கடவெல பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேக நபர் கோமரங்கடவெல மீகஸ்வெவ காட்டுப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார் எனவும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



# போராட்டம் 1250 நாள்கள் நிறைவு

வவுனியா, ஜூலை 22
வவுனியா வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாக சுழற்சிமுறை உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் போராட்டம் நேற்றுடன் 1250 ஆவது நாள்கள் பூர்த்தியானதையிட்டு, அடையாள கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
"கடந்த 1250 நாள்களாக நாம் போராடி வருகின்றோம். எமக்கான தீர்வைப் பெற்றுத் தருமாறு வெளிநாடுகளிடம் நாம் கோரிக்கையை முன்வைத்துள்ளோம். எமது பிரச்சினையைப் பொருட்படுத்தாமல் தேர்தல் என்று அனைத்து கட்சிகளும் அலைகின்றன" என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.
ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்க நாட்டுக்கொடிகளை ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப்பியிருந்தனர். (க-110)

# ஸ்ரீ கணேசா வித்தியின் புதிய கட்டடத் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ்ப்பாணம் சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தின் புதிய கட்டட திறப்பு நிகழ்வு நாளை வியாழக்கிழமை மதியம் 12 மணியளவில் நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் பா.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் கலந்துகொண்டு கட்டடத்தை திறக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கொரோனாக் கட்டுப்பாட்டிலா உண்மையை மறைக்கும் அரசு

## பேராசிரியர் விசனம்

**கொழும்பு,ஜூலை 22**

**தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை வெற்றி பெற்றுள்ளது என அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களைக் கேலி செய்துள்ள பேராசிரியர் ஒருவர், சுகாதார சேவைகள் பணிப்பாளரை மீண்டும் க.பொ.த. சாதாரண தர கணிதப் பாட பரீட்சைக்குத் தோற்ற வேண்டுமெனவும் பரிந்துரைத்துள்ளார்.**

இலங்கையின் கொரோனா கட்டுப் பாட்டு வெற்றியைக் காண்பிப்பதற் காக 130,000 பி.சி.ஆர் பரிசோத னைகள் நடத்தப்பட்டுள்ளன என, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க கடந்த வாரம் ஊடகங்க ளுக்குத் தெரிவித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தின் சமூகவியல் துறையின் முன் னாள் பேராசிரியரான சிசிர பின்ன வல இந்தத் தகவலை சமூக ஊடகங்களில் கேலி செய்ததோடு, சுகாதார சேவைகள் பணிப்பா ளரை மீண்டும் க.பொ.த சாதா ரண தரப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டுமெனப் பரிந்துரைத்துள் ளார்.

130,000 என்பது மக்கள் தொகை யில் 0.6% அல்லது ஒரு மில்லிய னுக்கு 5 ஆயிரத்து 900 ஆகும். எங்களுடன் ஒப்பிடும்போது, அமெ ரிக்காவில் பரிசோதனை செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை 13.7% அல்லது ஒரு மில்லியனுக்கு 138,000 ஆகும்.

இந்தியா ஒரு மில்லியனுக்கு 0.9 சதவீதம் அல்லது 9,400 ஆக நமக்கு முன்னால் உள்ளது. இந் நிலையில் நாம் வெற்றிகரமாகச் செயற்பட்டுள்ளோம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நினைப் பாராயின், அவர் மீண்டும் க. பொ.த சாதாரண தர கணிதப் பாடப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்" என பேராசிரியர் பின்னவல ட்வீட் செய்துள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தின் சமூகவியல் துறையின் முன் னாள் பேராசிரியரான சிசிர பின்ன வல, தொற்றுநோய்க்குப் பின்னர் இலங்கை பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டுச் செல்ல எடுக்க வேண்டிய நடவடிக் கைகள் குறித்து ஜனாதிபதி கோத் தாபய ராஜபக் ஷ ஏற்றுக்கொண்ட ஆய்வறிக்கையை, சமர்ப்பித்தவர் களில் ஒருவராவார்.

கொரோனாத் தொற்றுக்குப் பின்ன ரான இலங்கையின் பார்வை என்ற இந்த ஆய்வை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசாமி மற்றும் சர்வதேச உறவுகள் மற் றும் மூலோபாய ஆய்வுகளுக்கான லக் ஷ்மன் கதிர்காமர் நிலையத் தின் நிர்வாக இயக்குநர் கலாநிதி கணேசன் விக்னராஜா ஆகியோர் இணைந்து உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# குறைபாடுகளுடன் இயங்கிய உணவகங்களுக்கு 'சீல்'

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ் நகரில் குறைபாடுகளுடன் இயங்கிய இரு சைவ உணவகங்களின் உரிமையாளர்களுக்கு ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான், இரு உணவகங்களையும் மறுஅறிவித் தல் வரை மூடுமாறு உத்தரவிட்டுள்ளார்.

யாழ். மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர் தலை மையில் சென்ற குழுவினர், மின்சார நிலைய வீதி யில் யாழ். பஸ் நிலையத்திற்குப் பின்புறமாகவுள்ள பிரபல்யமான இரு சைவ உணவங்களை சோத னைக்கு உட்படுத்தியபோது, சுகாதார சீர்கேடுகள் உட்பட 30 இற்கும் மேற்பட்ட குறைபாடுகளுடன் உணவகங்கள் இயங்கியமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து, இரு உணவக உரிமையாளர்களுக் கும் எதிராக யாழ். நீதிமன்றத்தில் 4 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. பத்து சுகாதார சீர்கேடுகள் மற்றும் திகதி காலாவதியான பொருள்கள் உட்பட 23 குறைபாடுகளுடன் இயங்கிய உணவ உரிமை யாளருக்கு எதிராகத் தாக்கல்செய்யப்பட்ட இரு வழக்குகளில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய வழக்கில் குற்றத்தை ஏற்றுக்கொண்ட உணவக உரி மையாளர், 23 குற்றச்சாட்டுக் கெதிரான வழக்கில் குற்றத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

அதைத்தொடர்ந்து, சுகாதார சீர்கேடுகளுடன் இயங் கிய குற்றத்திற்காக 50 ஆயிரம் அபராதம் விதித்த நீதிவான் உணவகத்தை மறுஅறிவித்தல்வரை மூடி சீல் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். மற்றைய வழக்கில் உணவக உரிமையாளரை 1 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறு தீர்ப்பளித்து மேல் விசாரணையை ஒத்தி வைத்துள்ளார்.

இதேவேளை, 9 சுகாதார சீர்கேடுகள் மற்றும் 9 குறைபாடுகளுடன் பழுதடைந்த மரக்கறி வகை களை சமையலுக்காக களஞ்சியப்படுத்தி வைத்தி ருந்த குற்றத்திற்காக உணவக உரிமையாளருக்கெ திராகத் தாக்கல்செய்யப்பட்ட இரு வழக்குகள் விசா ரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது உணவக உரிமையாளர் இரு குற்றங்களையும் ஏற்றுக் கொண்டதையடுத்து இரு குற்றங்களுக்குமாக உண வக உரிமையாளருக்கு தலா 45,000 ரூபா வீதம் 90,000 ரூபா அபராதம் விதித்த நீதிவான் மறு அறிவித்தல் வரை உணவகத்தை சீல்வைத்து மூடு மாறு உத்தரவிட்டுள்ளார். (ரி3-115)

# குடும்பப் பெண்ணின் இறப்பில் சந்தேகம்

## ஒருவர் கைது

ஹற்றன், ஜூலை 22



மூன்று குழந்தைகளின் தாய் ஒருவர் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தலவாக்கலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சென்கிளேயர் தோட்ட ஸ்டெலின் பிரிவைப் வதிவிடமாகக் கொண்ட 54 வயதுடைய 3 குழந்தைகளின் தாய் ஒருவர் கடந்த 15 ஆம் திகதி இரவு நெஞ்சு வலியால் இறந்துள்ளார் என, அவரது மருமகளால் தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இறப் பில் சந்தேகம் வெளியிட்டு, சம்பவம் தொடர்பில் நுவரெலியா நீதிமன்ற நீதிவானுக்கு அறிவித் தனர். சம்பவ இடத்துக்கு நீதிவான் நேரடியாகச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார்.

சடலத்தை பரிசோதனைக்காக நுவரெலியா ஆதார மருத்துவமனையின் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக அனுப்ப நட வடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

சடலப் பரிசோதனையை மேற்கொண்ட சட்ட மருத்துவ அதிகாரியின் பரிசோதனையின் பின்னர் குறித்த பெண் கழுத்து நெரிக்கப்பட்டு இறந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் தலவாக்கலை பொலிஸார் ஒருவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் அதே தோட் டத்தைச் சேர்ந்த 2 குழந்தைகளின் தந்தையா வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# மின்னல் தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 22

மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி நீர்கொழும்பு குட் டிடுவா பிரதேசத்தில் நபரொருவர் உயிரிழந்துள் ளார். இந்தச் சம்பவம் நேற்று காலை இடம்பெற் றுள்ளது. இச் சம்பவத்தில் நீர்கொழும்பு கொச்சிக் கடை பகுதியைச் சேர்ந்த,47 வயதுடைய நபரே மரணமடைந்துள்ளார். (ரி1)

# கொரோனா வைரஸில் 6 தனித்துவமான இனங்கள்

## லண்டன் கிங்ஸ் கல்லூரி ஆய்வாளர்கள் கண்டுபிடிப்பு

லண்டன், ஜூலை 22

உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸின் வகைகளைக் கண்டுபிடித்துள்ள ஆய்வாளர்கள் அவற்றின் மூலம் ஏற்படும் அறிகுறி களைத் தனித்தனியாக வகைப்படுத்தி உள்ளனர்.

லண்டன் கிங்ஸ் கல்லூரி ஆய்வாளர் களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், கொரோனா வைரஸில் 6 வகையான தனித்துவமான இனங்கள் காணப்பட்டு கின்றன என கண்டுபிடித்துள்ளனர்.

இதன்மூலம் வைரஸ் தாக்கப்பட்டவர் களுக்கு அளிக்கப்படும் சிகிச்சையில் முன்னேற்றம் கிடைத்துள்ளதாக வும் அவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் நோயாளிகளுக்கு ஏற்பட்டிருக்கும் அறிகுறிகளுக்கு ஏற்ப எந்தவகை வைரஸ் தாக்கியுள்ளது என்பதையும் கண்டறிய முடியும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தொடர்ச்சியான இருமல், காய்ச்சல் மற்றும் வாசனை இழப்பு ஆகியவை பொதுவாக நோயின் மூன்று முக்கிய அறிகுறிகளாக இருந்தாலும் தலை வலி, தசை வலி, சோர்வு, வயிற்றுப் போக்கு, குழப்பம், பசியின்மை, மூச்சுத் திணறல் மற்றும் சில புதிய அறிகுறிகளும் கொரோனா நோயா ளிகளிடம் இருக்கின்றமையை ஆய் வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

முதல் வகையான காய்ச்சலற்ற நிலையில் தலைவலி, வாசனை இழப்பு, தசை வலி, இருமல், தொண் டைப் புண், நெஞ்சுவலி போன்றவை இருக்கின்றமை தெரியவந்துள்ளது.

2ஆவது வகையான காய்ச்சலுடன் கூடிய அறிகுறியில் தலை வலி, வாசனை இழப்பு, இருமல், தொண் டைப் புண், காய்ச்சல் மற்றும் பசி யின்மை ஏற்படும்.

3 ஆவது வகையில் ஏற்கனவே இருக்கும் அறிகுறிகளுடன் பசியின் மையுடன் வயிற்றுப்போக்கும் காணப் படும். 4ஆவது வகையில் கடுமை யான நிலை ஒன்றில் மேற்கூறிய அறிகுறிகளுடன் உடல் சோர்வு ஏற் படும். 5ஆவது நிலையான கடுமை யான நிலை 2இல் பழைய அறிகுறி களுடன் மனக்குழப்பம் ஏற்படும். மிகக் கடுமையான 6ஆம் நிலை யில் பழைய அறிகுறிகளுடன் பசி யின்மை, மனக்குழப்பம், மூச்சுத் திணறல், வயிற்று வலி மற்றும் வயிற் றுப்போக்கு போன்றவை ஏற்படும் எனவும் விஞ்ஞானிகள் வகைப்ப டுத்தி உள்ளனர். (ரி3)

# மன்னார் மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்

## காயமுற்ற ஒருவர் மருத்துவமனையில்

**மன்னார், ஜூலை 22**
**மன்னார் பிரதான பாலத்துக்கு அருகில் இருந்து நேற்றுக் காலை மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்ற மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலின் காரணமாக மீனவர் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதன் காரணமாக மன்னார் பாலத்தடி கடற்கரையில் மீனவர்கள் ஒன்றுதிரண்டு தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.**

சம்பவ இடத்திற்குச் சென்ற மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாதிக்கப்பட்ட மீனவர்களுடன் கலந்துரையாடி நிலைமையைச் சுமூக நிலைக்குக் கொண்டுவந்தார்.

இதன்போது தாம் மன்னார் பிரதான பாலத்தில் இருந்து மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பகுதி வரை சுமார் மூன்று இடங்களில் முழுமையாக சோதனைக்கு உட்படுத்தப்படுகிறோம் எனவும் இதனால் தங்களால் உரிய நேரத்தில் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். அத்துடன் இன்று காலை வழமை போல் இரண்டு படகுகளில் கடலுக்குச் சென்றோம் எனவும் கடல் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினர் தமது ஆவணங்களைக் கேட்ட போது தாம் ஆவணங்களை எடுத்து வழங்க முன்னர் தங்களை அவர்கள் முழங்கால்களில் இருத்தி தடிகளால் அடித்ததுடன் துவக்கினால் சுடுவதாக அச்சுறுத்தினர் எனவும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இத் தாக்குதலில் மீனவர் ஒருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் சக மீனவர்கள் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மீனவர்களால் தாக்குதல் தொடர்பில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ரி3-56)

## நுகேகொட விபத்து; சாரதிக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூலை 22
நுகேகொட பகுதியில் பஸ்ஸும் இராணுவ வாகனமும் மோதி இராணுவச் சிப்பாய் உயிரிழந்த சம்வத்தில் பஸ்ஸின் சாரதியை ஜூலை 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுகேகொட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நுகேகொட மேம்பாலத்தில், கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பு நோக்கி பயணித்த பஸ்ஸொன்றை முந்திச் செல்ல முற்பட்ட மற்றுமொரு பஸ் எதிரே வந்த இராணுவ கெப் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ரி1)

## பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு, ஜூலை 22
தேசிய பொலிஸ் ஆணையகத்தின் ஒப்புதலுடன் 17 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.


அதன்படி, பொலிஸ் அத்தியட்சகர், பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் இருவர், ஒன்பது உப பொலிஸ் அத்தியட்சகர்கள், நான்கு பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் இரு பிரதிப் பொலிஸ் பரிசோதகர்கள் ஆகியோருக்கே இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (ரி2)

## மேலதிக வகுப்பு நடத்திய ஆலோசகருக்கு கொரோனா!

கம்பஹா, ஜூலை 22
கம்பஹா சுகாதார அத்தியட்சகர் அலுவலகம் மூலம் கொரோனாத் தொற்றுக்குள்ளான நபருடன் நெருங்கிப் பழகிய 101 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப் பரிசோதனைகளில், இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது என்று கம்பஹா சுகாதார வைத்திய அதிகாரி சுபாஸ் சுபசிங்க தெரிவித்துள்ளார்.

தொற்றுக்குள்ளானவரில் ஒருவர் கந்தகாடு புனர்வாழ்வு நிலைய பாடசாலை ஆலோசகர் எனவும், அவர் கம்பஹாவில் பாடசாலை மாணவர்களுக்கு மேலதிக வகுப்பு நடத்தியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த மாணவர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் வைத்திய அதிகாரி சுபாஸ் சுபசிங்க தெரிவித்துள்ளார். (ரி3)



மன்னார் வேள்ட் விசன் நிறுவனத்தினரால் மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் பாவனைக்காக ஒரு தொகுதி முகக் கவசம் மற்றும் தொற்றுநீக்கித் திரவம் போன்றவை நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ. மோகன்றாஸிடம் கையளிக்கப்பட்டன. (ரி3-56)

## 32 வெளிநாட்டு மாலுமிகள் இலங்கைக்கு வருகை

கொழும்பு, ஜூலை 22
கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலில் பணியாற்றுவதற்காக 32 வெளிநாட்டு மாலுமிகள் நேற்று இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

டோஹாவிலிருந்து கட்டார் எயார்வேஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான கியூ. ஆர் 668 என்ற விமானத்தின் மூலமாக இன்று அதிகாலை 1.45 மணிக்கு பண்டாரநாயக்க, கட்டுநாயக்க விமான நிலையத்தை அவர்கள் வந்தடைந்தனர்.

விமான நிலையத்துக்கு வந்த பின்னர் அவர்களை பி.சி. ஆர். சோதனைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ரி1)

## அனைத்து கடற்படையினரும் குணமடைவு

கொழும்பு, ஜூலை 22
நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்த அனைத்துக் கடற்படையினரும் வைத்திய சிகிச்சைகளின் பின்னர் பூரண குணமடைந்துள்ளனர்.

ஏற்கனவே 903 கடற்படை வீரர்கள் குணமடைந்திருந்த நிலையில், நேற்றுமுன்தினம் மாத்திரம் மூன்று கடற்படை வீரர்கள் இரணவில சிகிச்சை நிலையத்திலிருந்து குணமடைந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்த நிலையில் 906 கடற்படையினரும் பூரண குணமடைந்து வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)



## ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டாரா சனத்?

கொழும்பு, ஜூலை 22
இலங்கை கிரிக்கெட் அணியில் அங்கம் வகித்த கிரிக்கெட் வீரர்களில் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டவர்கள் என்று சில வீரர்களின் பெயர்களை சிங்கட ஊடகமொன்று வெளியிட்டுள்ளது. இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜெயசூரியவும் அந்தப் பட்டியலில் உள்ளார்.

சனத் ஜயசூரிய, கௌசல்ய லொக்கு ஆராச்சி, தில்ஹார லொக்கு ஹெட்டிகே, நுவன் சொய்சா, அவிஸ்க குணவர்தன, ஜீவந்த குலதுங்க, ஜயானந்த வர்ணவீர, தரிந்து மெண்டிஸ், அனுஷ சமரநாயக்க, சாமர சில்வா ஆகியோர் இந்த படடியலில் அடங்கியுள்ளதாக அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இவர்களில் சாமர சில்வா, அண்மைய காலத்தில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்திய 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாடிய இலங்கை அணியில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வலையில் சிக்கிய சிறுத்தை உயிரிழப்பு

நாவலப்பிட்டி, ஜூலை 22
நாவலப்பிட்டியில் சிறுத்தை ஒன்று வலையில் சிக்கி உயிரிழந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. நாவலப்பிட்டி மாபாகந்த பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஏழு வயதைக்கொண்ட பெண் சிறுத்தையே இவ்வாறு வலையில் சிக்கி உயிரிழந்துள்ளது.

மரம் ஒன்றில் இணைக்கப்பட்டிருந்த வலையில் சிக்கிய சிறுத்தை உயிரிழந்த நிலையிலேயே மீட்கப்பட்டதாக வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் நாவலப்பிட்டி நீதிமன்றில் முறையிடப்பட்டுள்ளது. (ரி2)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# காவிகளின் இரத்தவெறி

பொதுபலசேன அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர், இராவண பலய அமைப்பின் பொதுச்செயலாளர் இத்தானந்த சுகததேரர், தேசிய புத்திஜீவிகள் சபையின் தலைவர் கலாநிதி ஓமல் பே சோபித தேரர் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட கருத்துரையில் சமஷ்டி என்றால் பிரிவினை என்றும் அது இலங்கையை பிளவுபடுத்தும் என்றும் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லையென்றும் தெரிவித்துள்ளதுடன் தாம் சமஷ்டி வழியில் தீர்வு வழங்க ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லையென்றும் அதற்காக தமிழர்கள் போராட்டம் நடத்தினால் வடக்கு கிழக்கில் இரத்த ஆறுதான் ஓடுமெனவும் எச்சரித்துமுள்ளனர்.

இது அவர்களிடமிருந்து வெளிவருவது ஆச்சரியப்படக்கூடியதோ அல்லது இப்படியுமிருக்குமா எனச் சந்தேகப்படக் கூடியதுமல்ல. ஏற்கனவே சிங்களக் கடும்போக்கு தேரர்கள் இப்படியான கருத்துகளை வெளியிட்டும் வந்துள்ளனர்.

சமஷ்டி என்பது தனித்தனித் தேசங்களையோ அல்லது சுயாட்சிப் பிரதேசங்களையோ ஒன்றிணைக்கும் ஒன்றியம் என்பது சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கோட்பாடாகும். பதின்மூன்று தேசிய இனங்களைக் கொண்ட பல்வேறு தேசங்கள் ஒன்றிணைந்தே சோவியத் யூனியனை அமைத்தன. 50 இற்கும் மேற்பட்ட மாநிலங்களைக் கொண்டு அமைக்கப்பட்டதே ஐக்கிய அமெரிக்க இராச்சியமாகும். 4 சுயாட்சிப் பிரதேசங்களைக் கொண்டதே சுவிட்சர்லாந்தாகும். இவ்வாறு உலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள சமஷ்டிக் குடியரசுகள் பலம்பெற்ற, ஐக்கியப்பட்ட நாடுகளாக உயர்ந்து நிற்கின்றன. அங்கெல்லாம் பிரிவினைக் கோரிக்கைகள் எழவுமில்லை. அதன் காரணமாக நாடுகள் பிளவுபட்டு போயுள்ளன என்று கூறப்படுவதுமில்லை.

ஆனால் இலங்கையிலுள்ள சிங்கள பௌத்த பேரினவாதிகள் சமஷ்டி என்றால் பிரிவினையென்று சொல்லி அர்த்தப்படுத்தி வருகின்றனர். அதன் மூலம் ஒற்றையாட்சியமைப்பை பேணிப் பாதுகாத்து ஏனைய இனங்கள் மீதான ஒடுக்குமுறையையும் இனவழிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதையே நோக்கமாக கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.'

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் அதன் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களும் மீண்டும் மீண்டும் பிரிக்கப்படாத, பிரிக்கப்பட முடியாத நாட்டுக்குள் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பகிர்வு என்றே தமது கோரிக்கையை மிகவும் தெளிவாக முன்வைத்து வருகின்றனர். ஆனால் சில தேரர்கள் உட்பட பேரினவாத சக்திகள் அக்கோரிக்கையானது பிரிவினைவாதமெனப் பிடிவாதம் பிடித்து வருகின்றனர். அது அவர்கள் அறியாமையென்று சொல்லிவிட முடியாது. அடிப்படையில் அதை நாட்டைப் பிளவு படுத்தும் நோக்கம் கொண்ட கோரிக்கையெனக் கூறி சிங்கள மக்களை தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளை ஏற்றுக்கொள்ள வைக்க மேற்கொள்ளப்படும் நயவஞ்சகப் பிரசாரமாகும்.

அண்மையில் பல தேர்தல் மேடைகளில் பிரதமர் மகிந்தராஜபக்ச இனப்பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வை தருவதாகக் கூறி வந்தார். ஆனால் சமஷ்டிக் கோரிக்கையின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டபோது அவர் பிரபாகரனின் கோரிக்கையை பேனா மூலம் நிறைவேற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முனைகின்றனர் எனக் கூறியுள்ளனர்.

அதன் அர்த்தம் கடும்போக்குவாத பேரினவாத சக்திகளோ சிங்கள ஆட்சியாளர்களோ இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு குறைந்தபட்ச தீர்வைக்கூட வழங்கத் தயாரில்லை என்பதே ஆகும்.

இந்நிலையில் அரசாங்கக் கட்சிகளில் இணைந்து தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று அவர்களைப் பலப்படுத்துவதன் மூலமோ அல்லது அரசாங்கத்துக்கு ஆதரவளித்தோ அல்லது அடிபணிந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றோ தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதென்பது கனவிலும் கூட நடக்கச் சாத்தியமேயில்லை.

எனவே தமிழ் மக்கள் ஒரே தலைமையின் கீழ் ஒன்று திரண்டு ஐக்கியப்பட்டு ஒரு பலம்பெற்ற சக்தியாக நின்று தேசிய ரீதியிலும் சர்வதேச மட்டத்திலும் இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலமே எமது உரிமைகளை பெறமுடியும் என்பதில் எமது மக்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

# நல்லூர் உற்சவ காலத்தில் இறுக்கமான நடைமுறைகள்

**யாழ்ப்பாணம்,ஜூலை 22**

**நாட்டில் கொரோனா தொற்று நோய் அபாய நிலை, நிலவும் சூழலில் ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவில் பக்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாய நடைமுறைகள் பற்றிய அறிக்கை யாழ்.மாநகர சபை பதில் முதல்வர் து.ஈசனின் பெயரில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1. நல்லூர் உற்சவ காலத்தில் சுகாதார அமைப்பின் அறிவுறுத்தலின் பிரகாரம் மட்டுப்படுத்தப்பட்ட அடியார்களே உரிய நேரத்தில் வழிபாடு செய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.
2. வழமைபோன்று இவ்வருடமும் நாளை நள்ளிரவு தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி நள்ளிரவு வரை வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறையில் இருக்கும். வீதித் தடைக்கான வாகன அனுமதி அட்டைகள் மாத்திரம் மாநகர சபையால் வழங்கப்படும்.
3. வீதித்தடைகள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் காலத்தில் போக்குவரத்துக்காக கடந்த காலத்தைப் போன்று மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
4. அடியவர்கள் ஆலயத்துக்கு வருகைதரும் போது தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது வாகன அனுமதிப்பத்திரம் இவற்றில் ஏதாவது ஒன்றை ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கண்டிப்பாக உடன் எடுத்து வரவேண்டும். இவற்றில் ஏதாவது ஒன்று வீதித் தடையில் ஒவ்வொரு தடவையும் பதிவு செய்யப்பட்டே உட்செல்ல அனுமதிக்கப்படுவர்.
5. வீதித் தடைகளூடாக ஆலயத்துக்கு வருகை தரும் அடியவர்கள் எப்போதும் முகக்கவசம் (Mask) அணிந்திருத்தல் கட்டாயமானதாகும்.
6. ஆலயத்துக்குள் உள் நுழைவதற்கு முன்னர் கைகளைச் சுத்தம் செய்ய வேண்டும்.
7. ஆலயத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தனியாள் இடைவெளியைப் பின்பற்றி வழிபாடுகளை மேற்கொள்ளுதல் தனிப்பட்ட ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.
8. அடியவர்கள் ஆசாரசீலர்களாக ஆலயத்துக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
9. வெள்ளை, சிவப்பு கொடிகள் நாட்டப்பட்ட ஆலய வளாகத்துள் பாதணிகள் அணிவது தடை செய்யப்பட்டுள்ளது.
10. அடியவர்கள் ஆலயத்துக்குள் நீண்ட நேரம் தரித்து நிற்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.
11. கொரோனாத் தொற்று பாதிப்பு காரணமாக சுயதனிமைப்படுத்தல் அல்லது கட்டாய தனிமைப்படுத்தலுக்கு ஏற்கனவே உட்படுத்தப்பட்டு காலம் முடிவுற்ற பின்னர் அடியவர்கள் ஆலயத்துக்கு வருகை தரும் பட்சத்தில் தனிமைப்படுத்தல் முடிவுற்ற காலத்தில் வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதழ்களை தம்முடன் கொண்டு வருதல் வேண்டும். முக்கியமாக வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் தனிமைப்படுத்தல் மருத்துவச் சான்றிதழை எப்போதும் தம்வசம் வைத்திருந்தல் வேண்டும்.
12. வயோதிபர்கள், நோயாளர்கள், சிறு குழந்தைகள் தங்களது தனியாள் சுகாதார நலன் கருதி ஆலயத்துக்கு வருகை தருவதை இயன்றவரையில் தவிர்த்தல் நன்று.
13. கொவிட் 19 அறிகுறிகள் (காய்ச்சல், தடிமன், தும்மல், இருமல் போன்றவை) காணப்படுபவர்கள் ஆலயத்துக்கு வருகை தருவதைத் தவிர்ப்பது நன்று.
14. ஆலயச் சுற்றாடலில் வீதிகளில் மண்டகப்படி வைத்தல், பிரசாதம் வழங்கல், தாகசாந்தி, அன்னதானம் வழங்குதல் போன்றவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.
15. தற்போது நாட்டில் நிலவுகின்ற கொவிட் 19 அசாதாரண சூழ்நிலையில் அங்கப்பிரதட்சணம் செய்தல், அடி அழித்தல், கற்பூரச் சட்டி எடுத்தல், காவடி, தூக்குக்காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக்கடன்களின் போது கொரோனா கட்டுப்பாடு தொடர்பான சுகாதார நடைமுறைகளை முறையாகக் கடைப்பிடிக்க முடியாத சூழல் ஏற்படுவதால், இவ்வருடம் மேற்படி நேர்த்திக் கடன்களை ஆலய வளாகத்திலும், அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
16. ஆலயச் சுற்றாடலில் மற்றும் ஆலயத்தை அண்டிய பகுதியில் அடியார்கள் மற்றும் பொதுமக்கள் கூடுவதற்கான தெய்வீக சொற்பொழிவுகள், தெய்வீக இசை அரங்குகள், கலை நிகழ்வுகள் மற்றும் பொழுது போக்குக்கான அனைத்து நிகழ்வுகளும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.
17. ஏற்கனவே ஆலயச்சூழலில் இயங்கி வந்த கடைகள் தொடர்ந்தும் இயங்குவதற்கு அனுமதிக்கப்படும். எனினும் இயங்கி வரும் வியாபார நிலையங்களை விரிவாக்க அனுமதி இல்லை.
18. ஆலயச் சூழலில் உள்ள வெற்று காணிகளிலோ அல்லது கட்டடங்களிலோ புதிய கடைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
19. ஆலயப் பெருந்திருவிழாவின் போது ஆலயச் சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்ற தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
20. தற்போதைய சூழ்நிலையில் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காமை, மீறுகின்றமை போன்றவற்றால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைக் கருத்தில் கொண்டு அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சுகாதார அமைச்சினால், காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் சுகாதார சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள், அத்துடன் யாழ். மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரிகளால் விடுக்கப்படும் சுகாதார நடைமுறைகளைக் கருத்தில் கொண்டு பின்வரும் அறிவுறுத்தல்களை நல்லூர் உற்சவ காலங்களில் ஆலயச் சுற்றாடல்களில் அடியார்களை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கலாசார அமைப்பினால் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு ஏற்றவாறு நடைமுறைகளில் மாற்றம் அல்லது தளர்வுகள் பற்றி அவ்வப்போது அடியார்களுக்கு அறிவிக்கப்பட்டு உடன் நடவடிக்கை எடுக்கப்படும்- என்றுள்ளது.

(க)



# என்ன செய்தது கூட்டமைப்பு?

திருமுருகன்

இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்களுடன் இணக்க அரசியல் நடத்துவதாகக் கூறிக்கொள்ளும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சராக கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் இருந்து அபிவிருத்தியில் சாதிக்க முடியாததை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சியிலிருந்து எண்பித்துக் காட்டியிருக்கின்றது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான அழுத்தத்தையும் பிரயோகித்துக் கொண்டு மறுபுறம் தமிழ் மக்களின் வாழ்வாதார மீட்சிக்கான பணிகளிலும் கணிசமான பங்கைச் செய்திருக்கின்றது.

கூட்டமைப்பு கடந்த 5 ஆண்டுகளில் என்ன செய்தது என்று கேட்பவர்களுக்கு இது தெரியாதா? அல்லது தெரிந்தும் தெரியாதது போன்று இருக்கின்றனரா என்பது புரியவில்லை.

உரிமைப் பயணம் முக்கியமானது. அதில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை. மறுபுறம் போரால் நொந்து நூலான மக்களைத் தேற்றுவதும் தேவையானது. மஹிந்த ராஜபக்ச போர் முடிந்த பின்னர் வடக்கு மாகாணத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டார். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அவர் மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகள் எதனை இலக்காகக் கொண்டவை? அவை ஏன் மேற்கொள்ளப்பட்டன? வடக்கு மக்களின் விருப்புக்கு அமைவாக அவை முன்னெடுக்கப்பட்டனவா?

தேசிய நெடுஞ்சாலைகள் காப்பெற் பூசி மெழுகி அழகாக்கப்பட்டன. வடக்குக்கு ரயில் சேவை விஸ்தரிக்கப்பட்டது. ஆனால் உள்ளூர் வீதிகள் பிச்சைக்காரனின் கிழிந்த சட்டை போலத்தான் இருந்தன. பாடசாலைகள் கொட்டில்களில் இயங்கும் அவலம் தொடரத்தான் செய்தது. மருத்துவமனைகள் சேடம் இழுப்பவை போன்று அபிவிருத்தியைக் காணாது இருந்தன.

போதாக்குறைக்கு மக்கள் காணிகளை ஆக்கிரமித்து உயர் பாதுகாப்பு வலயத்தை அறிவித்து, அதனுள் காணப்பட்ட வீடுகளை இடித்து தரைமட்டமாக்கி, கோயில்களை நிர்மூலமாக்கியது இராணுவம்.

ஆனால் கடந்த 5 ஆண்டுகளில் இராணுவம் வளைப்புச் செய்து மடக்கிய காணிகளை மெல்ல மெல்ல விடுவித்து, விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்களை குடியமர்த்தி, வாழ்வாதாரத்தை வழங்கி, வீடுகளை அமைத்துக் கொடுத்து, வாழ்வதற்கான சூழலை உருவாக்கிக்கொடுத்தது கூட்டமைப்புத்தான்.

உரிமை என்ற ஒற்றைக் குழல் துப்பாக்கி கடந்த 5 ஆண்டுகளாக, அபிவிருத்தி என்ற இன்னொரு குழல் துப்பாக்கியுடன் சேர்ந்துதான் வேட்டுக்களைத் தீர்த்துத் தள்ளியது.

இரட்டைக் குழல் துப்பாக்கியாக கூட்டமைப்பு வேட்டுக்களைத் தீர்த்ததால் அந்தக் கூட்டு மீது கல்லெறிகளும், வசைமாரிகளும் இப்போதும் வீசப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கூட்டமைப்பு மீது திரும்பத் திரும்பச் சொல்லப்பட்ட காழ்ப்புணர்வுக் கருத்துக்கள் உண்மை என்று மக்கள் நம்பித்தான் போனார்கள். சொன்னவர்கள் மக்கள் நம்பும்படியாகச் சொன்னார்கள். மக்கள் நம்புபவர்களும் அப்படிச் சொன்னார்கள். ஆனால் சொன்னவர்களுக்குத் தெரியும், கூட்டமைப்பு மீது தாங்கள் வசைமாரிதான் பாடுகின்றோம் என்று. மக்களின் வாக்கைத் திருடுவதற்காக வசைமாரி பாடினார்கள்.

கூட்டமைப்பு மீது அதிருப்தியில் இருப்பவர்கள், கடந்த 5 ஆண்டுகளில் கூட்டமைப்பால் வடக்கில் ஏற்படுத்தப்பட்ட நன்மைகளை மறந்து போகின்றார்கள். அல்லது வசைமாரிகள் அந்த நன்மைகளை அவர்களது கண்களை மறைத்து விடுகின்றது. காய்க்கின்ற மரம் கல்லெறிபடும் என்பார்கள். ஏதாவது உருப்படியாகச் செய்தால் விமர்சனம் வந்தேதீரும். கூட்டமைப்பு சாதித்துக் காட்டியது. செய்து காட்டியது. அதனால்தான் கூட்டமைப்பை எதிர்ப்பவர்களுக்கு, கூட்டமைப்பை விமர்சிக்க வாய்ப்பாக இருக்கின்றது.

## அபிவிருத்திக்கு 52 ஆயிரம் மில்லியன்

வீதி உட்கட்டுமானம், வீடு திருத்தம், மீள்குடியமர்வோருக்கான வாழ்வாதார உதவிகள், நீர் விநியோகம், மின்சார விநியோகம், அரைக்கும் ஆலைகள் கட்டுமானம், தபால் நிலையக் கட்டுமானங்கள், கிணறுகள் மறுசீரமைப்பு, மலசலகூட நிர்மாணம், பாடசாலைகள் கட்டுமானம், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவமனைக் கட்டடங்கள், சந்தைக் கட்டுமானத் தொகுதிகள் எனப் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் 2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம்ஆண்டுவரையில்யாழ்ப்பாணமாவட்டத்தில்முன்னெடுக்கப்பட்டன. இவற்றுக்காக கடந்த 4 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 52 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. எந்தவொரு காலத்திலும் யாழ்ப்பாணத்துக்கு இவ்வளவு பெரும் தொகை நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாச தோல்வியடைந்த பின்னர் சரத் பொன்சேகா, ரணில் விக்கிரமசிங்கவை நோக்கி விமர்சனத்தை முன்வைத்திருந்தார். வடக்கு மாகாணத்துக்கு இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் அதிகளவான நிதி ஒதுக்கியமையாலேயே சஜித் பிரேமதாச தோல்வியடைந்தார் என்ற விமர்சனத்தை பொன்சேகா எழுப்பினார்.

இவ்வளவு பெருந்தொகை நிதியை ரணில் விக்கிரமசிங்க ஒன்றும் மானசீகமாக, விரும்பி ஒதுக்கவில்லை. கூட்டமைப்பின் அழுத்தமும், ஆதரவுமே இவற்றைச் செய்யவைத்தது. கூட்டமைப்பு மீது காறி உமிழ்பவர்கள், வானத்தை அண்ணாந்து பார்த்து இப்போது காறி உமிழலாம்.



## பலாலி விமான நிலையம்

பலாலி விமான நிலையத்திலிருந்து சர்வதேச விமான சேவை ஆரம்பிக்கவே மாட்டாது, அங்கிருந்து சர்வதேச விமான சேவைகள் இடம்பெறுவது என்பது வெறும் கனவு மாத்திரமே என்ற நிலையை மாற்றியமைத்தது கூட்டமைப்பு. தென்னிலங்கை அரசுகள் விரும்பாவிட்டாலும், இந்திய அரசுக்கு கூட்டமைப்பு பிரயோகித்த அழுத்தம், இந்திய அரசு ஊடாக இலங்கை அரசுக்கு பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் என்பவற்றின் ஊடாக இது சாத்தியமானது.

தமிழர்களின் காவலன் போன்று நீலிக் கண்ணீர் வடிக்கும் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன், பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றவேண்டாம் என்று எழுத்து மூலம் கோரியிருந்தார். மக்கள் காணிகள் சுவீகரிக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்.

மக்களின் ஓர் அங்குல நிலம் கூட மேலதிகமாகச் சுவீகரிக்கப்படாமல், பலாலி விமான நிலையம் யாழ்ப்பாண விமான நிலையமாக, சர்வதேச விமான நிலையமாக மாறியது. இது மக்களுக்குத் தேவையான ஒன்றில்லையா? கூட்டமைப்பு தவிர்ந்த ஏனையோரால் இது சாத்தியமாகியிருக்குமா? விக்னேஸ்வரன் போன்ற ஏட்டுச்சுரைக்காய்த்தனமான தரப்புக்கள் இருந்திருந்தால் யாழ்ப்பாண விமான நிலையம் என்பது கானல் நீராக மாத்திரம்தான் இருந்திருக்கும்.


அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவால் சாதிக்க முடியாததை, பிரதி அமைச்சராக சில காலம் இருந்த அங்கஜனால் சாதிக்க முடியாததை எதிர்க்கட்சியிலிருந்து ஆளும் தரப்பை நெருக்குவாரப்படுத்தி, கூட்டமைப்பு சாதித்துக் காட்டியது.

(16ஆம் பக்கம் பார்க்க)

கம்பவாரிதி ஜெயராஜ்

பகுதி 2

# நீதித்தராசில் தமிழ்மக்கள் கூட்டணி



உலகம் அதிர கூட்டமைப்புக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி, அவர்களை அதிர வைத்து, தனக்கெதிரான சதி வேலைகளையெல்லாம் முறியடித்து, தனது பதவிக்காலத்தின் கடைசிநாள் வரை,முதலமைச்சர் பதவியில் ஒட்டியிருந்துவிட்டு,பதவி காலியான உடனேயே தமிழ் மக்கள் பேரவையின் பொதுக்கூட்டத்தில்,தனது 'தமிழ்மக்கள் கூட்டணி' கட்சியை ஆரம்பித்தார் முதலமைச்சர்.

முதலமைச்சரைப் பொறுத்தவரை அவரது பிறவி இயல்பான,தனித்துவம் தேடும் சுயமுனைப்பும், புகழாலும் வேறுசில விடயங்களாலும் ஏற்பட்ட தலைமை விருப்புமே,அவரது இக்கட்சி ஆக்கத்துக்கான அடிப்படை என்று பலரும் கருதுகின்றனர்.

தமிழ் மக்கள் பெரிய இன்னல்பட்ட காலத்தில் எல்லாம்,கொழும்பில் சுகவாழ்வில் திளைத்திருந்த இவரிடம்,முதலமைச்சர் பதவி கிடைத்தபின்பே, திடீரென இனப்பற்று தலைதூக்கியதாக இவரது எதிரிகள் வசைபாடி நிற்கின்றனர்.எது எப்படியோ, இன்றுவரை செயற்பாடற்ற ,வாய் வீரமிக்க தனது அறிக்கைகளால் மட்டுமே,தன்னை குட்டிப்பிரபாகரனாக வெளிப்படுத்த இவர் முயல்கிறார் என்பது மட்டும் உண்மையாம்.

தன் மடியில் அதிர்ஷ்டத்தால் தவறிவிழுந்த, மாகாணசபை முதலமைச்சர் பதவியை வைத்து, இவர் சாதித்தவை,நிர்வாகக் குழப்பங்களும் இனக் குழப்பங்களும் மட்டுமேயாம். இன நன்மை நோக்கிய வளர்ச்சியில்,வெறும் வாய்ச்சொல் வீரராய் அன்றி,இவர் இதுவரை இயற்றிய சாதனைகள் ஏதும் இல்லை என்பது,வருத்தம் தரும் நிதர்சனமாம்.

வினோதமான வடிவங்கொண்டது இந்தத் தமிழ் மக்கள் கூட்டணி.முதலமைச்சரால் தொடங்கப்பட்ட இக்கட்சியில்,தமது கட்சிகளைக் கரைக்கவிரும்பாமல்,தத்தம் சுயம் பேணி இக்கட்சியில் இணைந்து செயற்பட,சுரேஷும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் ஆரம்பத்தில் முன் வந்தனர்.

தனிப்பட்ட கொள்கை ரீதியான இணைப்பு ஏதும் இல்லாமல், கூட்டமைப்பின் பகைவர்கள் என்ற ஒரே தகுதியைக் கொண்டே,இக்கட்சியில் இணைந்திருக்கும் அணிகள் ஒன்று சேர்ந்திருக்கின்றன. கட்சித் தலைவரான முன்னாள் முதலமைச்சரின் கருத்தை மீறி, அவர் தம் முடிவை ஏற்று நடக்க சம்மதிக்காமல், ஏலவே கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இக்கூட்டணியிலிருந்து வெளியேறி விட்டார்.

தமிழ்மக்கள் பெரிய இன்னல்பட்ட காலத்தில் எல்லாம், கொழும்பில் சுகவாழ்வில் திளைத்திருந்த இவரிடம், முதலமைச்சர் பதவி கிடைத்தபின்பே, திடீரென இனப்பற்று தலைதூக்கியதாக இவரது எதிரிகள் வசைபாடி நிற்கின்றனர். எது எப்படியோ. இன்றுவரை செயற்பாடற்ற , வாய் வீரமிக்க தனது அறிக்கைகளால் மட்டுமே, தன்னை குட்டிப்பிரபாகரனாக வெளிப்படுத்த இவர் முயல்கிறார் என்பது மட்டும் உண்மையாம்.

கிட்டத்தட்ட தமிழரசுக்கட்சியிலிருந்து துரத்தப்பட்ட நிலையில், இக்கட்சியில் இணைந்த அருந்தவபாலன் வேறு போக்கிடம் இல்லாமல் இங்கு வந்து ஒட்டியவர். சுரேஷ் பிரேமச்சந்திரனோ கூட்ட மைப்பின் அலட்சியத்தால் அங்கிருந்து வெளியேறி, பின்னர் தமிழர் விடுதலை கூட்டணித்தலைவர் ஆனந்தசங்கரியுடன் இணைந்து, இப்போது மூன்றாம் கட்டமாகத் தமிழ்மக்கள் கூட்டணியுள் நுழைந்திருக்கிறார். மொத்தத்தில் இவர்களின் இணைப்பு என்பது, எதிரிக்கு எதிரி எனக்கு நண்பன் எனும், வினோதகொள்கை அடிப்படையில் ஆனது என்பதில், எவ்வித ஐயமுமில்லை.

ஆரம்பத்தில் மாகாணசபையில் முதலமைச்சர் பதவி ஏற்றதும், முன்னாள் நீதியரசரின் முதற் பகையாளிகளாக,சுரேஷ் பிரேமச்சந்திரனும் அவரது கட்சியினருமே இருந்தனர். முன்னரே செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி, தமது கட்சிக்குரிய அமைச்சர் பதவியைத்தர முதலமைச்சர் மறுத்தபோது, சுரேஷ் அணியினருக்கும் முதல்வருக்குமான பகை பகிரங்கமாக வெடித்தது. முன்னாள் ஆயுததாரியின் சொற்கேட்டு என்னால் நடக்க முடியாது என்றாற்போல, அப்போது முதலமைச்சர் ஒரு செய்தி வெளியிட்டதாக ஞாபகம். இது முற்கூத்தில் நடந்த விடயம்.

தமிழரசுக்கட்சியினரோடு பகைவெடித்ததன் பின்னதாக, அவர்களுக்குச் சவால் விடுவதற்காக, அவர்களால் அமைச்சுப் பதவிக்குப் பிரேரிக்கப்பட்ட நபரை நிராகரித்து, முன்னர் எவருக்கு அப்பதவியைத் தரமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தாரோ, அதே நபரான சுரேஷின் தம்பியாருக்கு,

பிற்கூத்தில் அமைச்சர் பதவி கொடுத்து, தமிழரசுக் கட்சியின் பல்லை ஆட்டிப் பார்த்தார் முன்னாள் முதலமைச்சர். அந்த மாயா நட்பின் இறுக்கமே இன்று சுரேஷை இக்கட்சிக்குள் அமர்த்தியிருக்கிறது.

சுரேஷை வெளியேற்ற வேண்டும் என்பது கஜேந்திரகுமாரின் கோரிக்கை. அது நடக்காததால் தமிழ் மக்கள் கூட்டணி கட்சியுடனான இணைப்பை முறித்து, வெளியேறியிருக்கிறார் கஜேந்திரகுமார். அவரது நோக்கம் வேறு. தன் வெளியேற்றத்தால் அதிர்ந்து, தன்னை மீள அழைப்பார்கள் என்று, எதிர்பார்த்திருந்த கஜேந்திரகுமாரின் எண்ணம் கைகூடவில்லை.

பிராமணக் கல்யாணங்களில், தன்னைத் திருப்பிக் கூப்பிடுவார்கள் என்னும் நம்பிக்கையில்,காசி யாத்திரை போகப் புறப்படுவது போல்,மாப்பிள்ளை மிடுக்குக் காட்டி புறப்பட்ட கஜேந்திரகுமார், இன்று அந்தரித்த நிலையில் யாரும் அழைக்காமல் அனாதையாக நிற்கிறார்.

சுரேஷுக்கும் கஜேந்திரகுமாருக்கும் இடையிலான முரண்பாடுபற்றி,இருபகுதியிலிருந்தும் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஆனால் உண்மை வேறென அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

கூட்டமைப்பின் மீதான நம்பிக்கை இழப்பால் சலிப்புற்றிருந்த,மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கும் முதலமைச்சரோடு இணைவதன் மூலம்,அவ் ஆதரவைத் தம் பக்கம் திருப்பினால்,முதுமையுற்ற முதலமைச்சருக்குப் பின்னால், கட்சியின் தலைமையையும் மக்கள் ஆதரவையும்,தம்பால் நிலைநிறுத்திக் கொள்ளலாம் என்பதுவே, கஜேந்திரகுமாரின் எண்ணமாக இருந்திருக்கிறது என்கிறார்கள். அதுபோலவே ஆனந்தசங்கரியுடன் இருப்பதைவிட, முன்னாள் முதலமைச்சருடன் இணைந்திருந்தால், ஒருகாலத்திலேனும் தமிழினத்தலைமை தன்பால் வருவதற்கான வாய்ப்பிருக்கும்,என்ற எண்ணத்துடனேயே சுரேஷும் இவ்வணியில் வந்து இணைந்தார் என்பதும்,சிலரின் கருத்தாக இருக்கிறது.

முதலமைச்சருக்குப் பின்னால் இரண்டாம் நிலையில்,தான் மட்டுமே என்று எண்ணியிருந்த கஜேந்திரகுமாரின் எண்ணத்தில்,சுரேஷின் வருகை இடியாக இறங்க,சுரேஷைத் துரத்தினால்த்தான் தன் நோக்கம் நிறைவேறும் என்ற கருத்தோடு,தன்பின்னால் சில இளைஞர்கள் இருக்கிறார்கள் எனும் துணிவால்,சுரேஷை வெளியேற்றப் பிடிவாதம் பிடித்து நிற்கிறார் கஜேந்திரகுமார்.

முதலமைச்சருக்கும் அவர்மீதான ஓர் மென்மைக்கோணம் இல்லாமலில்லை.இதற்கிடையில் ஏதோ ஒரு வெளிச்சக்தியின் அழுத்தம், கஜேந்திரகுமாரை மீண்டும் கட்சிக்குள் ஈர்க்காமல் இருக்க, அவருக்கு எதிராகச் செயற்படுவதாகச் சொல்லப்படுகிறது.தனது அறிக்கைகள்மூலம் இந்தியாவே அச்சக்தி என,கஜேந்திரகுமார் பகிரங்கமாகவே சுட்டிநிற்கிறார்.

அரசியல் அனுபவமும் செயற்பாட்டுத் திறமும்,ஓர் கட்சியை வழிநடத்தும் ஆற்றலும் இல்லாத முன்னாள் முதலமைச்சர், இத் தகுதிகள் உள்ள வேறு சிலரை தம் கட்சிக்குள் இணைத்து, தம் குறைபாட்டை நீக்க முயன்று நிற்கிறார்.அதேபோல் உருப்படியாக இன நன்மை நோக்கி இதுவரை ஏதும் செய்து,மக்கள் மத்தியில் பெயர் பதியாமலும் இருக்கும்,சுரேஷும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும்,மக்கள் செல்வாக்குள்ள ஒருவரை முன்வைத்து, தாம் தலைமைபெற முயன்று நிற்கின்றனர். இங்ஙனமாய் ஒருவருக்கொருவர் தம் குறை நிரப்பும் நோக்கத்தை முன்வைத்து, இணைந்திருக்கும் கட்சித்தலைவர்களால் ஆக்கப்பட்ட, அரை குறை அவியல் கொண்ட கூட்டாஞ் சோறாகவே, தமிழ்மக்கள் கூட்டணிக் கட்சி இணைப்பு இருக்கிறது.

இப்படி தமது குறைநிரப்ப மற்றவர் துணையை நாடி நிற்கும் இவர்களால்,தமிழினத்திற்கு பெரிய அளவில் நன்மை விளையப் போவதில்லை என்பது வெளிப்படை. கல்வி, மக்கள் தொடர்பு, முதிர்ச்சி, நிதானம் என்பவற்றோடு கூடிய, நீண்டகால அரசி

(16ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பால் கிடைத்த அபிவிருத்திகள்

### வீட்டுத் திட்டம்

| ஆண்டு | எண்ணிக்கை | ரூபா |
|---|---|---|
| 2016 | 4008 | 3,285 மில். |
| 2017 | 1699 | 1,328 மில். |
| 2018 | 1699 | 1,330 மில். |
| 2019 | 2945 | 2,945 மில். |
| | **10,351** | **8,888 மில்.** |

### நிதி ஒதுக்கீடு

| ஆண்டு | திட்டங்களின் எண்ணிக்கை | ரூபா |
|---|---|---|
| 2016 | 4,212 | 14,402.74 மில். |
| 2017 | 3,849 | 11,078.51 மில். |
| 2018 | 3,203 | 10,490.47 மில். |
| 2019 | 12,673 | 15,876.11 மில். |
| | **23,937** | **51,874.83 மில்.** |


### 2019ஆம் ஆண்டு மாத்திரம் வடக்குக்கான நிதி ஒதுக்கீடு

## 14,400 மில். ரூபா

| | |
|---|---|
| கம்பரெலியா | 4,500 மில். ரூபா |
| கிராமிய உட்கட்டுமான அபிவிருத்தி | 758 மில். ரூபா |
| வீடமைப்பு | 7,600 மில். ரூபா |
| வாழ்வாதாரம் | 1,311 மில். ரூபா |
| பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி | 22 மில். ரூபா |
| பனை சம்பந்தமான அபிவிருத்தி | 100 மில். ரூபா |

# என்ன செய்தது....

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)




### மயிலிட்டித் துறைமுகம்

1981ஆம் ஆண்டு இலங்கையின் மொத்த மீன்பிடியில் மூன்றிலொரு பங்கை உற்பத்தி செய்தது மயிலிட்டித்துறைமுகம் என்பதை நாங்கள் பெருமையாக பறைசாற்றிக் கொண்டிருந்தோம். எல்லோரும் காலம் காலமாக இதைச் சொல்லிக் கொண்டிருந்தார்களே ஒழிய, மயிலிட்டி மண்ணை மீட்டு அங்கு முன்னர் போன்று பெரிய துறைமுகம் அமைப்பதை யாரும் செய்யவில்லை.

மயிலிட்டி மண் விடுவிக்கப்படவே மாட்டாது என்ற நிலையை மாற்றியமைத்தது யார்? காணி விடுவிப்புக்காக நெருக்குதல் மேல் நெருக்குதல் கொடுத்து, அரசை நெட்டித் தள்ளி இதனைச் செய்வித்தவர்கள் யார்? கூட்டமைப்பாலேயே மீண்டது மயிலிட்டி மண். தொடர் அழுத்தத்தால் அங்கு துறைமுகம் மீண்டும் அமைக்கப்பட்டது.

கூட்டமைப்பை விமர்சிப்பதை மாத்திரமே தமது கட்சியின் அரசியல் கொள்கைகளாகக் கொண்டவர்களுக்கு இவைகளெல்லாம் தெரியாதா? கம்பரெலியா ஊடாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பொக்கற்றையா நிரப்பினார்கள்? யாழ்ப்பாணத்தை ஒரு தடவை சுற்றிப் பார்த்தாலே போதும். குச்சொழுங்கைகள் கூட தார் வீதிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. கம்பரெலிய ஓர் அட்சயபாத்திரமாகத்தான் இருந்தது. மக்களின் அடிப்படைத் தேவைகள் துரிதமாக அபிவிருத்தி கண்டன. மக்கள் வாழ வேண்டும். தமிழர்கள் ஒரு மக்கள் கூட்டம். அந்தக் கூட்டத்துக்காகவே உரிமைப் போர் நடந்து கொண்டிருக்கின்றது. எங்கள் உரிமைகளைத்தான் நாங்கள் கேட்கின்றோம். அந்த உரிமைகள் கிடைக்கும் வரையில், எங்கள் தாயகத்தில் நாங்கள் உயிரோடு வாழவேண்டும். அதற்காகவே கூட்டமைப்பு உரிமை, அபிவிருத்தி என்ற சமாந்தரப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. இந்த நிதர்சனத்தை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

# நீதித்தராசில்...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

யல் அனுபவமிக்க உறுப்பினர் தொகை என்பவை,தமிழ்த் தேசியக் கூட்ட மைப்போடு ஒப்பிடுகையில்,இக் கட்சிக்கு மிகக் குறைவேயாம். இது இக்கட்சியின் குறைபாடுகளில் ஒன்றாய்க் கணிக்கப்படுகிறது.

சுருங்கச் சொன்னால்,செயற்பாட்டுத் திறன் அற்ற தலைமை. மக்கள் மனம் பதியாத, வேறு வேறு திசைகளில் செல்ல நினைக்கும் கூட்டுக்கட்சிகள். குறித்த ஒருசில இளைஞர்களிடம் மட்டுமன்றி, ஊர்தோறும் வேர்விடாத கட்சிச்செல்வாக்கு. தம்மை வளர்ப்பதைவிட எதிரிகளைக் குறை காண்பதிலேயே அதிகம் கவனம் செலுத்தும் செயற்பாட்டுக் குறை. முதுமையால் முழுமையாய் இயங்க முடியாத தலைமைக் குறைபாடு.

மாகாணசபையின் நிர்வாகத்தில் தோல்வியுற்ற கட்சித்தலைவரது ஆட்சித்திறன் பற்றிய நம்பிக்கையீனம். பேச்சாற்றல், கொடைத்தன்மை, மக்கள் ஈர்ப்பு முதலானவையற்ற தலைவர்கள். ஒருவருக்கொருவர் குழி தோண்டக் காத்திருக்கும் இணைந்த தலைவர்களின் மனநிலை.

இக்கட்சியை ஒன்றிணைத்த, மக்கள் செல்வாக்கில்லாத, சமூகப் பிரமுகர்களின் தீர்க்கதரிசனமற்ற வழிகாட்டல். என இக்கட்சியின் குறைபாடுகள் பல வாய் விரிகின்றன.

இக்கட்சியைப் பாராட்ட அதில் நிறைவே இல்லையா? என, கேள்வி பிறக்கும். கருத்துக்கு எட்டிய தூரம்வரை ஆராய்ந்து பார்த்தால்,கிடைக்கும் ஒரே விடையை மட்டுமே அக்கேள்விக்குப் பதிலாக உரைக்கலாம். இதுவரை காலமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குறைபாடுகளை,தட்டிக் கேட்கும் மக்கள் செல்வாக்கோடு கூடிய,எந்த ஒரு அமைப்பும் நம்மத்தியில் இல்லாதிருந்தது. அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கேட்பாரின்றி ஜனநாயகத் தன்மையை இழந்து தன் இஷ்டப்படி நடந்துகொண்டிருந்தது. இன்று அந்நிலையை மாற்றி அவர்களைக் கேள்வி கேட்கும் ஆற்றலோடு, ஓரளவு மக்கள் செல்வாக்கும் பெற்று எழுந்திருக்கும் தமிழ்மக்கள் கூட்டணியால், முன்னைய அந்நிலை மாறியிருக்கிறது. கூட்டமைப்போடு போட்டி போடும் ஆற்றல் பெறாவிடினும், கூட்ட மைப்பின் செயற்பாடுகளுக்கு 'சறுக்குக் கட்டை' போடும் ஆற்றலோடு, நிலைநிற்கும் கட்சியாகத் தமிழ் மக்கள் கூட்டணி மாறியிருப்பது உண்மையேயாம். இன்றைய நிலையில் இது ஒன்றே இனத்துக்கு நன்மை தரக்கூடிய, தமிழ் மக்கள் கூட்டணியின் நிறையாகக் கருதப்படுகிறது. பிழைகள் திருத்தி இன நன்மையை முதன்மைப் படுத்தி, ஒற்றுமைப்பட்டு இக்கட்சி செயற்படுமானால், வருங்காலத்தில் அதன் வளர்ச்சி மேலும் உயரலாம்.

(நன்றி : உகரம்)

# ஈஸ்டர் தாக்குதல்தாரிகளை பாதுகாக்கிறார் தேசப்பிரிய!

## விமல் வீரவன்ஸ இப்படித் தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 22



ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளை பாதுகாக்கும் வகையில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் செயற்படுகின்றார் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல்வீர வன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

ரிஷாட் பதியுதீன் தொடர்பில் சி.ஐ.டியினர் முன்னெடுத்துவரும் விசாரணையை ஓகஸ்ட் 10ஆம் திகதி வரை பிற்போடுமாறு பதில் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு உள்ள அதிகாரம் என்ன எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.


இது தொடர்பில் விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்ததாவது:

ஸஹ்ரான் குழுவால் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணையை திட்டமிட்ட அடிப்படையில் கடந்த அரசாங்கம் மூடிமறைத்தது. இது தொடர்பில் பொலிஸ் அதிகாரிகள் இன்று சாட்சியமளித்துவருகின்றனர்.

ஆதாரங்கள் சகிதமே ரிஷாட் பதியுதீனின் சகோதரர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் ரிஷாட் பதியுதீன் கைதுசெய்யப்படபோகின்றார் என பதில் பொலிஸ்மா அதிபருக்கும், சி.ஐ.டியினருக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் கடிதம் எழுதுகின்றார். குற்றவாளியாக இருந்தாலும் ஓகஸ்ட் 10ஆம் திகதிவரை கைதுசெய்யவேண்டாம் என்பதனையே அவர் கடிதம்மூலம் கூறமுற்படுகின்றார். இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு உள்ள அதிகாரம் என்ன? குற்றவியல் சட்டத்தின் பிரகாரம், குற்றச்செயலில் ஈடுபட்டவரைக் கைது செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு இருக்கின்றது.

இப்படியே போனால் நாளை ரிஷாட்டின் தம்பியை விடுதலைசெய்யுமாறுகூட கோரலாம். எனவே, சுயாதீனம் என்ற போர்வைக்குள் இருந்துக்கொண்டு நாட்டில் சட்டம் செயற்படுவதை இப்படிதான் தடுத்துக் கொண்டிருக்கின்றனர் என்றார்.

(ம-44)





# இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் கவனவீர்ப்பு போராட்டம்

வவுனியா, ஜூலை 22

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினால் கவன வீர்ப்பு போராட்டமொன்று வவுனியா நகரில் கண்டி வீதியில் அமைந்துள்ள கார்கில்ஸ் பூட் சிட்டிக்கு முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அநீதியான முறையில் சேவைத் தடைக்குள்ளான அமில சுனிமலை உடனடியாக சேவையில் இருத்துக , எஸ்.டி.பி வங்கியைப் பாதுகாக்கும் ஊழியர்களின் கூட்டு உடன்படிக்கைகளை உடன் நிறுவுக , ஆணவம் பிடித்த நிர்வாகிகளே எஸ்.டி.பி வங்கியை கூட்டுறவு நோக்கத்திலிருந்து விலக்காதீர் போன்ற பல்வேறு வாசகங்களைத் தாங்கிய பதாகைகளை ஏந்தி இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அமைதியான முறையில் இடம்பெற்ற போராட்டத்தின் போது பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தனர். (ரி1-18)

## கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கு தண்டம்


சாவகச்சேரி. ஜூலை 22

கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கு சாவகச்சேரி நீதிமன்று 10ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

சாவகச்சேரி பொலிஸாருக்கு கடந்த சனிக்கிழமை கிடைத்த தகவலையடுத்து சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் திடீர் சோதனை நடத்தினர்.

அந்த வீட்டில் 5 லீற்றர் கசிப்பைக் கைப்பற்றி அதனை வைத்திருந்த பெண்ணையும் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்டவரை சாவகச்சேரி பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது அந்தப் பெண்ணுக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ரி1-9)



## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பொலிஸ் அதிகாரி சாட்சியம்

கொழும்பு,ஜூலை 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்பட்டதைப் போன்ற வெடிப்பொருள்களே சாய்ந்தமருது மற்றும் நிந்தவூர் பகுதியில் உள்ள பாதுகாப்பு இல்லங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டன என்று சாட்சியம் வழங்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்த பொலிஸ் அதிகாரி சமந்த தீபால் விஜேசூரிய இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் சாட்சியமளிக்கையில்,

சாய்ந்தமருது பாதுகாப்பு இல்லத்தில் இருந்து பொலிஸார் வெடிக்கக்கூடிய 119 பொருள்களை கண்டெடுத்தனர். நிந்தவூர் பாதுகாப்பு இல்லத்தில் இருந்து 91 வெடிப்பொருள்களைக் கண்டெடுத்தனர். இந்த இரண்டு இடங்களில் இருந்தும் பெரும் தொகை ஜெலிக்னைட் குச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

எனினும் இந்த ஜெலிக்னைட் குச்சிகள் எங்கிருந்து விநியோகம் செய்யப்பட்டன என்ற விவரங்கள் பொலிஸாருக்குக் கிடைக்கவில்லை. இதேவேளை அரச புலனாய்வுத் துறையினரின் தகவல்படி இந்த வெடிப்பொருள்கள் நீர்கொழும்பு மற்றும் பாணந்துறை ஆகிய இடங்களில் இருந்து சாய்ந்தமருது மற்றும் நிந்தவூருக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம்.

அத்துடன், சம்மாந்துறையில் கண்டுபிடிக்கப்பட்ட பாதுகாப்பான இல்லத்துக்கு ஜெலிக்னைட் குச்சிகள் குருநாகல் பிரதேசத்தில் இருந்தும் எடுத்து வரப்பட்டன.

இதேவேளை அம்பாறை அட்டாளைச் சேனையில் கண்டுபிடிக்கப்பட்ட வீட்டில் இருந்து ஆவணங்கள் மட்டுமேமீட்கப்பட்டன. அம்பாறையில் மொஹமட் நியாஸ் என்பவரே வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அவர் சாய்ந்தமருது வெடிப்பின் போது உயிரிழந்துவிட்டார் என்பது தெரியவந்தது- என்றார். (க)

# சிறுவர்கள் மூலம் கொரோனா பரவாது

## ஆய்வில் வெளியான தகவல்

**பாடசாலை செல்லும் சிறுவர்கள் மூலமாக கொரோனா வைரஸ் தொற்றுப் பரவ வாய்ப்பில்லை எனத் தெரியவந்துள்ளது.**

பின்லாந்து, சுவீடன் ஆகிய இரு நாடுகளில் கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்விலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

ஒரு வயதிலிருந்து 19 வயதுக்குட்பட்டவர்கள் மற்றும் சிறுவர்கள் இடையே இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இவர்கள் மூலமாக சமூகப்பரவல் ஆகும் வாய்ப்பு மிக குறைவு என இந்த ஆய்வு கூறுகிறது. இந்த ஆய்வின் முடிவுகள் சுவீடன் நாட்டின் தேசிய சுகாதார நிறுவனத்தின் இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏனைய பணிகளில் இருப்போருடன் ஒப்பிடும் போது, சிறுவர் பாடசாலைகளில் ஆசிரியர்களாக பணிபுரிபவர்கள் மூலம் பரவுவது குறைவு என இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் மூலமாக பெரியவர்களுக்கு கொரோனா பரவும் அபாயம் மிகக் குறைவு அல்லது முற்றிலும் இல்லாதது என்றே கூறலாம் என இந்த ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. (ரி1)

## படைவீரரை மோதியவர் 31 வரை விளக்கமறியலில்

சாவகச்சேரி, ஜூலை 22

மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு சமிக்ஞை காட்டிய படைவீரரை மோட்டார் சைக்கிளால் மோதிக் காயப்படுத்திய கைதடி வாசியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றப் பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கைதடியில் இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் படைவீரருக்கு கால் முறிந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி பொலிஸார் விபத்தினை ஏற்படுத்திய நபரைக் கைது செய்து கடந்த ஞாயிறு பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர்.

வழக்கினை விசாரித்த நீதிவான் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியநபரை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ரி1-9)

## திருமலையில் கைக்குண்டுடன் ஒருவர் கைது

திருகோணமலை, ஜூலை 22

திருகோணமலை கிண்ணியா பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் உள்ளூரில் தயாரித்த கைக்குண்டு ஒன்றை வைத்திருந்த ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அவரை எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிவான் பி.சிவக்குமார் நேற்று உத்தரவிட்டார்.

கிண்ணியாப் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த சந்தேகநபர் வெடிமருந்துகளைப் பயன்படுத்தி தயாரித்த கைக்குண்டு ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டிலேயே கைது செய்யப்பட்டு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். இதன் போதே சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ரி2)

## சவூதியில் சிக்கியுள்ள இலங்கையர்

கொழும்பு,ஜூலை 22

சவூதி அரேபியாவில் தொழில் புரியச் சென்று அதற்கான ஒப்பந்த காலம் முடிவடைந்த நிலையில் ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் நாடு திரும்ப முடியாத நிலைமையில் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சவூதி அரேபியாவின் ஜித்தா நகரில் உள்ள இலங்கை தூதரக பிரதிநிதியின் அலுவலகத்தில் மாத்திரம் மீண்டும் நாடு திரும்புவதற்காக 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளனர்.

இவர்களில் ஆயிரம் பேர் சவூதியில் இருந்து வெளியேறுவதற்காக முத்திரைகளையும் தமது கடவுச்சீட்டுக்களில் பதிந்துள்ளனர்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்துச் செல்வதை தற்காலிகமாக நிறுத்த அரசு தீர்மானித்துள்ளதால், இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஜித்தா நகரில் உள்ள இலங்கைத் தூதரகப் பிரதிநிதியின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

எனினும் தூதரக அதிகாரிகள் தம்மை இலங்கைக்கு அனுப்பி வைக்க போதுமான தலையீடுகளை மேற்கொள்ளவில்லை என்பதால், இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சவுதியில் சிக்கியுள்ள தொழிலாளர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். (க)

# உள்ளூர் மருந்துகளுக்குத் திரும்புங்கள் ஆயுள்வேத வைத்தியர்கள் கோரிக்கை



**கொழும்பு, ஜூலை 22**
**கொரோனா வைரஸுக்கு எதிராக உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்காக கொரோனா பரவலின் ஆரம்ப கட்டத்தில் பயன்படுத்திய உள்ளூர் மருந்துகளுக்குத் திரும்புமாறு ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் சட்டத்திட்டங்களுக்கு மதிப்பளிக்கும் அதே நேரத்தில் உள்ளூர் மருந்துகளுக்குத் திரும்புமாறு ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
இஞ்சி, கொத்தமல்லி உட்பட உள்ளூர் ஆயுள்வேத பொருள்களை, வீடுகளில் பயன்படுத்துவன் மூலம் கொரோனாத் தொற்றிடம் இருந்து தப்பிவிடலாம் என ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வைத்தியர் பீ.ஹேவாகமகே தெரிவித்துள்ளார். (ரி1)



## கூரியர் சேவை ஊடாக ஹெரோய்ன் கடத்தியோர் கைது

அம்பாறை, ஜூலை 22
கூரியர் சேவை ஊடாக போதைப்பொருள்களை கடத்தியவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களைக் கைது செய்ய தேடுதல் நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக அம்பாறை மாவட்ட மதுவரி அத்தியட்சகர் என்.சுசாதரன் தெரிவித்தார்.
கடந்த செவ்வாய்க்கிழமை அன்று மாலை தனியார் கூரியர் சேவை ஊடாக ஹெரோய்ன் போதைப்பொருள் கடித உறைகளில் கடத்தப்பட்டு வருவதாகக் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கமைய அம்பாறை புறநகர் பகுதியில் நான்கு சந்தேகநபர்கள் போதைப் பொருளுடன் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.
கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை அம்பாறை நீதிமன்ற நீதிவான் ஹன்சதேவ சாமர திவாகர முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். அதை அடுத்து ஜூலை 29 ஆம் திகதி வரை அனைவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். (ரி2)

## தேர்தல் சட்டமீறல்கள்: 29 பேருக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 22
தேர்தல் விதிமுறை, சட்டமீறல் தொடர்பில் 29 பேருக்கு எதிராக முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்றுள்ளன என, தேர்தல்கள் கடமைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.
இந்த 29 பேரில், 3 வேட்பாளர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
யாழ்ப்பாணம், குருணாகல், புத்தளம் மாவட்டங்களைச் சேர்ந்த வேட்பாளர்கள் மூவரே இவ்வாறு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.
இதேவேளை தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இரு பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட 5 பொலிஸாருக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஜா எல, பொலன்னறுவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளே இவ்வாறு தேர்தல் சட்டங்களை மீறியுள்ளனர். இவர்கள் இந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவியில் இருந்து நீக்கப்பட்டு வேறு இடங்களில் சாதாரண கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதனைவிட பொலிஸ் உத்தியோகத்தர்களின் அமைச்சரவை பாதுகாப்புப்பிரிவின் அதிகாரி ஒருவரும் உள்ளடங்குகின்றார். (ரி2)

## தியத்தலாவையில் இருவருக்குத் தொற்று ஐ.டி.எச்சுக்கு மாற்றம்


கொழும்பு, ஜூலை 22
தியத்தலாவை இராணுவ முகாம் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்த இரு பெண்களுக்கு கொவிட் 19 தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
அதையடுத்து அவர்கள் அங்கொடை ஐ.டி.எச். மருத்துவமனைக்கு விசேட அம்புலன்ஸ் வாகனம் மூலம் நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.
இருவரும் டுபாய் நாட்டிலிருந்து நாடு திரும்பிய நிலையில் தியத்தலாவை தனிமைப்படுத்தும் நிலையத்துக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.
அங்கு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மருத்துவ பரிசோதனையின் போது, இவ்விருவருக்கும் கொவிட் 19 தொற்று ஏற்பட்டிருப்பது உறுதியாகியுள்ளது என்று தனிமைப்படுத்தல் நிலைய பொறுப்பாளர் தெரிவித்தார். (ரி1)

## வெடிபொருள்களுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 2
துப்பாக்கி மற்றும் வெடி பொருள்கள் வைத்திருந்த நபரொருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நீர்கொழும்பு கொச்சிக்கடை தலுவகொடுவ பிரதேசத்தில் நேற்று கைதுசெய்தனர்.
சந்தேகநபரிடமிருந்து ஒரு துப்பாக்கி, 26 ரவைகள் மற்றும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றையும் அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர். இந்த நிலையில் மேற்படி நபர் ஏதேனும் குற்றச் சம்பவங்களை மேற்கொண்டுள்ளாரா அல்லது மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்தாரா என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (ரி1)

## மதுபோதையில் வாகனம் செலுத்திய 100 பேர் கைது

கொழும்பு, ஜூலை 22
மதுபோதையில் வாகனம் செலுத்திய 100 பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் 9 மணி முதல் நேற்று அதிகாலை 4 மணிவரை மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, 100 வாகனங்களும் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என மேல் மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
அத்துடன் பிடியாணை பிறப்பிக் கப்பட்டுள்ள 90 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அந்த அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (ரி2)



## இன்றைய நாள்



**மேடம்**: கோயில் திருப்பணிகளை செய்யும் அரிய வாய்ப்பு உங்களுக்கு கிடைக்கும். நண்பர்களிடையே அளவோடு பழகுவது நல்லது. கலைஞர்கள் விடாமுயற்சியால் வெற்றி காண்பர்.



**இடபம்**: குடும்ப வசதிகளை மேம்படுத்திக்கொள்வீர்கள். அக்கம்பக்கத்தினரின் ஆதரவு கிடைக்கும். வியாபாரிகள் கூடுதலாக ஒரு புதுத்தொழில் தொடங்குவர்.



**மிதுனம்**: மனதில் உற்சாகம் பிறக்கும். கலைத்துறையில் உள்ளோரின் கற்பனை விரிவடையும். பொது வாழ்வில் ஈடுபடுவீர்கள். நண்பர்கள் தக்க சமயத்தில் ஆதரவுக்கரம் நீட்டுவர்.



**கடகம்**:உங்களின் திறமை பளிச்சிடும். பெண்களுக்கு வீட்டிலும், அலுவலகத்திலும் மதிப்பு, மரியாதை கூடும். கணவன், மனைவி இடையே சின்னச் சின்ன சண்டைகள் வந்து விலகும். தாயின் ஆசியை பெறுவீர்கள்.



**சிம்மம்**: மனதில் உற்சாகமும் செயல்களில் நேர்த்தியும் நிறைந்திருக்கும். பெண்களுக்கு உடல்நலக் கோளாறு ஏற்படலாம். மகனின் திருமணம் பற்றிய பேச்சு வார்த்தைகள் சுமூகமாக முடியும்.



**கன்னி**: சிலரின் சந்திப்பு காரணமாக பழைய இனிய சம்பவங்கள் நினைவுக்கு வரும். குடும்பத்தில் இருந்த எதிர்ப்புகள் அடங்கும். மனைவி வழி உறவினரால் செலவுகள் ஏற்படும்.



**துலாம்**: அலுவலகத்தில் சகஊழியர்கள் மனம் விட்டுப் பேசுவார்கள். பிள்ளைகளின் செயலால் பெருமை அடைவீர்கள். கலைஞர்களின் வேலைத் திறமை மதிக்கப்படும்.



**விருச்சிகம்**: பெண்கள் கணவரின் மனம் கவரும் விதத்தில் நடந்து கொள்வர். தாயின் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படுவதால் மகிழ்ச்சி அடைவீர்கள்



**தனுசு**:பணியை சிறப்பாக செய்து முடித்தாலும் அதில் சிலர் குறை காண்பர். குழந்தைகள் உடல் நலனில் அக்கறை தேவை. அனைவருடனும் சுமூகமாகப் பழகுவீர்கள்.



**மகரம்**: அலுவலகத்தில் வீண் கவலைகள் அதிகரிக்கும். பிரியமானவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். பேச்சிலும், செயலிலும் யாரையும் புண்படுத்த வேண்டாம்.



**கும்பம்**: கோபத்தைக் குறைத்தால் நல்லது. நட்புக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். ஒற்றுமை காரணமாக உறவுகளிடையே மகிழ்ச்சி அதிகரிக்கும்.



**மீனம்**: அரசு வகையில் எதிர்பார்த்த ஆதரவுகிடைக்கும். தொழில்வளர்ச்சியில் திருப்தி நிலவும். ஆடை, ஆபரணங்கள் சேரும். உடல் ஆரோக்கியம் அருமையாக இருக்கும். திடீர் பணவரவு உண்டு.



# இங்கிலாந்து பதிலடி இரு அணிகளும் 1:1

லண்டன், ஜூலை 22
மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் 113 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இங்கிலாந்து அணி. முதலாவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி பெற்ற காரணத்தால் தொடர் தற்போது 1:1 என்று சமநிலையில் உள்ளது.



கடந்த 16 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை இந்த ஆட்டம் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் களத்தடுப்பைத் தீர்மானித்தது.
இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 9 இலக்குகளை இழந்து 469 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இங்கிலாந்து அணி ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக ஸ்ரோக்ஸ் 176 ஓட்டங்களையும், டொம் சிபிலி 120 ஓட்டங்களையும், பட்லர் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் சேஸ் 5 இலக்குகளையும், றோச் 2 இலக்குகளையும், ஜோசப், ஹோல்டர் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இன்னிங்ஸுக்காக 287 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரீத்வைட் 75 ஓட்டங்களையும், புரூக்ஸ் 68 ஓட்டங்களையும், சேஸ் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் புரோட், வோக்ஸ் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். கரன் 2 இலக்குகளையும், பெஸ், ஸ்ரோக்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய இங்கிலாந்து அணி வேகமாக அடித்தாடி 3 இலக்குகளை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. ஸ்ரோக்ஸ் ஆட்டமிழக்காது 78 ஓட்டங்களைப் பெற்றார்.
ஒரு நாள் மட்டுமே எஞ்சியிருந்த நிலையில் (இறுதி நாளில்) தீவுகளுக்கு இலக்காக 312 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. எனினும் அந்த அணி 198 ஓட்டங்களில் சுருண்டு மடிந்தது. இதையடுத்து 113 ஓட்டங்களால் வெற்றி பெற்றது இங்கிலாந்து அணி.
ஆட்டநாயகனாக ஸ்ரோக்ஸ் தெரிவானார். தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது. (ம)

## ஸ்கேட்டிங் வீராங்கனை ரஷ்யாவில் உயிரிழப்பு

மெல்போர்ன், ஜூலை 22
ஸ்கேட்டிங் வீராங்கனை எகடெரினா அலெக்ஸாண்ட் ரோவ்ஸ்கியா ரஷ்யாவில் உயிரிழந்துள்ளார்.
ரஷ்யாவில் பிறந்த 20 வயதான எகடெரினா 2018 ஆம் ஆண்டு தென் கொரியாவின் பியாங்சாங் நகரில் நடந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் ஆஸ்திரேலியா சார்பில் களமிறங்கி திறமையை வெளிப்படுத்தி இருந்தார்.
ஆஸ்திரேலிய வீரர் ஹார்லி விண்ட்சருடன் இணைந்து 2017 ஆம் ஆண்டு ஜூனியர் பிரிவில் உலக சாம்பியன் பட்டம் வென்றிருந்தார். இவர் ரஷ்யாவில் உயிரிழந்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால் அவரது உயிரிழப்புக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. (ரி2)

## குவார்டாரோ முதலிடம்




நியூயோர்க், ஜூலை 22
மோட்டோ ஜிபி பந்தய தொடரின் ஸ்பானிஷ் கிராண்ட் பிரிக்ஸ் பந்தயத்தில், யமஹா அணியின் வீரரான ஃபேபியோ குவார்டாரோ முதலிடம் பிடித்துள்ளார்.
இளையோரால் பெரிதும் இரசிக்கப்படும் மோட்டோ ஜிபி, மோட்டார் சைக்கிள் பந்தயம் ஆண்டுக்கு 17 சுற்றுகளாக பல்வேறு நாடுகளில் நடைபெறும். இந்த ஆண்டின் முதலாவது சுற்றான ஸ்பானிஷ் கிராண்ட் பிரிக்ஸ் பந்தயம், கடந்த ஞாயிற்றுக்கிழமை டி ஜெரெஸ் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது. இந்த பந்தயத்தில் 110.6 கிலோமீற்றர் பந்தயத் தூரத்தை நோக்கி, 15 வீரர்கள் மோட்டார் சைக்கிள்களில் சீறிப் பாய்ந்தனர். இதில், யமஹா அணியின் வீரரான ஃபேபியோ குவார்டாரோ, பந்தயத் தூரத்தை 41 நிமிடங்கள், 23.796 வினாடிகளில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். முதலிடத்திற்கான 25 புள்ளிகளையும் அவர் பெற்றுக் கொண்டார். யமஹா அணியின் மற்றொரு வீரரான மேவரிக் வினாலேஸ், 4.603 செக்கன்கள் பின்னிலையில் பந்தயத் தூரத்தைக் கடந்து இரண்டாவது இடத்தைப் பிடித்ததோடு, 20 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டார். டுகாட்டி அணியின் வீரரான ஆண்ட்ரியா டோவிஸியோசோ, 5.946 செக்கன்கள் பின்னிலை யில் பந்தயத் தூரத்தை கடந்து மூன்றாவது இடத்தைப் பிடித்தார். அதற்கான 16 புள்ளிகளையும் அவர் பெற்றுக்கொண்டார்.
மோட்டோ ஜிபி பந்தயத் தொடரின் இரண்டாவது சுற்றான, மலேஷியன் கிராண்ட் பிரிக்ஸ், எதிர்வரும் மாதம் 3 ஆம் திகதி சேப்பாங் ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது. (ரி2)

## ரி20 உலகக் கிண்ணம் ரசிகர்களுக்கு ஏமாற்றம்

### அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைத்தது ஐ.சி.சி.

லண்டன், ஜூலை 22
ஆஸ்திரேலியாவில் இந்த ஆண்டு நடைபெறவிருந்த ஆண்களுக்கான ரி20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று ஐ.சி.சி. உத்தியோகபூர்வமாக நேற்று அறிவித்தது.
ரி20 உலகக் கிண்ணப் போட்டிகள் ஆஸ்திரேலியாவில் ஒக்ரோபர் நவம்பரில் நடைபெற தீர்மானிக்கப் பட்டிருந்த நிலையில், கொரோனா வைரஸ் தொற்றால் போட்டியை நடத்துவது சாத்தியமில்லை என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை கடந்த மாதம் தெரிவித்திருந்தது.
அதையடுத்து நேற்றுக் கூடிய ஐ.சி.சி. இந்த முடிவை எடுத்துள்ளது.
ஐ.சி.சி ரி20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் நவம்பர் மாதம் நடைபெறுவதுடன், இறுதிப் போட்டி நவம்பர் 14 ஆம் திகதி நடக்கும் என்றும், 2022 ஆம் ஆண்டு இருபதுக்கு 20 உலகக் கிண்ணம் ஒக்ரோபர் நவம்பரில் நடைபெறும் எனவும், இறுதிப் போட்டி நவம்பர் 13 ஆம் திகதி நடக்கும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணம் இந்தியாவில் ஒக்ரோபர் நவம்பரில் நடைபெறும் என்றும், இறுதிப் போட்டி நவம்பர் 26 ஆம் திகதி நடைபெறும் எனவும் ஐ.சி.சி தெரிவித்துள்ளது. (ரி2)

## கிரிக்கெட் பயிற்சிகளில் பங்களாதேஷ் வீரர்கள்

டாக்கா, ஜூலை 22
நான்கு மாத இடைவெளிக்குப் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் வீரர்கள் மைதானங்களில் கிரிக்கெட் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளனர்.
கொவிட்19 வைரஸ் தொற்றுக் காரணமாக கடந்த மார்ச் மாதம் முதல் உலகில் இடம்பெற்ற அனைத்து வகை கிரிக்கெட் தொடர்களும் தடைப்பட்டிருந்தன. வைரஸ் தொற்று சற்று குறைந்திருக்கும் தற்போதைய நிலையில் சில நாடுகள் கிரிக்கெட் தொடர்களை மீள ஆரம்பித்துள்ளன.
இந்நிலையில் பங்களாதேஷ் அணி கிரிக்கெட் போட்டிகளை ஆரம்பிப்பது தொடர்பில் அறிவிப்புக்கள் எதையும் வெளியிடாதபோதும், வீரர்கள் தற்போது பயிற்சிகளை ஆரம்பித்துள்ளனர்.
பங்களாதேஷ் வீரர்கள் தனித்தனியாக தங்களது பயிற்சிகளை நான்கு வெவ்வேறு மைதானங்களில் மேற்கொள்வதோடு, முதற்கட்ட பயிற்சிகளுக்காக பங்களாதேஷ் அணியைச் சேர்ந்த 10 வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.
பயிற்சிகளில் ஈடுபடும் வீரர்கள் அனைவரும் எதிர்வரும் ஜூலை 26ஆம் திகதி வரையில் தங்களது பயிற்சிகளை தொடருவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.
பங்களாதேஷ் கிரிக்கெட் சபை பயிற்சிகளில் ஈடுபடும்போது வீரர்களை கண்காணிக்கவும், வீரர்களின் உடல் பாதுகாப்பு தொடர்பான விடயங்களை முகாமைத்துவம் செய்வதற்காகவும் கொவிட்19 வைரஸ் முகாமைத்துவ குழு என்ற பெயரில் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. (ரி2)



# பிரபாகரன் தந்த ஆயுதமே இனப்படுகொலை விடயம்!

## வேட்பாளர் க.சுகாஸ் தெரிவிப்பு

எமது போராட்டம் மௌனிக்கப்பட்டபோது தலைவர் எமக்குத் தந்துவிட்டுப்போன ஆயுதமே இனப்படு கொலை. ஆனால் அந்த ஆயுதத்தை எமது தலைவர்கள் சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டனர் எனக் குற்றஞ் சாட்டினார் வேட்பாளரும் தமிழ்த் தேசிய முன்னணியின் சட்ட ஆலோசகருமான கனகரத்தினம் சுகாஸ். கிளிநொச்சி மாவட்ட சுயாதீன ஊடகவிய லாளர்களின் ஒழுங்கமைப்பில் இடம் பெற்ற பொதுமக்கள் வேட்பா ளர்களுட னான கருத்துக்களம் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறுதிப்போரில் எமது மக்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்டனர். இது ஓர் இனப்படுகொலை. இந்த இனப்படு கொலை என்ற ஆயுதத்தை கையில் எடுக்காமல் யுத்தக் குற்றம் என்ற வலி தற்ற பதத்தை அடிப்படையாகக் கொண்டு ஐ.நாவில் அறிக்கையாக சமர்ப்பித்தது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு. இதனா லேயே சர்வதேச விசாரணை இன்னமும் தொங்கிக் கொண்டு இருக்கிறது. அரசின தும் சில வெளிநாடுகளினதும் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப கூட்டமைப்பு செயற்பட்ட மையாலேயே இந்த நிலமை ஏற்பட்டது. போர்க்குற்றம் புரிந்த குற்றவாளிகளுக்கு பெரிய தண்டனை ஒன்றும் கிடையாது. அடுத்த சுதந்திர தினத்தில் மன்னிப்புக்கூட க் கிடைக்கலாம். கூட்டமைப்பு எமது மக்களின் உரிமைப் போராட்டதை மலி னப்படுத்தியுள்ளது. நாடாளுமன்றுக்கு புதிய அரசமைப்பு தொடர்பான நகல் ஒன்றைக் கடந்த அரசாங்கம் முன்வைத் தது. அதில் ஒற்றையாட்சிக்கும் பௌத்த மதத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்திருந் தது. இவை இரண்டும் எமது மக்களால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டவை. இந்த அரசமைப்புத் தொடர்பாக பல்கலைக் கழக மாணவர்கள் தமிழ்த் தேசியக் கட்சி கள் அனைத்தையும் அழைத்து கலந்து ரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்த னர். அதில் ஒற்றையாட்சி என்ற சொற்ப தத்திற்கு நாங்கள் கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தோம். அந்த இடத்தில் கருத்துக் கூறிய முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் 'அதை ஏற்காவிட்டாலும் பரவாயில்லை. எதிர்க்கத் தேவையில்லை எனத் தெரிவித்தார். அவர் அதனை எதிர்த்தால் அவருக்கு ஓய்வூதியம் கிடைக் கமாட்டாது என்று அவருக்குத் தெரியும். எனவே சந்தர்ப்பவாத அரசியல்வாதி களை ஓரம்கட்டி உண்மையான தமிழ்த் தேசியவாதிகளை நாடாளுமன்றுக்கு அனுப்பி வைக்க வேண்டும் - என் றார். (ம)

பொன்னான தங்களின் ஆசிரிய சேவையினை
பாராட்டி வாழ்த்துகின்றோம்
திருமதி சுமதி பாஸ்கரன் (SLTS-I)
விஞ்ஞானம்
[யா/ நாயன்மார்கட்டு
மகேஸ்வரி வித்தியாசாலை]



சிறப்பான விஞ்ஞான பாடத்தை - மாணவர்
விருப்புடனே கற்று சீர்பெற்று வாழ
முயற்சியுடன் முப்பத்தேழு வருடங்கள்
அயற்சியின்றிக் கற்பித்தீர்.

மாணவர் உயர்வு காண ஆவலாய்
உன்னத பணி செய்தீர்கள்
ஓய்வுபெறும் காலத்தின் முன்னே
ஓய்வெடுத்தீர் உம்பணியில் - இருப்பினும்
உங்கள் சேவை அனைவருக்கும் தேவையானதால்
நீங்களும் தங்கள் குடும்பத்தினரும்
- எல்லா வளங்களும் பெற்று நீடூழி வாழ
நாங்கள் உள்ளங்கனிந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அன்பின் ஆசிரிய நண்பர்கள்
திருமதி கலையரசி சிவகுமார்,
செல்வி. தயாநிதி திருஞான சம்பந்தர்,
திருமதி மகிழினி வித்தியானந்தநேசன்,
திருமதி ரட்ணமாலா மதிதாசன்.

## கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் வடக்கு மாகாண சபை.

### ஆர்வ வெளிப்பாட்டுக்கான (EOI) கோரிக்கை பனை மான்மியம் ஆராய்ச்சி நிதி - 2020/21

**விடயம்:**-வடக்கு மாகாணத்தில் உள்ள பனை சார் உற்பத்திகளில் ஈடுபடும் தொழிலாளர் வர்க்கத்தின் சமூக பொருளாதார மேம்பாட்டினை அடிப்படையாக கொண்ட ஆராய்ச்சிகள் பற்றிய ஆர்வ வெளிப்பாட்டுக் கான விண்ணப்பம் கோரல்.

வருடந்தோறும் யூலை 22-28 வரையான காலப்பகுதியில் தால காவலர் அமரர் திரு.க.கனகராசா அவர்களின் சிரார்த்த தினத்தையொட்டி "பனை மான்மியம்" என்ற பெயரில் பனையெழுச்சி வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு, வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் வழிகாட்டுதல்களுடன், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுகள் மற்றும் அமைப்புக்களினால் விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்வருடமும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கொண்டாடப்படவுள்ள இந்நிகழ்வில் "பனை மான்மிய ஆராய்ச்சி நிதி" என்ற திட்டமொன்று அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றது.

சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான ஆராய்ச்சிகளுக்கான விடயத்தை உள்ளடக்கிய ஆர்வ வெளிப்பாட்டு விண்ணப்பங்களை பல்கலைக்கழக இளமானி மற்றும் முதுமானி மாணவர்கள் உள்ளிட்ட ஆர்வமுள்ளவர்கள் எவரும் தங்கள் விபரங்களுடன் சுயமாக தயாரித்து கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

குறித்த விண்ணப்பங்களில் ஆராய்ச்சிக்கு உத்தேசிக்கப்படும் விடயத்தை பரிசீலிக்கும் குழுவொன்றால் பொருத்தப்பாடுடையவை தெரிவு செய்யப்பட்டு விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும். ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான அதியுச்ச நிதி உதவித்தொகையாக ஒவ்வொரு ஆராய்ச்சிக்கும் ரூபா.10000.00ஐ மூன்று கட்டங்களாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கட்டம் 1 :- தெரிவு செய்யப்பட்ட விடயத்தலைப்பிற்கேற்ப முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளல்.

கட்டம் 2 :- சேகரிக்கப்பட்ட தரவுகளின் பகுப்பாய்விற்குப் பின்னரான அவதானிப்புக்கள் மற்றும் போக்குகள் பற்றி இடைக்கால அறிக்கையிடல்.

கட்டம் 3 :- இறுதி ஆராய்ச்சி அறிக்கையை / கட்டுரையை சமர்ப்பித்தல்.

குறித்த ஆராய்ச்சிக்காக 8 மாதங்கள் வரையான காலப்பகுதி வழங்கப்படும். இறுதி ஆராய்ச்சி அறிக்கைகள் / கட்டுரைகள் "பனை மான்மியம்" நிகழ்வில் வெளியிடப்படும் தாலம் சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

இது பற்றிய மேலதிக தகவல்களினை திணைக்கள கடமை நேரத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்வதோடு ஆர்வ வெளிப்பாட்டு விண்ணப்பங்களினை எதிர்வரும் 31.08.2020 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

பொ.வாகீசன்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும்
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம். வடக்கு மாகாண சபை.
முதியோர் இல்ல வளாகம், கைதடி.
மின்னஞ்சல் முகவரி :- ccdnp@mail.com.
தொலைபேசி இலக்கம் :- 021 205 7063
22.07.2020

வேலையாள்கள் தேவை
யாழில் இயங்கும் பலசரக்கு
மொத்த வியாபார
நிலையத்திற்கு
➤ சிட்டை எழுதுனர் ➤ உதவியாள்கள்
➤ காசாளர்
உடன் தேவை
076 009 4946

கார் உடன் விற்பனைக்கு மிகவும் நல்ல நிலையிலுள்ள
CAU - XXXX இலக்கமுடைய SUZUKI - CELERIO CAR
உடன் விற்பனைக்குண்டு. 071 999 9306

தேர்தல் காலங்களில் பொதுச்சொத்துக்களை
முறையற்ற வகையில் பயன்படுத்துவது
பற்றி உங்களுக்கு தெரியுமா?

அரச வாகனங்கள், உலங்கு வானூர்தி உள்ளிட்ட போக்குவரத்து வசதிகளை பயன்படுத்தல்,
அரச மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்கள்,
அரச கட்டிடங்கள் மற்றும் பொது நிதி செயற்திட்ட மற்றும் அனர்த்த உதவிகளை
பகிர்ந்தளித்தல்,
அரச நியமனங்கள், பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் செய்தல்

போன்ற பொதுச் சொத்துக்களை தவறான முறையில்
பயன்படுத்துவது உங்களது வரிப்பணத்தை துஷ்பிரயோகம்
செய்வதாகும்.



முறைப்பாடுகளுக்கு
தேர்தல் காலங்களில் பொதுச்சொத்துக்களை தவறாக பயன்படுத்துதல் பற்றிய தகவல்கள் பிரஜைகளா-கிய உங்களிடம் காணப்படின் உறுதிப்படுத்தக்கூடிய சாட்சிகளுடன் எமக்கு அனுப்பிவையுங்கள்.
(தகவல்களின் இரகசிய தன்மை பேணப்படும்)

முகவரி
பொதுச் சொத்துக்களை பாதுகாக்கும் வேலைத்திட்டம்
ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா, 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு 05

தொலைநகல்
011 250 1707

துரித அழைப்பு
076 322 3442 076 322 3662

இணையம்: apesalli.lk

மின்னஞ்சல்: pppr@tisrilanka.org

தேர்தல் காலங்களில் பொதுச்சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

# கோத்தாபய அரசில் நம்பிக்கை இல்லை

## ஞானசார தேரர்



தற்போதைய கோத்தாபாய அரசாங்கம் மீது வைத்திருந்த நம்பிக்கை சீர்குலைந்துள்ளதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

குருநாகல் பிரதேசத்தை தனது இராசதானியாகக் கொண்டு ஆட்சி செய்த இரண்டாவது புவனேகபாகு மன்னனின் அரச மண்டபம் உடைக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கோத்தாபய ராஜபக் ஷ போன்றவர்கள் ஆட்சிக்கு வந்தால் இவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று நாம் நினைத்தோம்.

விகாரைகளிலும் சில புரிதல் இல்லாத நபர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு இந்த மரபுகள் குறித்து எந்தக் கவலையும் இல்லை. அவர்களுக்கு தேரர்கள் யாரென்றும் தெரியாது. இந்த நிலையில் பிரதமர் மஹிந்த ராஜ பக் ஷ இது தொடர்பில் கலந்துரையாடி வருகிறார் எனக் கேள்விப்பட்டேன். நியாயப்படுத்துமாறு தேரரர்களிடம் கூறுமாறு அவர்கள் பிரதமரிடம் தெரி விப்ப தாக கேள்விப்பட்டேன்- என்றார். (ஐ)

---

### கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் சிறுவர் பெண்கள் அபிவிருத்திப் பிரிவில் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் செல்வி. ந.உதயனி அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி நவரட்ணம் திருத்தணிகை**

அவர்கள் 18.07.2020 சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவருடைய பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

---

### அகன்றதோ ஐந்தாண்டுகள்



**தெய்வத்திருமகள் சிந்தாமணி (தவம்) கோபாலசிங்கம்**

அமைதியின் அடையாளமாய்
அழகின் மறு உருவமாய்
அறிவியல் பூஞ்சோலையாய்
அளவு காணமுடியா அன்பின் ஆழியாய்
அனைவர் மனங்களிலும்
அணைபோல அசையா இடம் பிடித்த
அற்புதமான எம் அன்னை நீங்கள்

29/1 றக்காவீதி,
யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவில்
குடும்பத்தினர்.

---

எங்கள் குல விளக்குகள் மறைந்த

### 22 ஆம் வருட நினைவு அஞ்சலி





**செல்வி அ.இந்துமதி**
தோற்றம் 05.05.1968
மறைவு 25.07.1998

**திருமதி கி.சிவகெங்கா**
தோற்றம் 11. 04.1950
மறைவு 25.07.1998

திதி: துதியை (22.07.2020)

மூவேழு வருடங்கள் முடிந்தாலென்ன முன்னூறு வருடங்கள் மறைந்தாலென்ன
தங்க மக்கள் உங்கள் மாங்கா நினைவுகள் தங்கி நிற்கும் எங்கள் மனவானிலே
மொட்ட விழ்ந்து மலரும் இள வயதிலே பட்டென காலன் உயிரைப் பறித்தானே
கொடிய அந்த நாள் அன்று கோடான கோடிதேவரும் மறைந்தனரோ.....
எதையும் தாங்கும் இதயம் என்பர் இதைத் தாங்க ஏதம்மா இதயம்
மறைந்தும் மறையாத நினைவுகளோடு மனதில் நிலைத்து வாழ்வீர்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

ஆ.கி.அருணகிரிராசாவும்
குடும்பத்தினரும்.

---

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில்
25 . 04 . 1983



விண்ணில்
22 . 06 . 2020

கடந்த 22.06.2020 திங்கட்கிழமை சிவபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

**திருமதி ஜெயபாலன் சுகந்தினி**
**( உதயன் முன்னாள் பணியாளர் )**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 20.07.2020 திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (22.07.2020) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

188 B, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தம்பிப்பிள்ளை சிவகங்கை
ஜெயதுவாரகன், ஜெயதுவாரகா

---

### ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28 . 10 . 1939



மறைவு
02 . 08 . 2019

**அமரர் யோகேஸ்வரி சண்முகநாதன்**

குடும்பத்தின் ஜீவனாகி
குலவிளக்காய் நீரிருந்தீர்
கொடுங்காலம் வந்ததுவோ
கொண்டும்மைச் சென்றதுவோ
ஆண்டொன்று போனாலும்
ஆறாது உம் பிரிவு
மீண்டுந்தான் காண்பதற்கு
மீளாதோ உம் வாழ்வு
கண்ணீரால் தான் நனைந்து
கரைக்கின்றோம் எம் வாழ்வை
மண்மீது உமை எண்ணும்
மனதோடு வாழ்கின்றோம்

புத்தூர் வீதி,
மீசாலை.

குடும்பத்தினர்.

# முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு தக்க பாடம் புகட்டப்படும்!!

## பெரமுனவின் உறுப்பினர் பளீல் இப்படித் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22

முஸ்லிம் சமூகத்தை காட்டிக்கொடுத்து அரசியல் பிழைப்பு நடத்தும் செயற்பாடுகளை எமது சமூக அரசியல்வாதிகள் கைவிட வேண்டும். எமது மக்கள் இவர்களுக்கு தேர்தலில் சிறந்த பாடத்தை புகட்டுவார்கள் என பெரமுனவின் உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்தார்.

மருதானையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூகத்தைக் காட்டிக்கொடுத்து அரசியல் பிழைப்பு நடத்தும் பேருவளை தொகுதி அரசியல்வாதிகளுக்கு நடைபெறவுள்ள தேர்தலில் எமது சமூகம் சிறந்த பாடத்தைப் புகட்ட வேண்டும். இவர்களின் செயற்பாடுகளாலே முஸ்லிம் சமூகத்துக்குத் தலைகுனிவு ஏற்பட்டுள்ளது. அன்று தர்கா நகர் சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவை வீட்டிற்கு அனுப்பினார்களோ அதே பேருவளைத் தொகுதி மக்கள் இம்முறை தேர்தலில் ரணில், சஜித் தரப்பினருக்கு சிறந்த பாடத்தைப் புகட்ட முன்வந்துள்ளமையைப் பாராட்டுகிறேன். தர்கா நகர் மக்களின் செயற்பாடுகளில் முன்னேற்றங்கள் காணப்படுகின்றமையை பாராட்டுகிறேன்.

பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவிடம் இனவாதம் இல்லை என்பதை எமது மக்கள் விளங்கிக்கொண்டுள்ளனர். உண்மையான இனவாதிகள் யார் என்பதையும் அவர்கள் இன்று தெரிந்து வைத்துள்ளனர். தர்கா நகர் சம்பவத்துக்கு பின்னால் இருந்த ராஜித சேனாரட்ன, சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் இன்று யாருடன் கூட்டு சேர்ந்துள்ளனர் என்பதை சமூகம் சிந்திக்க வேண்டும். இதனால் களுத்துறை மாவட்ட முஸ்லிம்கள் நடைபெறவுள்ள தேர்தலில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ தலைமையிலான அரசை நிறுவ வேண்டும் - என்றார். (ம)

# நீங்கா நினைவில் ஓராண்டு

அன்னை மடியில்
24 . 06 . 1965



ஆண்டவன் அடியில்
02 . 08 . 2019

## அமரர் Dr. கதிரேசு தயாளன்

**(வைத்திய கலாநிதி - சாவகச்சேரி வைத்தியசாலை - சாவகச்சேரி - MOH Office)**

ஆண்டொன்று ஆனாலும்
ஆறிடுமோ எம் மனம்
அண்ணா என்றழைக்க
அண்ணாவும் எமக்கில்லை - தம்பி
என்றழைக்க தம்பியும் எமக்கில்லை

பத்தியுடன் இறைவழிபாடு செய்ததன் பயனோ
மண்ணுலகம் வேண்டாம் - உனக்கு
விண்ணுலகம் வா என்று அழைத்தனரோ!

நள்ளிரவில் நீ கண்வளரமுன்
காற்றோடு காற்றாய் காலனும் - உனைக்
காவு கொள்ள வந்தானோ!
சத்தம் சலனமின்றி நீயும்
எமைப் பிரிந்து சென்றாயோ

புன்னகை தவழும் - உன்
வதனத்தை இப்புவியிலே தேடித் துடிக்குது
எங்களிதயம் பூமியிலே
மீண்டும் வந்து புன்னகைப்பாயா!

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

என்றும் உந்தன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs 33093) (13.17)

# ரஞ்சித்தின் மேல்முறையீடு நீதிமன்றத்தால் தள்ளுபடி

கொழும்பு, ஜூலை 22
ஐ.தே.க.விலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தாக்கல் செய்த மேன்முறையீட்டை, சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.
இது தொடர்பில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து தாக்கல்செய்யப்பட்ட மேன்முறையீட்டைத் தள்ளுபடிசெய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், வழக்கிற்கான செலவாக ரூபா 25,000 இனை பிரதிவாதிக்கு செலுத்துமாறும் உத்தரவிட்டது.
இவ் வழக்கின் பிரதிவாதிகளாக ஐ.தே.க. தலைவர், உதவித் தலைவர், கட்சியின் பொதுச் செயலாளர் ஆகியோர் பெயரிடப்பட்டிருந்தனர்.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேரா மற்றும் மிஸ்பா சத்தார் ஆகியோரும் பிரதித் தலைவர் ரவி கருணநாயக்க சார்பாக, சட்டத்தரணி நியோமால் பெல்பொலவும், பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் சார்பாக சட்டத்தரணி எராஜ் டி சில்வாவும் ஆஜரானதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ரி3)

# சுகாதாரப் பரிசோதகர்களது விலகலை ஏற்க முடியாது

## வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தொகுப்பாளர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 22
**தமது தொழில் கோரிக்கையின் அடிப்படையில் கொரோனா ஒழிப்பு பணிகளில் இருந்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் விலகியுள்ளமையை ஏற்றுக் கொள்ள முடியாது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தொகுப்பாளர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
நாட்டின் பல தொழிற்சங்கங்களுக்கு தமது தொழில் சம்பந்தமாக நிறைவேற்றப்பட வேண்டிய பல கோரிக்கைகள் இருக்கின்றன.
எனினும் இது கோரிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பமல்ல என்பது அனைவருக்கும் தெரியும். பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். வெளியிடப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் மூலம் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு அதிகாரங்கள் கிடைத்திருக்கின்றன என சட்ட ஆலோசகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். எனினும் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு இருக்கும் அதிகாரங்களை எவருக்கும் வழங்கமுடியாது.
டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் பொதுச் சுகாதார அதிகாரிகளுடன் பொலிஸார் இணைந்து செயற்படும் விதத்தில், கொரோனா ஒழிப்பு வேலைத்திட்டத்திலும் பொலிஸாருடனோ அல்லது வேறு தரப்பினருடனோ இணைந்து சுகாதார பரிசோதகர்கள் பணியாற்றுவதில் தவறில்லை. இவர்கள் திடீரென தொழிற்சங்க போராட்டத்தில் இறங்கியுள்ளதால், தனிமைப்படுத்தப்பட வேண்டிய நபர்கள் சரியாக தனிமைப்படுத்தப்படுவதில்லை, இடைநடுவில் பணிகளில் இருந்து விலகியுள்ளமையால், ஆபத்தான நிலைமை ஏற்படக்கூடும்.
அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் பல விடயங்கள் சம்பந்தமான கோரிக்கைகள் இருக்கின்றன.
இவற்றைப் பெற்றுக்கொள்ள தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடவேண்டும்.
எனினும் தற்போதைய நிலைமையில் நாட்டை ஆபத்துக்குள் தள்ள முடியாது என்பதால், அனைத்துப் பிரச்சினைகளையும் மறந்துவிட்டு கொரோனா ஒழிப்புக்கு முன்னுரிமை வழங்கி வருகின்றோம். எனத் தெரிவித்துள்ளார்.

# உயிரியல் பூங்காவுக்கு அமைச்சரவை அங்கீகாரம்



கொழும்பு, ஜூலை 22
புதிய உயிரியல் தொழில்நுட்ப புத்தாக்க பூங்கா மற்றும் இலங்கை உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத்தை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக உயர் கல்வி, தொழில் நுட்பம், புத்தாக்கம் மற்றும் தகவல் தொடர்பாடல் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.
இந்தத் திட்டம் பல கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு உத்திதேசிக்கப்பட்டுள்ளதுடன் புதிய உயிரியல் தொழில்நுட்ப பூங்காவை ஹோமாகம, பிட்டிப்பன என்ற இடங்களில் BiotechnoPlex கட்டடத்தை நிர்மாணிப்பதற்கும், இதற்கான ஏனைய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.
எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள திறைசேரி செயலாளரதும் உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சின் செயலாளரினதும் இணைத் தலைமைத்துவத்தைக் கொண்ட செயற்பாட்டுக் குழு மற்றும் சம்பந்தப்பட்ட துறையில் விசேட நிபுணத்துவத்தைக் கொண்டவர்களின் தொழில்நுட்பக் குழு ஆகியவற்றை நியமிப்பதற்கு இதன்போது அங்கீகாரம் வழங்கப்பட்டது.
மேலும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் இணை நிறுவனமான சர்வதேச மரபணு தொழில்நுட்ப நிறுவனத்தின் ஒத்துழைப்புடன், உயிரியல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப ஆய்வாளர்களின் கருத்துக்கள் மற்றும் வணிக ரீதியிலான தயாரிப்புக்களை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமான சூழலை உருவாக்குவதற்குத் தேவையான வசதிகள் செய்யப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# மகனைத் துன்புறுத்திய இராணுவச் சிப்பாய்க்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

கொழும்பு, ஜூலை 22
தனது மகனைத் தாக்கி, துன்புறுத்திய குற்றத்துக்காக விசேட தேவையுடைய முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றால் 20 வருட ஒத்திவைக்கப்பட்ட 22 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு 4 இலட்சம் ரூபாவை நஷ்டஈடாக வழங்கவும் உத்தரவிடப்பட்டது.
தனது மகனின் தோற்பட்டை மற்றும் பிறப்புறுப்பைக் கடுமையாக உதைத்து சித்திரவதை செய்தார் என்று அவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.
இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் மேல் நீதிமன்றின் முன்னிலையில் குற்றத்தை ஒப்புக்கொண்ட பிரதிவாதிக்கு 2 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்த மேல்நீதிமன்ற நீதிபதி சுமுது பிரேமச்சந்திர, அதனை 20 வருடங்களுக்கு ஒத்திவைக்க உத்தரவிட்டார்.
மகனுக்கு 4 இலட்சம் ரூபா நஷ்டஈடாக செலுத்துமாறும் உத்தரவிட்டார். யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவருவதற்கு பங்களிப்பு செய்துள்ள குறித்த சிப்பாய் ஒரு கண்ணையும் காலையும் இழந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி1)

# சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாத பள்ளிவாசல்களுக்கு எதிராக நடவடிக்கை

## வக்பு சபையின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22
நாட்டில் ஒரு சில பள்ளிவாசல்களைத் தவிர பெரும் எண்ணிக்கையிலான பள்ளிவாசல்களில் ஜும்ஆ உட்பட கூட்டுத் தொழுகைகளின் போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதாரப் பிரிவு மற்றும் வக்பு சபையின் வழிகாட்டல்களும், நிபந்தனைகளும் பின்பற்றப்படுவதில்லை. அவ்வாறான பள்ளிவாசல்களின் நிர்வாகத்துக்கு எதிராக அரசின் சட்டத்தின் கீழும், வக்பு சபையின் சட்டத்தின் கீழும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என வக்பு சபையின் தலைவர் சப்ரி ஹலீம்தீன் தெரிவித்துள்ளார்.
நாட்டில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலை உருவாகும் அபாயம் உள்ளதால் அதுபற்றி ஆராய்வதற்கு வக்பு சபை கலந்துரையாடலொன்றை நேற்று முன்தினம் நடத்தியது. வக்பு சபையின் தலைமையில், முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில், 22 முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகள் கலந்துகொண்டன.
நாட்டில் ஒரு சில பள்ளிவாசல்களைத் தவிர ஏனையவற்றில் சுகாதார பிரிவினதும், வக்பு சபையினதும் கொரோனா வழிகாட்டல்கள், நிபந்தனைகள் பின்பற்றப்படுவதில்லை என்பதை, கூட்டத்தில் கலந்து கொண்ட 22 அமைப்புகளும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டன.
வக்பு சபையின் தலைவர் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்;
பள்ளிவாசல்களில் கூட்டுத் தொழுகைகளில் ஈடுபடுவோர் கட்டாயமாகப் பதிவு செய்து கொள்ளவேண்டும், தொழுகை விரிப்பு கட்டாயமாக ஒவ்வொருவரும் கொண்டுவரவேண்டும், முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும். இந் நிபந்தனைகளைப் பின்பற்றாதவிடத்து தொழுகைக்கு அனுமதிக்கப்படக்கூடாது இது பள்ளிவாசல் நிர்வாகத்தின் கடமையாகும்.
அத்தோடு தொழுகையின் போது ஒரு மீற்றர் இடைவெளிபேணப்படவேண்டும். ஒருவருக்கு 9 சதுர அடிகள் இடம் ஒதுக்கப்படவேண்டும்.
சுகாதாரப் பிரிவினர் வக்பு சபையினதும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினதும் வேண்டுகோளுக்கு இணங்கவே கூட்டுத் தொழுகையில் ஈடுபடுவோரின் எண்ணிக்கையை 100 என மட்டுப்படுத்தாது பள்ளிவாசல்களில் இடவசதிக்கேற்ப ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணி அதற்குரிய எண்ணிக்கையானோர் தொழ முடியும் என அனுமதி வழங்கியுள்ளது- என்றார். (ரி2)

# வீரவன்சவின் மனைவிக்கு பிடியாணை

கொழும்பு, ஜூலை 22
அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி சஷி வீரவன்சவை கைதுசெய்யுமாறு கொழும்பு பிரதம நீதிவான் பிடியாணை பிறப்பித்துள்ளார்.
போலியான ஆவணங்களைக்கொண்டு கடவுச்சீட்டு தயாரித்தமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணைகளுக்காக, வீரவன்சவின் மனைவி நேற்று நீதிமன்றில் ஆஜராகாதமையினால் அவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

எலிக் காய்ச்சல்

# கடந்த ஆறு மாதங்களில் எட்டு மடங்காக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22

**கடந்த ஆறு மாத காலப்பகுதிக்குள் எலிக் காய்ச்சல் இலங்கையில் சுமார் எட்டு மடங்கு அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் நோய் பரவுதல் தடுப்புப் பிரிவு மருத்துவ நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் 17 ஆம் திகதி வரை இக் காய்ச்சலினால் 23 ஆயிரத்து 371 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் கடந்த வருடம் 6021 பேர் மாத்திரமே இக்காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளனர். இதேவேளை இக் காலப் பகுதியில் அதிகூடிய நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர். அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் இக்காய்ச்சலுக்கு உள்ளானோரின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. இந்நிலையில் இவ்வருடம் மொனறாகலை மாவட்டம் தவிர்ந்த அனைத்து மாவட்டங்களிலும் எலிக்காய்ச்சலுக்கு உள்ளானவர்கள் பதிவாகியுள்ளனர்.



இலங்கையில் விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கக்கூடியதாக விளங்கிவரும் இக் காய்ச்சல், அண்மைக் காலமாக சேறுசகதிமிக்க பிரதேசங்களில் நடமாடுபவர்கள், விளையாடுபவர்கள், வேலைகளில் ஈடுபடுபவர்கள் போன்றோரைப் பெரிதும் பாதிக்கக்கூடியதாகவும் உள்ளது. அதனால் இப் பகுதிகளில் வேலைகளில் ஈடுபடுபவர்கள் பிரதேசத்திலுள்ள மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் இக் காய்ச்சலைத் தவிர்த்துக்கொள்ளக்கூடிய மாத்திரைகளை இலவசமாகப் பெற்றுப் பாவிக்குமாறும் கை, கால்களில் காயங்களைக் கொண்டிருப்பவர்கள் அவற்றில் நீர் புகமுடியாதவாறும் மூடிக்கொள்ளவேண்டும்.

இக்காய்ச்சலுக்கு உள்ளாகின்றவர்களுக்கு கடும் காய்ச்சல், கடும் தலைவலி, உடலில் குளிர் உணர்வு, உடலில் மஞ்சள் தன்மை ஏற்படல், சிறு நீர் வெளியேறுவது குறைவடைதல் போன்ற அறிகுறிகளும் வெளிப்படும். எனவே சந்தேகத்திற்கிடமான அறிகுறிகளைக் கொண்டிருப்பவர்கள் தாமதியாது மருத்துவரை அணுகி ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும், இக்காய்ச்சல் குறித்து மக்கள் விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ரி3)

## மதுபோதையில் வாகனம் செலுத்தியோருக்கு அபராதம்

சாவகச்சேரி ஜூலை 22

மதுபோதையில் வாகனம், செலுத்திய எட்டுப் பேருக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்று 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை தண்டமாக விதித்துள்ளது.

சாவகச்சேரி பொலிஸாரால் மதுபோதையில் வாகனம் செலுத்திய 7 பேருக்கு எதிராகவும், மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய நபரொருவருக்கு எதிராகவும் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. வழக்குகள் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

அதன்போது, மதுபோதையில் வாகனம் செலுத்திய 7 பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மதுபோதையில் சாரதிய அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ரி1-9)



## கடும் காற்றால் பப்பாசி நாசம்!

வவுனியா, ஜூலை 22

வவுனியா கோதண்டர் நொச்சிகுளம் பகுதியில் நேற்று வீசிய பலத்த காற்றினால் அதிகளவான பப்பாசிச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் மாலை வீசிய காற்றுடன் கூடிய மழையினால் பல்வேறு பகுதிகளில் மரங்கள் சரிந்து வீழ்ந்துள்ளன. அதேசமயம், விவசாய செய்கையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கோதண்டர் நொச்சிகுளம் பகுதியில் வீசிய கடும் காற்றினால் இருவேறு பகுதிகளில் இரண்டு ஏக்கர் அளவிலான பப்பாசிச் செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் 2 இலட்சம் ரூபாய் அளவில் நட்டம் ஏற்பட்டுள்ளதுடன், தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ரி1-110)

## அரிச்சல் முனைக்கு ஊடுருவிய நபர்

### *பொலிஸார் தீவிர விசாரணை*

மன்னார், ஜூலை 22

தலைமன்னாரில் இருந்து படகு மூலம் தனுஸ்கோடி அரிச்சல் முனைக்குச் சென்றதாகக் கூறப்படும் நபரைக் கைது செய்த மெரைன் பொலிஸார், தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தலைமன்னாரில் இருந்து தனுஸ்கோடி அரிச்சல் முனை கடல் பகுதியில் முஹமது உசேன் (வயது68) என்பவரை நேற்று செவ்வாய்க்கிழமை காலை தலைமன்னாரில் இருந்து சென்ற படகு இறக்கி விட்டு தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து தகவல் அறிந்த மெரைன் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று ஊடுருவியவரை மெரைன் போலிஸ் ஆய்வாளர் கனகராஜ் கைது செய்து பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர்.


அவரிடம் மெரைன், கியூபிரிவு, உளவுத்துறை சுங்கத் துறை உள்ளிட்ட பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

விசாரணையில், திருச்சியில் வசித்ததாகவும், புடவை வியாபாரத்துக்காக இலங்கை சென்றதாகவும், தற்போது போக்குவரத்து முடக்கப்பட்டதால் 30 ஆயிரம் ரூபா செலுத்தி இலங்கை படகில் இந்தியா வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-56)

## சட்டவிரோத கடலட்டைகள் பிடிப்பு; மீனவருக்கு ரூ.5000 அபராதம்

மன்னார், ஜூலை 22



மன்னார் அரிப்பு பகுதியில் சட்டபூர்வமற்ற முறையில் கடல் அட்டைகள் பிடித்த குற்றச்சாட் டின்பேரில் கடந்த சனிக்கிழமை மீனவர் ஒருவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இம் மீனவரிடமிருந்து 118 கட்ல் அட்டைகள் கைப்பற்றப்பட்டிருந்தன. சந்தேகநபரையும் கைப்பற்றப்பட்ட கடல் அட்டைகளையும் கடற்படையினர் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் கையளித்திருந்தனர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளால் மீனவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவர் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டமையையடுத்து குற்றவாளிக்கு 5000 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கடல் அட்டைகள் அரச உடைமையாக்கப்பட்டன. தொடர்ந்து அவைகள் ஏலத் தில் விற்பதற்கான நடவடிக்கையை மன்னார் கடற்றொழில் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (ரி3-60)

## போதைப்பொருள் குற்றங்கள்; ஒரு நாளில் 364 பேர் கைது

கொழும்பு, ஜூலை 22

மேல் மாகாணத்தில் விசேட சோதனை நடவடிக்கைகளில் போதைப்பொருள் குற்றத்துக்குரிய சந்தேகநபர்கள் 364 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் காலை 6 மணி முதல் நேற்று அதிகாலை 5.30 வரை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் 1,708 பேர் முகக்கவ சமின்றி நடமாடியமைக்காக கைதுசெய்யப்பட்டு எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட் டுள்ளனர். (ரி1)

# மீள இயங்குகின்றன தனியார் கல்வி நிலையங்கள்

## பெற்றோர் கடும் விசனம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

இலங்கை முழுவதும் பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில், தனியார் கல்வி நிலையங்கள் மீளஆரம்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்ட கொரோனாவின் இரண்டாம் அலை காரணமாக மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் அனைத்தும் மீண்டும் எதிர் வரும் 27ஆம் திகதி வரை மூடப்பட்டுள்ளன. இந்நிலையில் கொரோனா அச்சம் இன்னும் முழுமையாக நீங்காத நிலையில் தனியார்கல்வி நிலையங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை தமக்கு அச்சமாக இருப்பதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர். (ரி3-108)

## வீதியில்...

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது பெண்ணின் பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சங்கிலியை இழுத்து அறுத்தனர். சுதாகரித்துக் கொண்ட பெண் அதனைத் தடுத்தபோதும் தங்கச் சங்கிலியின் அரைவாசிப் பகுதியை கொள்ளையர் அறுத்துச் சென்றுள்ளனர். இது தொடர்பில் விசாரணை நடக்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-159)

## ஒரே...

வென்னப்புவ வைக்கால் பிரதேசத்தில் சுற்றுலா விடுதியொன்றில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரில் மூவருக்கு கொரோனா தொற்றியமை உறுதியாகியுள்ளது. அவர்கள் சிகிச்சைக்காக மினுவாங்கொட கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட குடும்பம் கடந்த 7ஆம் திகதி டுபாயில் இருந்து நாட்டுக்கு வந்துள்ளது. (ம)

## ரயிலுடன்...

ஆசைப்பிள்ளை ஏற்றத்துக்கு அருகாமையில் இந்த விபத்து நடந்துள்ளது.
நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ரயிலுடன் மோதுண்டே இந்த மாடுகள் உயிரிழந்தன. மாடுகள் மோதியதால் ரயிலுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. மிருசுவில் ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டு திருத்தப்பட்டு ஒரு மணி நேரத்தின் பின்னர் பயணத்தைத் தொடர்ந்தது. நேற்றுமுன்தினம் தென்மராட்சியில் கடும் மழை பெய்ய நிலையில் மாடுகள் ரயில் தண்டவாளத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோதே இந்த விபத்து நடந்துள்ளது. (ம-159,9)

## கொரோனா...

ஒழிப்பு நடவடிக்கையில் இருந்து பொதுச் சுகாதார பரிசோதகர்களின் தொழிற்சங்கம் ஏற்கனவே விலகியிருந்தது. இதையடுத்து டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் தொழிற்சங்கத்துக்கு தமது ஆதரவைத் தெரிவித்து தாமும் கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கையில் இருந்து விலகியுள்ளனர். சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் செயற்பட்ட டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்தும் அனைத்து கடமைகளில் இருந்தும் விலகி கொள்கின்றோம் என்று அறிவித்துள்ளனர்.
அதேநேரம், பொதுச் சுகாதார பரிசோதகர்களின் விலகலைக் கடுமையாகக் கண்டித்துள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு சில பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளது. (ம)



# ஜனாதிபதி கோத்தாபய நுவரெலியாவில் பரப்புரை

கொழும்பு, ஜூலை 22

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின் கீழ் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஜனாதிபதி நுவரெலியாவில் நேற்று பரப்புரையில் ஈடுபட்டார்.

பொதுமக்களுடன் சிநேகப்பூர்வமாக கலந்துரையாடினார் என்றும் மக்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்துகொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக அங்கு நேற்று பயணம் மேற்கொண்டிருந்தார். இதனடிப்படையில் ஹங்குராங்கெத்த, வலப்பனை, கந்தபளை, நுவரெலியா, கொத்மலை, தலவாக்கலை, கொட்டகலை, நோர்வூட், மஸ்கெலியா, ஆகிய பகுதிகளுக்கு ஜனாதிபதி சென்றிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், மாவட்டத்தின் வேட்பாளருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் கொட்டகலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பரப்புரைக் கூட்டத்தில், சர்வமத வழிபாட்டில் பங்கேற்ற பின்னர், மக்களை சந்திந்தார்.

பரப்புரைக் கூட்டங்களில் ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர்கள் பங்கேற்றிருந்தனர். (து)



# தலைப்பிறை தென்படவில்லை ஹஜ் பெருநாள் முதலாம் திகதி

## கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 22

நாட்டின் எந்தப் பகுதியிலும் நேற்று தலைப்பிறை தென்படாத காரணத்தால், எதிர்வரும் முதலாம் திகதி புனித ஹஜ் பெருநாள் கொண்டாடப்படவுள்ளதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் வாழும் இஸ்லாமியர்களால் கொண்டாடப்படுகின்ற முக்கிய பண்டிகை, ஈதுல் அல்ஹா எனப்படும் புனித ஹஜ் பெருநாள்.

இறை தூதர்களில் ஒருவரான இப்றாஹிம் நபியின் தியாகத்தை நினைவுகூறும் விதமாக ஹஜ் பெருநாள் கொண்டாடப்படுகின்றது.

வசதிபடைத்த முஸ்லிம்கள் இஸ்லாத்தின் ஐந்து முக்கிய கடமைகளில் இறுதிக் கடமையான ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்காக புனித மக்கா சென்று மார்க்கக் கடமைகளில் ஈடுபடுவார்கள். (து)

# தேர்தல்கால வன்முறைகளை கண்காணிக்க இணையத்தளம்!

கொழும்பு, ஜூலை 22

பொதுத்தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளைக் கண்காணிப்பதற்கென ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நெஷனல் அமைப்பு ApeSalli.lk என்ற புதிய இணையத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி பொதுத் தேர்தல் இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தலில் முறைகேடுகள் வன்முறைகள் இடம்பெறுகின்றனவா என்று இறுக்கமாகக் கண்காணிக்கப்படுகின்றது. இந்த நிலையில் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நெஷனல் என்னும் நிறுவனம் மேற்படி இணையத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

தேர்தல் வன்முறைகள் தொடர்பில் இந்த இணையத்தளம் மூலம் முறைப்பாடுகளைப் பதிவுசெய்ய முடியும். தேர்தல் வன்முறை இடம்பெறும் இடத்தை இலங்கை வரைபடத்தினூடாக அவதானிக்கக்கூடிய வகையில் இந்த இணையப்பக்கம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. (ம)

## ஸ்மார்ட்...

கூறப்படுகின்றது.

மனுதாரரின் மனுவில் உள்ள குறைபாடு, எழுத்தாணை மனுவுக்குத் தேவையான கருவூலங்கள் தொடர்பாக திருப்தியின்மை மற்றும் மனுதாரரிடம் உள்ள கீழ்த்தரமான நோக்கம் போன்றவற்றால் இந்த எழுத்தாணை மனு தள்ளுபடி செய்யப்படுவதாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் கட்டளையிட்டார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஸ்மார்ட் கோபுரங்கள் அமைப்பதற்குக் தடை விதிக்கக்கோரி கடந்த ஆண்டு ஜூலையில் வடக்கு மாகாண மேல் நீதிமன்றில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் நவாந்துறை வடக்கைச் சேர்ந்த செல்லப்பர் பத்மநாதன் என்ற 34 வயதுடையவர் இந்த மனுவை தனது சட்டத்தரணி ரிஷிகேசனி சத்தியநாதன் ஊடாக சமர்ப்பித்தார்.

யாழ். மாநகர சபையை முதலாவது பிரதிவாதியாகவும் யாழ். மாநகர முதல்வர் இரண்டாவது பிரதிவாதியாகவும் யாழ். மாநகர ஆணையாளர் மூன்றாவது பிரதிவாதியாகவும், குறித்த ஸ்மார்ட் கோபுரங்களை அமைக்கும் இடொற்கோ நிறுவனத்தினர் நான்காவது பிரதிவாதியாகவும் இணைக்கப்பட்டனர். இந்த நீதிப்பேராணை மனு இன்று கட்டளைக்காக வந்தது.

இதன்போது, 'எழுத்தாணை விண்ணப்பங்கள் தொடர்பாக மனுதாரர் இதய சுத்தியுடனும் சுத்தமான கரங்களுடனும் தமது கோரிக்கைகளை முன்வைக்கவேண்டும். ஒளிவு மறைவு, குறுகிய நோக்கங்கள் எதுவும் குறித்த விண்ணப்பங்களின் அடிப்படையாக அமைய முடியாது.

தனித்த நல்நோக்கம் அல்லது பொதுவான நல்நோக்கம் ஒன்றின் மீது எழுத்தாணை மனு அமைக்கப்படலாம். மாறாக கீழ்த்தரமான நோக்கம், மறைமுகத் தேவை என்பவற்றுக்காக எழுத்தாணை கோரிக்கைகள் முன்வைக்கப்படுவது குறித்த மனுக்களை நிராகரிப்பதற்குப் போதுமானதாக அமைந்துவிடும்.

இந்த மனுவைப் பொறுத்தவரையில் மனுதாரர் யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் மாநகர முதல்வருக்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கை வேறு பின்னணியைக் கொண்டுள்ளது என்பது சற்று சிந்திக்க வேண்டியதாக அமைகின்றது.

எனவே மனுதாரரின், மனுவில் உள்ள குறைபாடு, எழுத்தாணை மனுவுக்குத் தேவையான கருவூலங்கள் தொடர்பாக திருப்தி ஏற்படுத்தப்படாமை மற்றும் மனுதாரரிடம் உள்ள கீழ்த்தரமான நோக்கம் என்பவற்றால் இந்த எழுத்தாணை மனு தள்ளுபடி செய்யப்படுகின்றது என்று மன்று உத்தரவிட்டது. (ம)

## இராணுவத்தின்...

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் சட்டத்துறை தலைவரும் முதுநிலை விரிவுரையாளருமான கலாநிதி குமார வடிவேல் குருபரன் மீதான நடவடிக்கை தொடர்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் அனைத்துப்பீட மாணவர் ஒன்றியத்தினர் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தற்போது தனது சுயாதீனத்தை இழந்து நிற்கின்றது. அரசியல் தலையீடுகளுக்கும் இராணுவத் தலையீடுகள் மற்றும் கட்டமைப்புக்களுக்கு பல்கலையின் புலமை சார்ந்த சுயாதீனம் பறிக்கப்படுவது கண்டிக்கத்தக்கது. இவ்வாறான விடயங்கள் களையப்பட வேண்டும். முதுநிலை விரிவுரையாளர் குருபரனுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். நீதிமன்றில் வழக்காடுதல், பல்கலையில் விரிவுரையாளராகப் பணியாற்றுதல் ஆகியவற்றில் ஒன்றைமட்டும் செய்ய வேண்டும் என்று அவருக்கு விதிக்கப்பட்ட நிபந்தனை நீக்கப்பட்டு இரண்டு செயற்பாடுகளையும் அவர் ஆற்றுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தமிழர்களின், சமூகங்களின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் ஒரு சமூக நிறுவனம். சமூகத்தினூடே ஊடாட்டத்தை ஏற்படுத்துவதற்கு பல்கலைக்கு கனதியான பங்குண்டு. எனவே தற்போது கலாநிதி குருபரன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையை அழிவினுடைய ஆரம்பப் புள்ளியாகவே பார்க்கின்றோம் - என்றனர். (ம)

## கொக்குவில்...

யும் திருடிச் சென்றுள்ளனர் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். பூசகர் ஒருவரின் வீட்டில் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. திருட்டுத் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (த-159)


# மரண அறிவித்தல்

தோற்றம்
20
06
1939



மறைவு
10
07
2020

## திரு.சுப்பிரமணியம் ஜெகதாசன்

பருத்தித்துறை ஐயனார் கலட்டியைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தில் றெட்போட் (Retford) வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு.சுப்பிரமணியம் ஜெகதாசன் (வைத்திய கலாநிதி) 10.07.2020 அன்று காலமானார். அன்னார் சிவாம்பிகையின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சி.சுப்பிரமணியம் (நில அளவையாளர்), குலமணி ஆகியோரின் புதல்வரும் காலஞ்சென்ற ந.சபாரட்ணம் (ஓய்வு பெற்ற அதிபர்) லீலாவதி ஆகியோரின் மருமகனும் தர்ஷிணியின் பாசமிகு தந்தையும் வெங்கட் ப்ரீதம் (வைத்திய கலாநிதி) அவர்களின் அன்பு மாமனாரும் ஆரியா, அனிஷ் ஆகியோரின் பாட்டனாரும் சிவதாசன் காலஞ்சென்ற அருள்தாசன், சிவநாயகி, காலஞ்சென்ற குலதாசன், அருள்நாயகி, ஜெகநாயகி ஆகியோரின் அன்புச்சகோதரரும் சிவகுமாரன்(வைத்திய கலாநிதி) வாமதேவன், சோமநாதன், ராஜ்குமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 23.07.2020 அன்று இறுதிக்கிரியைகள் நடைப்பெற்று நொட்டிங்கம் (Nottingham)இல் தகனம் செய்யப்படும்.

தகவல்: சகோதரர்கள்

## ஆசிரியையின்...

இருந்த தன்னியக்க பணப்பரிமாற்று அட்டை மூலமாக பணம் எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடற்புலத்தில் நேற்று மதியம் நடந்துள்ளது.

அந்த முன்பள்ளி ஆசிரியை புன்னாலைக்கட்டுவன் இலங்கை வங்கிக்குச் சென்று பின்னர் கடைக்குச் சென்று கொண்டிருந்தார். அவரைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் இருவர் வந்தனர். அவர்களில் ஒருவர் ஆலயம் ஒன்றின் பெயரைக்கூறி அது எங்கே இருக்கின்றது என்றுகேட்டபடி இறங்கி வந்து சைக்கிள் கூடையில் இருந்த கைப்பையை எடுத்துக்கொண்டு இருவரும் தப்பிச்சென்றுள்ளார். கைப்பையில் ஒருதொகைப்பணம், அலைபேசி, தேசிய அடையாள அட்டை மற்றும் தன்னியக்க பணப்பரிமாற்று அட்டை (ஏ.ரி.எம். காட்) என்பன இருந்தன.

அந்த ஆசிரியை அடுத்தகட்ட நடவடிக்கையில் இறங்கியபோதும், அதற்குள்ளாக அவருடைய தன்னியக்க பணப்பரிமாற்று அட்டை மூலமாக வங்கிக் கணக்கிலிருந்து பணத்தை எடுத்துக்கொண்டு ஏனைய ஆவணங்கள் மற்றும் கைப்பைக்குள்ளிருந்த பணம் என்பனவற்றையும் கொண்டு சென்றுவிட்டனர்.

தன்னியக்க பணப்பரிமாற்று அட்டை மூலமாக மதியம் 1.10 மணிக்கு நல்லூர் தன்னியக்க இயந்திரத்தில் திருடர்கள் பணம் பெற்றுக்கொண்டமை தெரியவந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பற்றி சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-159)

## தமிழர்...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டது. சமஷ்டி அடிப்படையிலான தன்னாட்சியே தீர்வு என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதை நிராகரித்தும் விமர்சித்தும் அரச தரப்பினரும் பௌத்த தேரர்களும் கருத்து வெளியிட்டிருந்தனர்.

சமஷ்டி தனிநாடுதான். தமிழர்கள் அதை மீண்டும் கோரினால், வடக்கு, கிழக்கில் குருதி ஆறுதான் ஓடும். அரசு வழங்கும் தீர்வை ஏற்றுக்கொண்டு தமிழர்கள் பேசாமல் அமைதியாக இருக்கவேண்டும் என்று பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், ராவண பலய அமைப்பின் பொதுச்செயலாளர் இத்தானந்தே சுகத தேரர், தேசிய பௌத்த புத்திஜீவிகள் சங்க சபையின் தலைவர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்திருந்தனர்.

நாட்டின் அரசமைப்புக்கு முரணாகத் தனித்தமிழீழத்தைப் பிரகடனப்படுத்தியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது என மஹிந்த அணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, டியூ குணசேகர ஆகியோர் கூட்டாகக் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

"பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகள் சமஷ்டி கேட்டார்கள், தன்னாட்சி கேட்டார்கள், தமிழீழம் கேட்டார்கள், தனிநாடு கேட்டார்கள். இதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஒவ்வொன்று ஒவ்வொன்றாகக் கேட்டு வருகின்றார்கள். எமது ஆட்சியில் இவை தொடர்பான பேச்சுக்கே இடமில்லை" என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார். இது தொடர்பாகக் கேட்டபோதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமஷ்டி என்றால் பிரிவினை அல்ல. சமஷ்டியைக் கேட்கும் உரித்து எமக்கு உண்டு. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நீதிமன்றத் தீர்ப்பே இதற்கு ஆதாரமாக உள்ளது. தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவது எமது கடமை. சமஷ்டி அடிப்படையிலான தன்னாட்சி தீர்வைக் கேட்பது எமது உரிமை.

வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் மக்களின் தாயகம். இந்த இரு மாகாணங்களும் இணைந்த மாநிலத்தைக் கோரியே தமிழர்கள் ஆரம்பத்தில் அஹிம்சை வழியில் போராடினார்கள். அதன்பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுத வழியில் போராடினார்கள். 2009ஆம் ஆண்டு போர் நிறைவுக்கு வந்த பின்னர் தமிழர்கள் மீண்டும் அஹிம்சை வழியில் போராடுகின்றார்கள்.

நாம் தனிநாடு கேட்டு அப்போதும் போராடவில்லை; இப்போதும் போராடவில்லை. அதாவது ஒருமித்த பிளவுபடாத நாட்டுக்குள் வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணமாக இருக்கவேண்டும் என்றே கோருகின்றோம். சமஷ்டி அடிப்படையிலான தன்னாட்சி தீர்வையே கேட்கின்றோம். இதை அறியாமல் உணராமல் ஆளுந் தரப்பினரும், கடும்போக்குவாத பௌத்த தேரர்களும் கருத்துக்களை வெளியிடக் கூடாது.

தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தைத் தோற்கடித்தோம்; அவர்கள் அநாதைகள்; அவர்கள் அடிமைகள் என்ற எண்ணத்துடன் கருத்துக்கள் வெளியிடுவதை ஆளுந்தரப்பினரும், கடும்போக்குவாத பௌத்த தேரர்களும் நிறுத்த வேண்டும். 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் சர்வதேசப் பலத்துடன் தமிழர்கள் இருக்கின்றார்கள் என்பதை எம்மை விமர்சிப்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

சமஷ்டி என்றால் பிரிவினை அல்ல. சமஷ்டியைக் கேட்கும் உரித்து எமக்கு உண்டு. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நீதிமன்றத் தீர்ப்பே இதற்கு ஆதாரமாக உள்ளது. தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவது எமது கடமை. சமஷ்டி அடிப்படையிலான தன்னாட்சி தீர்வைக் கேட்பது எமது உரிமை. இதை எவரும் தடுக்க முடியாது.

இந்த நாட்டில் நாம் பிரிந்து சென்று வாழ விரும்பவில்லை. ஒருமித்த நாட்டுக்குள் சகல இனத்தவர்களுடனும் எப்போதும் ஒற்றுமையுடன் சேர்ந்து வாழவே விரும்புகின்றோம். அதேவேளை, எமக்கான உரிமைகள் அனைத்தும் கிடைக்க வேண்டும். நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும். அதற்காகவே தமிழர்கள் அன்று தொட்டு இன்றுவரை போராடி வருகின்றார்கள்என்றார். (ஏ-22)

## சுகாதார...

கண்ட முடிவு எடுக்கப்பட்டது என்று மாநகர சபையின் பதில் முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர சபை பதில் முதல்வர் தெரிவித்ததாவது

கொரோனாத் தொற்று அச்சநிலை இன்னமும் தீரவில்லை. நல்லூர் கோவில் பெருந்திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில் பக்தர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கோவில் நிர்வாகம் மற்றும் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையுடன் முன்னர் ஆராயப்பட்டது. அதன்போது 50 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கலாம் என்று சுகாதார மருத்துவ அதிகாரி கூறியிருந்தார். அந்த விடயத்தையும் கவனத்தில்கொண்டு குறைந்தது 300 பக்தர்கள் பங்கேற்கக்கூடியதாக என்றாலும் அனுமதி வழங்கப்படவேண்டும் என்று பிரதமர் மற்றும் சுகாதார அமைச்சு உள்ளிட்ட தரப்பினருக்கு கடிதம் அனுப்பியிருந்தேன்.

இன்று (நேற்று) சபை அமர்வில் பக்தர்களின் எண்ணிக்கை விடயம் ஆராயப்பட்டது. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியவாறு எவ்வளவு பக்தர்களும் வழிபாடுகளில் பங்கேற்கமுடியும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. சுகாதார நடைமுறைகள் சீராக இருக்குமாயின் மேலும் சில கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது பற்றி ஆராயலாம்.

சபையின் முடிவின்படி இந்தமுறை காவடி எடுத்தல், அங்கப் பிரதட்சணம் செய்தல் மற்றும் அடியழித்தல் போன்ற நேர்த்திக் கடன்களுக்கு இதுவரை அனுமதி கிடைக்கவில்லை. எண்ணிக்கை விடயத்திலும் சுகாதார அமைச்சுத் தரப்பினர் தொடர்புகொண்டு விடயங்களை கேட்கின்றனர். அவர்கள் இது பற்றி அறிவுறுத்தல்களை விடக்கூடும்.என்றார். (து)

## யாழ்ப்பாணத்தி...

பெற்று வருவதனால், தேர்தல்கள் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக தேர்தல்கள் ஆணைக்குழுவால், ஓய்வுபெற்ற பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் மொஹமட் மற்றும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ். அச்சுதன் இருவரும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். மொஹமட் யாழ்ப்பாணத்துக்கு நேற்றைய தினமே வருகை தந்து பணிகளை ஆரம்பித்துள்ளார். அச்சுதன் இன்றைய தினம் வருகை தந்து தனது பணிகளை ஆரம்பிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த மொஹமட் உடனடியாகவே, யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அவசர கலந்துரையாடலை நடத்தியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அடுத்த மாத ஆரம்பத்திலேயே வருகை தர இருந்ததாகவும், யாழ்ப்பாணத்திலிருந்து தொடர்ச்சியாக கொழும்பு அலுவலகத்துக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய அவசரமாக இங்கு அனுப்பியதாகவும் மொஹமட் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளுக்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் கொழும்பு அலுவலகத்துக்கு அதிகளவான முறைப்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றதோ தெரியவில்லை என்றும் மொஹமட் இதன்போது தெரிவித்துள்ளார். (ஒ.5)

## கைதாகி...

பாடுகளையும் எதிர்நோக்கினர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடர்ச்சியாக, ஆளும் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர் ஒருவரால் வீதிகள் திறக்கப்பட்டு வருகின்றன. தேர்தல் காலங்களில் அவற்றை மேற்கொள்ள முடியாது என்ற போதும் தொடர்ந்தும் வீதிகள் திறக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பான முறைப்பாடுகள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திலுள்ள தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கு வழங்கினாலும், அவர்கள் சம்பவ இடத்துக்குச் செல்லும் போது நிகழ்வு நடைபெற்று முடிவடைந்து விடும். அல்லது சம்பந்தப்பட்ட வேட்பாளர் நிகழ்வில் பங்கேற்கமாட்டார். இது தொடர்பிலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைமையகத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வீதி, மேற்படி ஆளும் கட்சி வேட்பாளரால் பி.ப 3 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளதாக, நேற்றுக் காலை 11 மணிக்கு மாவட்டச் செயலக தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்றபோது, அங்கு சில இளைஞர்கள் அலங்காரிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். வீதி திறப்பு விழாவுக்கான அலங்காரிப்பு வேலைகளை மேற்கொள்வதாக, அதிகாரிகளிடம் அவர்கள் கூறியுள்ளனர். சம்பவ இடத்திலிருந்து நெல்லியடிப் பொலிஸுக்கு அதிகாரிகள் அலைபேசி ஊடாக தகவல் வழங்கியுள்ளனர். மதியம் 12 மணியளவில் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்ட போதும், பகல் ஒரு மணியளவிலேயே அவர்கள் அங்கு வந்துள்ளனர்.

தேர்தல் விதிமுறைக் குற்றச்சாட்டில் இளைஞர்களைக் கைது செய்யுமாறு தேர்தல்கள் முறைப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் பொலிஸாருக்கு கூறிய போதும் பொலிஸார் இளைஞர்களைக் கைது செய்யவில்லை. அவர்கள் தேர்தல் விதிமுறையில் ஈடுபட்டமைக்கு போதிய ஆதாரம் இல்லை என்று கூறியுள்ளனர். இதனையடுத்து தேர்தல்கள் முறைப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள், மாவட்டச் செயலகத்திலுள்ள பொலிஸ் பிரிவுக்கு தகவல் தெரிவித்துள்ளனர். அவர்கள் ஊடாக நெல்லியடிப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட அழுத்தம் காரணமாக இருவரை சந்தேகத்தில் கைது செய்தனர். கைது செய்து நெல்லியடிப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று அரை மணி நேரத்தில் பொலிஸ் பிணை வழங்கி விடுதலை செய்தனர். (ஒ.5,6,26)

## பெண்ணை...

பெண் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொள்ளையர் வீடு புகுந்து நகைகளை எடுத்துள்ளனர். பெண் ஒருவர் அணிந்திருந்த வளையலை கழற்றித் தருமாறு அச்சுறுத்தி தாக்கியுள்ளனர். அதன்போதே பெண்ணின் கையை வெட்டி காயப்படுத்தியுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம்பொலிஸார்விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (த-159)

## யாழ்ப்பாணம்...

எனினும் அது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவிப்புக்கள் எதுவும் வெளியாகவில்லை. விமானம் மூலம் இன்று நண்பகல் யாழ்ப்பாணம் வரும் அவர் தென்மராட்சி மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் சிறப்புக் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார் என்று கூறப்படுகின்றது. இன்றே அவர் கொழும்பு திரும்புவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-26)

## 16 பவுண்...

இந்த மர்மக் கும்பல் வாளைக்காட்டி மிரட்டி மேற்படி பொருள்களை கொள்ளையிட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. சுமார் அரை மணிநேரம் அந்தக் குழு வீட்டில் உள்ள அறைகள் மற்றும் அலுமாரிகளை சோதனையிட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-27)

# கொரோனாத் தடுப்பு மருந்து ஆராய்ச்சி: ஒக்ஸ்போர்ட்டுக்கு முதற்கட்ட வெற்றி

- நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்
- பக்க விளைவுகள் ஏதும் இல்லை

லண்டன், ஜூலை 22

**கொரோனா வைரஸுக்கு எதிராக பிரிட்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் உருவாக்கிய தடுப்பூசியானது மனிதர்களின் உடலில் கொரோனாவை எதிர்த்துப் போராட நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்துள் ளதுடன், எந்த பக்க விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை என்று ஆரம்ப கட்ட மருத்துவ சோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.**



'எ.ஷெட்.டி1222' என அழைக் கப்படும் இந்த தடுப்பூசி, அஸ்த்ரா செனிகா மற்றும் ஐக் கிய இராச்சியத்தின் ஒக்ஸ் போர்டு பல்கலைக்கழக விஞ் ஞானிகளால் உருவாக்கப்பட் டது. ஆராய்ச்சியில், விஞ்ஞானி கள் தங்களது பரிசோதனை கொவிட்19 க்கான தடுப்பூசி 18 முதல் 55 வயதுடையவர்களில் இரட்டை நோயெதிர்ப்பு சக்தியை உருவாக்கியது என்று கண்டறிந் துள்ளனர். இந்த தடுப்பூசி குறித்து ஒக்ஸ்போர்ட் பல்க லைக்கழகத்தின் ஜென்னர் நிறு வனத்தின் பணிப்பாளர் வைத்தி யர் அட்ரியன் ஹில் கூறுகை யில்,

இந்தப் பரிசோதனை மேற் கொள்ளப்பட்ட அனைவரிடமும் பெரும்பாலும் சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியைக் கண்டுள் ளோம். குறிப்பாக நோய் எதிர்ப்பு சக்தி அமைப்பின் இரட்டை கரங் களையும் இந்த தடுப்பூசி உரு வாக்கி இருக்கிறது. அதாவது தொற்றுநோ யைத் தடுக் கும் மூலக்கூ றுகளாக நடு நிலையான ஆன்டிபா யோடிகள் உற்பத்தி செய்யப்படு கின்றன. அத் துடன் உடலின் டிசெல்களில் ஒரு எதிர்வினை யையும் இந்த தடுப்பூசி ஏற்படுத் துகிறது. இந்த செல்கள் கொரோனா வைரஸை எதிர்த் துப் போராட உதவுகிறது. ஏனெ னில் கொரோனாவை கட்டுப்ப டுத்துவதில் டிசெல்லின் எதிர் வினை மற்றும் ஆன்டிபாடிகள் இருப்பது மிகவும் முக்கியமானது என்பதற்கான ஆதாரங்கள் அதி கரித்து வருகின்றன. இந்த தடுப் பூசியின் 2 ஆம் கட்ட பரிசோத னையில் இந்த நோய் எதிர்ப்பு சக்தி மேலும் அதிகரிக்கலாம். மருந்து தயாரிப்பு நிறுவனமான அஸ்த்ரா செனிகாவுடன் இணைந்து இந்தத் தடுப்பூசியை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் உலக அளவில் தயாரிக்கும். ஏற்கனவே 200 கோடி தடுப்பூ சிகளுக்கு முன்பதிவு கிடைத்துள் ளது என்றும் கூறினார். கொவிட் 19 க்கு எதிராக 150 க்கும் மேற் பட்ட தடுப்பூசிகள் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில் உள் ளன. மேலும் அமெரிக்க மருந்து தயாரிப்பாளர் ஃபைசர் மற்றும் சீனாவின் கன்சினோ பயோலாஜிக்ஸ் ஆகியவை திங் களன்று சாதகமான பதில்க ளைத் தெரிவித்துள்ளன. (ரி1)

## நளினி உயிர்மாய்க்க முயற்சி

ராஜீவ் காந்தி கொலை வழக் கில் குற்றம் சாட்டப்பட்டு 29 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையிலுள்ள நளினி தூக்கி லிட்டு தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

வேலூர் பெண்கள் தனிச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நளினிக்கும் சக கைதிகளுக் கும் சண்டை ஏற்பட்டடுள்ளது. இந்த விவகாரத்தில் நளினி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க திட்டமிட்டிருந்து என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் நளினி துணியைக் கொண்டு தூக்கிட்டுத் தற்கொலை செய் துகொள்ள நேற்று இரவு முயற்சி செய்துள்ளார் எனவும் சிறைக் காவலர்கள் அதைத் தடுத்து நிறுத்தி யுள்ளனர் என வும் தகவல்கள் வெளியாகி யுள்ளன. (ரி1)

## அரபு இராச்சியத்தின் புதன் கிரக ஆராய்ச்சி வெற்றிகரமாக ஆரம்பம்



புதன் கிரகத்தை ஆராய்ச்சி செய் வதற்கான ஐக்கிய அரபு இராச்சி யத்தின் திட்டம் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதன் கிரகத்தின் காலநிலை மற் றும் வானிலை தொடர்பில் ஆராய்வதற்காக வடிவமைக்கப் பட்ட இந்த செய்மதி ஜப்பானிலி ருந்து விண்ணில் செலுத்தப் பட்டுள்ளது.

ஜப்பானின் றெனெகஷீமா விண் வெளித் தளத்திலிருந்து, எச்.ரு.எ றொக்கெட் ஒன்றினூடாக இந்த செய்மதி அனுப்பப்பட்டுள் ளது.

இது புதன் கிரகத்தைச் சென்றடைவதற்கு 500 மில்லியன் கிலோமீற்றர் கள் பயணிக்க வேண்டி யுள்ளது. கடந்த வாரம் செய்மதியை அனுப்புவ தற்கு மேற்கொள்ளப்பட்ட இரண்டு முயற்சிகளும் மோச மான காலநிலை காரணமாக கைவிடப்பட்டிருந்தன. 2021பெப் ரவரி மாதம் இந்தச் செய்மதி இலக்கைச் சென்றடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய அரபு இராச்சியம் உருவாக்கப் பட்டு 50 ஆண்டுகள் நிறைவடை கின்ற குறித்த மாதத்தில், இந்த மைல் கல்லை எட்டுவதற்கான முயற்சியாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

**உணவகம் வாடகைக்கு**

யாழ். கச்சேரிக்கு அருகாமையில் உண வகத்திற்கு தேவையான அனைத்து தளபாடங்கள். பாத்திரங்கள் மற்றும் குளி ரூட்டிகளுடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 459 8083, 077 790 6054

**ஹோட்டல் பொருள்கள் விற்பனை**

முதலாம் குறுக்குத் தெரு. குருநகர் யாழ்ப்பாணத் தில் அமைந்துள்ள பிரபல ஹோட்டல் ஒன்றின் அனைத்துப் பொருள்களும் விற்பனைக்கு உண்டு. (ஹோட்டல் வாடகைக்கும் விடப்படும்)

076 821 0569, 076 468 8609

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

சகல நாடுகளுக்கான துரித தபால்கள். பொதிகள் சேவை எம் ஊடாக நடைபெறுகின்றன. மிக குறைந்த கட்டணத்தில் வடமாகாணத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்

திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd

321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 0777554528, 0212227835

**ஆங்கில கற்கை நெறிகள்**

அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்
6 மாத கற்கை நெறி
Spoken English
Diploma in English
7.30 - 9.00
9.00 - 10.30
10.30 - 12.00
12.00 - 1.30
3.00 - 4.30
4.30 - 6.00
கட்டணம் - மாதம் 1000 /= மட்டுமே
ஆரம்பம்: 25.07.2020 - Weekend Classes
27.07.2020 - Week days
ELAS இல. 51, மாநகரசபை புதிய கட்டடத்தொகுதி கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:076 223 5678, 076 697 3040

**தென்னங்காணி விற்பனைக்குண்டு**

மிருசுவிலுக்கும், எழுதுமட்டுவாழுக்கும் இடை யில் A9 வீதியில் இருந்து 750 மீற்றர் தூரத் தில் பாதுகாப்பான சுற்றுவேலி உள்ள கட்டுக் கிணறு, குழாய்க்கிணறு, புதிதாக அமைக்கப் பட்ட வீடு, பத்து வருடம் நிறைவடைந்து தற்பொழுது காய்க்கத் தொடங்கியுள்ள பத்து ஏக்கர் தென்னங்காணி விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர். தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி இல:- 077 649 1027



மிருசுவில் படித்த மகளிர் திட்டம்
அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தானம்
அலங்கார உற்சவம் - 2020
ஞானதுர்க்கை அம்மன் அடியார்களே!
அம்பிகைக்கு சார்வரி வருஷ ஆனிமாதம் 31 ஆம் நாள் (15.07.2020) புதன்கிழமை **கொடியேற்றத்துடன்** ஆரம்பமாகி **அலங்கார உற்சவம்** நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.
எதிர்வரும் (23.07.2020) வியாழக்கிழமை **தேர்த்திருவிழாவும்** வாக்களிக்கும் தாயானவள் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறி வீதி உலாவரும் காட்சியும், அடுத்தநாள் (24.07.2020) வெள்ளிக்கிழமை **தீர்த்த உற்சவமானது** ஆடிப்பூர நன்னாளுடன் நிறைவடையும் என்பதனை பக்த அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.
ஆலய தர்மகர்த்தா
சி.நவரத்தினம்
(J.11893) (13.17)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.